சர்க்கரைப் பந்தல்

சின்ன அண்ணாமலை

தமிழ்ப் பண்ணை

சர்க்கரைப் பந்தல்

சின்ன அண்ணாமலை

தமிழ்ப் பண்ணை

தியாகராய நகரம் : : சென்னை-17.

முதற் பதிப்பு—ஜனவரி 1964.

ஆசிரியர் சின்ன அண்ணமலையின் நூல்கள்

1.	சீனத்துச் சிங்காரி	(சிறுகதை)	2 00
2.	கண்டறியாதன கண்டேன்	(கட்டுரை)	3 00
3.	சிரிப்புக் கதைகள்	(வேடிக்கை கதைகள்)	1 75
4.	குடும்ப வாழ்வு	(அறிவு நூல்)	2 00
5.	கதைக்குள்ளே கதை	(புராணக்கதை)	1 75
6.	சுவை நானூறு	(கருத்துக்குவியல்)	1 50
7.	ராஜாஜி உவமைகள்	(,,)	1 00
8.	ராஜாஜி முத்துக் குவியல்	(,,)	1 50
9.	ராஜாஜி அருள் மலர்கள்	(,,)	1 50
10.	சர்க்கரைப் பந்தல்	(நாவல்)	2 00
11.	சிரித்த முகம்	(நாவல்)	4 50
12.	தலையெழுத்து	(நாவல்)	4 50

விலை ரூ. 2 - 50

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ், சென்னை-1.

VIKRAM LIBRARY No. 39 Sabbulla Street, T. NAGAR MADRAS 600017.

தமிழ்ப் பேரறிஞர்

கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

முன்னுரை

நாள்தோறும் நம் கண்முன் எத்தனையோ அற்புதமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மனித மனத்தின் குமுறல்களும், பேதல்களும் மலர்ச்சிகளும் உரையாகச் செயலாக உருவெடுக்கின்றன. அவற்றை கண்ணும் கருத்தும் ஊன்றிக் கவனித்தால் நூற்றுக் கணக்கான கதைகளுக்கு வேண்டிய கருத்துக்கள் கிடைக்கும்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் இந்த நாட்டில் நிகழ்ந்த போராட்டத்தைப் போன்றதை உலக சரித்திரமே கண்டதில்லை. மகாத்மா காந்தியவர்கள் தலைமை தாங்கி நடத்திய சாந்தப் போராட்டம் உலகுக்கு ஒரு புதுமை. அதை நாம் காணக் கொடுத்து வைத்தவர்கள். அந்தப் போராட்டத்தில் தனி மனிதராகவும், தொண்டர் கூட்ட மாகவும் செய்த வீரச் செயல்கள் பலப்பல. அவற்றை வைத்துக்கொண்டு எத்தனையோ பெருங்கதைகளை எழுதலாம்.

அன்பர் திரு, சின்ன அண்ணாமலை 1942-ஆம் ஆண்டுப் போராட்டத்தை நிலைக்களமாகக் கொண்டு இந்தச் "சர்க்கரைப் பந்தலை"ப் போட்டிருக்கிறார். அருணகிரி, சிட்டு, சர்க்கரை என்ற மூன்று முக்கியமான பாத்திரங்களை வைத்து இந்தக் கதையைப் பின்னியிருக்கிறார்.

தேச பக்தியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளும், சூழ்ச்சிக் காரர்களுடைய வஞ்சகங்களும், கடைசியில் வீரமும் அன்பும் வெற்றிபெறும் சிறப்பும், கதையின் போக்கிலே தோன்று கின்றன.

அன்பர் திரு, சின்ன அண்ணாமலையின் முயற்சி வெற்றி பெறும் என்று எண்ணுகிறேன். அவரே அந்தக் காலத்துப் போராட்டத்தில் குதித்துச் சிறை வாழ்க்கையை அநுபவித்த வர். தம்முடைய அநுபவங்களால் அறிந்த பலவற்றை இதில் இணைத்திருக்கிறார்.

தாம் பெற்ற அநுபவங்களைக்கொண்டு இன்னும் விரிந்த முறையில் வேறு வேறு கட்டுக் கோப்புள்ள கதைகளைப் படைக்கும் ஆற்றல் இவருக்கு இருப்பதை இந்தக் கதை புலப்படுத்தும்.

இதனை எழுத முன் வந்த அன்பரைப் பாராட்டுகிறேன். இந்தத் துறையில் மேலும் மேலும் சிறந்த படைப்புக்களை அவர் வழங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

என்னுரை

“சர்க்கரைப் பந்தல்” என்ற இந்த நாவலுக்கு தமிழ்ப் பேரறிஞர் உயர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் முன்னுரை வழங்கியதுதான் விசேஷம்.

மற்றபடி இந்த நாவலைப் பற்றி நான் பெரியோர்களுக்கு சொல்ல விரும்புவது ஒரே வாக்கியம்தான்.

“தவறுதல் எளிது; பொறுத்தலோ பெரிது”.

—சின்ன அண்ணாமலை

5-12-63

"சர்க்கரைப் பந்தல்"

—:o:—

பூமி குளிர மழை பெய்து கொண்டிருந்தது. "பலத்த மழையைக் கிழித்துக் கொண்டு ஒரு போலீஸ் வேன்" வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. மலைப் பாதையாகையால் ஆங்காங்கே இருந்த வளைசல் களில் "வேன்" திரும்பும்போது "கிறீச் கிறீச்" என்ற சப்தம் சடசடவென்று பெய்த மழைச் சத்தத்தையும் மீறிக்கொண்டு அப்பகுதியிலுள்ள காட்டுப் பிரதேசத்தையும் கலகலக்கச் செய்தது. அடிக்கடி இடியும் மின்னலும் பயங்கரமாக ஏற் பட்டன. மின்னல் மின்னும்போது ஆங்காங்கே நின்ற குன்றுகள் குளத்தில் நீந்தி விளையாடி விட்டு வரும் கன்னிப்பெண்கள் போல காட்சியளித்தன.

கண்ணுக்கு கண் புரிந்து கொள்ள முடியாத கரிய இருள் சூழ்ந்த மை இருட்டு. அந்த இருட்டை யும் மழையையும் கிழித்துக்கொண்டு சென்ற போலீஸ் "வேன்" சேலம் ஜில்லா ஒகனேகல் மலைச்சரிவு வழி யாக "கண்மண்" தெரியாமல் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

"வேனில்" போலீஸ் இன்ஸ்பெக்டர் வீராசாமி யும், சப்-இன்ஸ்பெக்டர் நடராஜனும், மற்றும் மலபார் ரிசர்வ் போலீஸார் சுமார் இருபது பேர் களும், மற்றும் இருபது கைதிகளும் இருந்தார்கள். கைதிகள் அனைவரும் கதர் அணிந்திருந்ததாலும் காலம் 1942-ஆகஸ்டு மாதம் ஆதலாலும் "கைதிகள்"

தேசவிடுதலைக்காக புரட்சி செய்த தியாகிகள் என்பதும் தெரிந்தது. அவர்கள் அனைவரும் "தேசத்திற்காக மகத்தான தியாகம் செய்கிறோம்" என்ற பெருமிதத்தோடு அமர்ந்திருந்தனர். இருவர் இருவராகப் பிரிந்து ஒருவர் கையை மற்றொருவர் கையுடன் சேர்த்து விலங்கு பூட்டியிருந்தனர் போலீசார். "வேன்" வளைந்து வளைந்து படுவேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

மெதுவான குரலில் ஒரு பாட்டுக் கேட்டது. அதிகாரிகள், போலீஸ் ஜவான்கள், மற்றும் தேச பக்தர்கள் அனைவரும் ஒருமுகமாகத் திரும்பிப் பார்த்தார்கள். தேசபக்தர்களில் ஒருவனான சர்க்கரை பாடிக்கொண்டிருந்தான்.

" இந்தியநாடு என்னுடை நாடு
என்று தினம் தினம் நீ அதைப்பாடு "

"மூடுவாயை" என்று அதிகாரி கர்ஜனை செய்தார். சர்க்கரை அதை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. அவன் மேலும் பாடினான்.

" பாரதநாடு என் பாட்டனின் சொத்து
பட்டயத்துக்கு என்ன பஞ்சாயத்து ?"

உடனே அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது. "கேவலம் ஒரு கைதி" நம் உத்தரவை மீறுவதா? என்று வெகுண்டு எழுந்தார். "பளார்" என்ற ஒரு அறை. அறையை வாங்கிக் கொண்டும் சர்க்கரை பாடினான்.

" சதையை துண்டுதுண்டாக்கினும்
உன் எண்ணம் சாயுமோ ஜீவன் ஓயுமோ ?"

அவ்வளவுதான் "படார் படார்" "சடார் சடார்" என்று பல போலீஸ் ஜவான்கள் சர்க்கரையை

அடித்தார்கள். சங்கன்ராயின் கையுடன் சேர்த்து, விலங்கு பூட்டப்பட்டிருந்தவன் அருணகிரி. அவன் தான் ஆகஸ்டு புரட்சியின் அப்பகுதித் தலைவன். அடிப்பதைத் தடுத்தான் அருணகிரி. அவனுக்கும் அடிகள் "மளார் மளார்" என்று விழுந்தன. அவன் மீது அடி விழுந்ததும் எல்லா தேசபக்தர்களும் வெகுண்டு எழுந்தனர். "வேன்" அல்லோலகல்லோலப்பட்டது. "வேன்" ஓட்டிய டிரைவர் பின் பக்கம் திரும்பிப் பார்த்தான். "மடார்" என்ற ஒரு பெரிய சப்தம் கேட்டது. சிலவினாடிகள் ஒருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை........

அந்த போலீஸ் "வேன்" ஒரு பாறையில் மோதி "கடகட" வென்று மலைச்சரிவில் உருண்டது. மோதிய வேகத்தில் கதவுகள் திறந்து கொண்டன. மூட்டை முடிச்சுக்களைப்போல "வேனில்" இருந்தவர்கள் வெளியே விழுந்தனர்.

டிரைவர் ரத்த வெள்ளத்தில் மிதந்தான்.

சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உணர்ச்சி வசப்பட்ட கைதிகளில் சிலர் ஓட முயன்றனர். ஒருவன் ஓட நினைத்தான். அவனுடன் சேர்த்து விலங்கு பூட்டப்பட்டிருக்கும் மற்றவன் அடிபட்டுக்கிடந்தான். ஜோடியாக ஓடிய சிலரை போலீசார் பிடித்துக் கொண்டனர்.

நிலைமையைச் சமாளித்துக்கொண்டு அதிகாரிகள் "யாரும் ஓடாதீர்கள், ஓடினல் உயிருக்கு ஆபத்து. சுட்டு விடுவோம்; இடத்தை விட்டு நகராதீர்கள்; ஒருவரும் அசையாதீர்கள்" என்று மிரட்டல் கூச்சல் போட்டார்கள். ஆனலும் ஓடுபவர்கள் ஓட, விரட்டுபவர்கள் விரட்ட, வேகம் பரபரப்பை உண்டாக்கியது.

"ஷூட்" என்று அலறினார் அதிகாரி.

"டுமீல் டுமீல்" என்று துப்பாக்கிக் குண்டுகள் வானத்தையே பிளந்துவிடுவதுபோல் "விர் விர்" ரென்று பாய்ந்தன. போலீசார் இருட்டில் ஓடிய கைதிகள் சிலரைச் சுட்டனர். சிலரைத் துரத்திப் பிடித்தனர். பிடித்துக்கொண்டு வந்தவர்களையும் விழுந்துகிடந்தவர்களையும் வரிசையில் நிறுத்தினர்.

பெரிய அதிகாரியின் கையிலிருந்த துப்பாக்கி முனை கைதிகளின் மார்பின் ரத்தத்தை ருசிபார்க்க ஏங்கிக்கொண்டிருந்தது. "உம், சீக்கிரம் எண்ணுங்கள்" என்று உத்தரவிட்டார் அவர்.

"ஒன்று......இரண்டு......மூன்று.......பதினைந்து பதினாறு........பதினெட்டு......." என்று எண்ணினான் ஒரு ஜவான்.

"இன்னும் இருவர் எங்கே?" என்று கேட்ட அதிகாரியின் முகம் சிவந்தது. மீசை துடித்தது. எல்லோரும் பரபரப்படைந்தனர். நாலாபக்கமும் ஜவான்கள் தேடினர். அதிகாரிகளும் அலசிப்பார்த்தார்கள். எங்கும் கல்லும் முள்ளும் பாறையும் தட்டுப்பட்டனவே ஒழிய அந்த இருவரையும் காணவில்லை.

குறைபவர்கள் யார் என்று கணக்குப் பார்த்தார்கள். அருணகிரியையும், சர்க்கரையையும் காணவில்லை.

"அடடா! அருணகிரிதானே முக்கியமான கைதி. முதல் எதிரி. அவனைக்கோட்டை விட்டு விட்டோமே! என்ன செய்வது?" என்று இன்ஸ்பெக்டருக்கு இருப்புக் கொள்ளவில்லை. நாடியும் நரம்பும் துடித்தன. தான் விழுந்து அடிபட்டது கூட மறந்து போயிற்று. மேல் அதிகாரிகளுக்கு என்ன பதில் சொல்லுவது

என்ற கேள்விக்கூறி அவர் நெஞ்சைப் பிளந்தது. பெருமூச்சு விட்டுக்கொண்டார். சுட்டெரித்து விடுவது போல் அந்தக் கைதிகளைப் பயங்கரமாகப் பார்த்தார். "எது நடந்தாலும் ஏற்கத்தயார்!" என்பது போல கைதிகள் சலனமற்றிருந்தனர்.

சில ஜவான்களை அங்கேயே தேடும்படியும், விடிந்தபிறகும் தேடும்படியும் கட்டளை பிறப்பித்து விட்டு மற்ற கைதிகளை ஒழுங்கு படுத்தி நடத்திச் சென்றார் இன்ஸ்பெக்டர் வீராசாமி. அவர் நடையில் ஒரு இன்ஸ்பெக்டருக்குரிய வீராப்பு இல்லாமல் வீழ்ச்சியிருந்தது.

2

அடர்ந்த காட்டின் நடுவே வளைவாகச் சென்ற ஒற்றையடிப்பாதையில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நொண்டி நொண்டிக்கொண்டு ஓடினான் அருணகிரி. அடித்துப்போட்ட ஆட்டுக் குட்டிபோல அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த சர்க்கரையின் நெஞ்சிலிருந்து ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. அந்த ரத்தத்தின் சுவையை அவன் முதுகின் ஸ்பரிசம் உணர்ந்திருக்கவேண்டும். அவன் உடலில் ஒவ்வொரு அணுவும் துடித்தது. அவனையுமறியாமல் கண்களிலிருந்து "பொலபொல"வெனக் கண்ணீர் கொட்டியது. "சர்க்கரை பிழைப்பானா?" என்ற "கேள்விக்குண்டு" அவன் உடலைத் துளைத்தது. "போலீசார் தங்களைத்துரத்தி வருவார்களோ?" என்ற எண்ணத்தால் மூச்சைப்பிடித்துக்கொண்டு காலில் பாய்ந்திருந்த குண்டினால் ஓடவும் முடியாத நிலையில் தத்தளித்துத் தடுமாறி நடந்து கொண்டேயிருந்தான் அந்தத் தலைவன்.

உடல் சோர்ந்து, நடைமெலிந்து, நெகிழ்ந்த நெஞ்சுடன் நீண்ட தூரம் வந்து விட்டான். ஆனால், உள்ளம் மட்டும் சோரவில்லை.

இருளின் நடுவிலே, தெரியாத வழியிலே, எதுவும் புரியாதபடி போய்க் கொண்டிருந்தான். "உய்" என்ற ஒருவகை ஊதல் காற்றின் சப்தம்கூட அப்போது கேட்க பயங்கரமாக இருந்தது. அருணகிரி இயற்கையிலேயே தைரியசாலி. அதனால் எதையும் லட்சியம் செய்யாமல் நடந்தான்.

போலீசாரின் பார்வையிலிருந்து வெகுதூரம் வந்துவிட்டோம் என்ற நினைவு அவனுக்கு வந்தது. ஏனென்றால் அவன் கண்களிலிருந்து அடர்ந்த மரங்களும், முட்புதர்களும் மறைந்து விட்டன. ஏதோ ஒரு புதுமையான சோலைக்குள் நுழைவதுபோல் உணர்ச்சி ஏற்பட்டது. அது சோலையா? என்று உணரப் போதிய ஒளி இல்லை. வேறு வழி இல்லாமல் நடந்துகொண்டிருந்தான். எங்கேயாவது குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். மழை "பிசுபிசு"வென்று தூரிக்கொண்டிருந்ததே தவிர "பிடி" தண்ணீர் எங்கும் தங்கவில்லை. அந்த "பிசுபிசு" சாரலில் அருணகிரியும் சர்க்கரையும் நன்றாக "குளிர" நனைந்திருந்தார்கள். ஆனால் அருணகிரிக்கு தொண்டை ஒரே வறட்சியாக இருந்தது. கால்கள் தடுமாறின. கண்கள் சுற்றின. மனம் வலுவாக இருந்தாலும் உடலில் வலு இல்லை. "பொத்"தென்று சர்க்கரையையும் கீழே போட்டுத் தானும் விழுந்தான். மயக்கமாக இருந்ததே ஒழிய தூக்கம் வரவில்லை. கொஞ்ச நேரம் கண்களை மூடியவாறு படுத்திருந்தான்.

இரண்டு மூன்று தினங்களாக ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த போராட்டம்

அதன் விளைவாக நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் மனதில் ஒன்றன் பின் ஒன்ருக சினிமா காட்சி போல் ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் "கொடுமையான" நிலையிலும் கூட அவனுக்குச் சிரிப்பு வந்தது. "போலீசார் ஏமாந்து விட்டார்கள், மீண்டும் போராட்டம் நடத்த வேண்டும். அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும்" என்று பல திட்டங்கள் மனதில் ஓடின. அப்படியே கண்ணயர்ந்து தூங்கி விட்டான்.

.3

விடிந்தது. உதயசூரியன் அவனுக்குப் புத்துயிர் ஊட்டினன். நினைவு வந்தது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அருகில் ஒரு இடிந்த கோட்டையும், அதன் அருகில் ஒரு பெரிய ஆலமரமும் தென்பட்டது. அந்த மரத்தடியில் ஒரு பெரிய சூலாயுதம் தெரிந்தது. சூலாயுதத்தைப் பார்த்ததும் அருணகிரி மனதில் சுறுசுறுப்புண்டா யிற்று. கண்டிப்பாக அருகில் ஏதாவது குளம் குட்டை இருக்கும் என நினைத்தான். ஆகவே எழுந்திருக்க முயன்ருன். கால்வலி அதிகமாக இருந்தது. ரணத்தி லிருந்து வெளிப்பட்ட ரத்தம் திட்டுத் திட்டாய் காலைச் சுற்றிலும் பரவிக் காய்ந்திருந்தது. சர்க்கரையின் உடலிலிருந்து வெளிப்பட்ட ரத்தம் தன் வேஷ்டி யெல்லாம் திட்டுத் திட்டாகப் பரவி இருந்தது. நிறைய ரத்தம் வெளிப்பட்டு விட்டதால் சர்க்கரை ரொம்ப பலவீனமாகி விட்டான். பேச்சு மூச்சு இல்லை. மூச்சு வருகிறதா இல்லையா என்று கண்டு பிடிக்க முடியாத நிலையில் இலேசாக வந்து கொண்டிருந்தது.

இருள் போய் வெளிச்சம் வந்து விட்டால் மனிதனுக்கு ஒரு புது பலம் இயற்கையாக வரு

மல்லவா? அருணகிரியும் தன் முழுபலத்தையும் சேர்த்து சர்க்கரையைத் தூக்கிக்கொண்டு சூலாயுதத்தின் அருகில் சென்றான். என்ன ஆச்சரியம். சூலாயுதத்தின் அருகிலிருந்த கோட்டைக்குப் பின்புறத்தில் ஒரு சிறு ஓடையில் தண்ணீர் "சலசல" வென்ற சப்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது. கஷ்டப்பட்டு அங்கு சென்றான். சர்க்கரையைக் கீழே படுக்க வைத்து தானும் படுத்துக்கொண்டே முடிந்தமட்டும் தண்ணீரைக் குடித்தான். ஒரு கையினாலேயே தண்ணீரை "அள்ளி அள்ளி" சர்க்கரையின் வாயில் ஊற்றினான். பின்னர் சர்க்கரை நெஞ்சில் பட்டிருந்த குண்டுக் காயத்தைத் தன் துணியில் தண்ணீரை நனைத்துத் துடைத்தான். முகத்தில் தண்ணீர் பட்டதும் சர்க்கரை இலேசாக கண் விழித்துப் பார்த்தான். ஏதோ முணுமுணுத்தான். அதைப்பார்த்ததும் "அப்பாடா சர்க்கரை பிழைத்து விடுவான்" என்ற நம்பிக்கை அவனுக்குண்டாயிற்று.

சர்க்கரை மெதுவாகக் கண்களைத் திறந்தான். அருணகிரியைக் கண்டதும் அவன் கடைக்கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் காதுக்குள் ஓடியது. அவன் உதடுகள் துடித்தன. உணர்ச்சியால் தவித்தான். பேசமுடியால் பொறுமினான். கொஞ்சங் கொஞ்சமாக எல்லாவற்றையும் யூகித்துக் கொண்டான். உடம்பில் சத்தில்லை. அருணகிரி அவனுடன் பேச முயற்சித்தான். ஆனால் சர்க்கரை கண்களை மூடியவாறு மௌனமாக இருந்தான்.

ஒன்றிரண்டு மாம்பிஞ்சுகள் அரிணகிரி தலைமேல் விழுந்தன. அதை எடுத்துக்கடித்தான். பசி—அகோரப்பசி அவனை வாட்டியது. "இன்னும் சில மாங்காய் விழாதா?" என்று மேலே அண்ணாந்து பார்த்தான்.

பூவும் பிஞ்சுமாக இருந்த அந்த மரத்தில் கூடிக் குலவும் பறவைகள் சில, பிரிந்து பறக்கும் பறவைகள் சில, கூக்குரலிட்டவாறு குசலம் விசாரித்துக் கொள்ளும் காட்சிகள் அவனுக்கு விசித்திரமாக இருந்தன.

முந்தியநாள் ஆர்ப்பாட்டம், கலவரம், துப்பாக்கிச் சப்தம் இதில் யார் செத்தார்களோ யார் சித்திர வதைக்காளானார்களோ........? இப்படி சில காட்சிகளும் தோன்றித்தோன்றி அவன் எண்ணத்தை பிசைந்து எடுத்தன.

இத்தனை பயங்கரமான சூழ்நிலையில் தனக்கு எப்படி நிம்மதியாக தூக்கம் வந்தது என்று நினைத்து தனக்குத்தானே வியந்து கொண்டான்.

பிரஞ்சுநாட்டுப் புரட்சியின்போது அஞ்சா நெஞ்சம் படைத்த இரண்டு வீரர்களின் சரித்திரம் அவன் நினைவுக்கு வந்தது. அவர்களில் ஒருவன் தனக்கு மரண தண்டனை என்பதை அறிந்திருந்தும், தூக்குமேடை ஏறுவதற்கு உள்ள நேரத்திற்கு முதல் விநாடிவரை நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தானும். மற்றொருவன் தன் கற்பனையை ஓடவிட்டு "வானம்பாடி" என்ற தலைப்பில் ஓர் சிறந்த கவிதையை எழுதினனும்.

இவ்வளவு உறுதிவாய்ந்த வீரர்களால்தான் ஒரு நாடு உயர்வு பெறுகிறது. புரட்சியின் போது மரணத்திற்கு அஞ்சாதவர்கள்தான் "சரித்திர புருஷர்" களாக முடியும்.

தானும் "விடுதலைக்குப் பாடுபடும் வீரன்" என்ற உணர்வு அவனுக்குப் பெருமையை உண்டாக்கி, இலேசாகப் புன்னகை செய்ய வைத்தது.

கையில் பூட்டியிருக்கும் விலங்கை உடைத்தால் தான் இனி எதுவும் செய்ய முடியும் என்று முடிவு செய்தான். பக்கத்தில் கிடந்த கற்களை எடுத்து விலங்கை உடைக்க முயற்சித்தான். கற்கள்தான் உடைந்தனவே ஒழிய விலங்கு ஒடியவில்லை. என்ன செய்யலாம் என்ற யோசனையில் ஆழ்ந்தான். எதிரில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் சூலாயுதத்தைப் பார்த்தான். சூலாயுதம் ஒரு கல்லில் ஊன்றப்பட்டு நின்றிருந்தது. அந்தக் கல்லின் அடியில் சில எழுத்துக்கள் தென்பட்டன. காலைச்சூரியன் ஒளி அந்த எழுத்தில் பட்டுக்கொண்டிருந்தது. உற்றுப் பார்த்தான் அருணகிரி. "தலைவெட்டி முனியப்பன்" என்று எழுதியிருந்தது. அதைப்படித்து முடித்ததும், அந்தப் பெயரின் விசித்திரத்தை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று புரியாமல் திகைத்துக்கொண்டிருக்கும்போது தூரத்தில் ஏதோ காலடி ஓசை கேட்டது. ஒருவேளை போலீசார் "மோப்பம் பிடித்து வந்து விட்டார்களோ" என்று நினைத்தான். திடீரென அவனுக்கு "அசுரபலம்" வந்தது. சர்க்கரையையும் தூக்கிக்கொண்டு பக்கத்திலிருந்த அடர்ந்த புதருக்குள் யாருக்கும் தெரியாமல் மறைந்து கொண்டான்.

காலடி ஓசை நெருங்க நெருங்க அவன் மனம் "பக் பக்" என்று அடித்துக் கொண்டது. காலடி ஓசையோடு "ஜல்ஜல்" என்ற சலங்கை ஒலியும் கூடவே கேட்டது. சலங்கை ஒலி கேட்டதும் அருணகிரிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அவன் காதுகளை அவனாலேயே நம்ப முடியவில்லை. ஒருவேளை முனியப்பன்தான் சலங்கையைக் கட்டிக் கொண்டு வருகிறதோ என்று "திகில்" அடைந்தான். புதரை நீக்கிக்கொண்டு மிக ஆவலாக உற்று நோக்கினான்.

கால்களில் சலங்கை கொஞ்ச, கைவளைதான் குலுங்க, வேல்விழி மங்கை ஒருத்தி துடிஇடையை ஒடித்து ஒடித்து ஒயிலாக நடந்து வந்தது தெரிந்தது. தலையிலே ஒரு பெரிய கூடை இருந்தது. கிராமத்து ஜாடை அவள் உடையில் தெரிந்தது. நெருங்கி வந்தாள் அந்தப்பேடை. ஆளைக்கொல்லும் அம்பு விழிகள், பாலைப்பொழியும் பருவ இதழ்கள். அவள் சேலைக்கட்டும், சிங்காரப் பொட்டும் அழகை அள்ளிக் கொட்டும் அந்தச் சோலைக்குமரி ஓடையின் அருகே வந்தாள்.

அருணகிரி தலையைப் புதருக்குள் இழுத்துக் கொண்டான். பொம்மைக் கூடையை இறக்கி வைத் தாள் அந்தப்பூவை.

“ தலைவெட்டி முனியப்பா,
தரித்திரத்தைப் போக்கப்பா !”

என்று வேண்டிக்கொண்டு ஒயிலாகத் திரும்பி, மயிலாக நடந்தாள். பக்கத்தில் இருந்த ஓடைக்குச் சென்றாள்.

அவளையே கவனித்துக்கொண்டிருந்த அருண கிரியின் தலையில் “டொக்” கென்று ஒரு மாங்காய் விழுந்தது. தன்னிலைக்கு வந்தான். தன் எதிரில் இருக்கும் தயிர்சாத வாசனை அவன் மூக்கைத் துளைத்தது. பசிவந்திடப் பத்தும் பறந்து போகு மல்லவா ?

தனக்கு உரிமை இல்லாத அந்தப் பொட்ட லத்தை எடுத்துப் பிரித்தான். ஆகா! அந்த நேரத் திற்கு அது தேவாமிர்தம்தான்.

சர்க்கரைக்கு கொஞ்சம் ஊட்டினான். தானும் சாப்பிட்டுக்கொண்டான். மாங்காயை கொஞ்சம்

கடித்துக் கொண்டான். சர்க்கரைக்கும் கொடுத்தான். மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும் அல்லவா? ஆகவே சிறிது நேரத்தில் பொட்டலம் காலியாயிற்று. சர்க்கரையும் கொஞ்சம் தெம்படைந்தான். அருணகிரியின் சோர்வுகள் நீங்கின. சர்க்கரை சைகையால் 'சோறு ஏது?' என்றான். அருணகிரியும் சைகையால் அவனைப்பேசாமல் இருக்கும் படி சொல்லி சோத்துக்குரிய சொகுசுக்காரியின் வரவை எதிர் நோக்கி இருந்தான்.

"ஜல்ஜல்" என்ற சலங்கை ஒலியுடன் வந்தாள் ஒய்யாரி. கூடையை நோக்கினாள் அந்தப்பேடைக் குயில். சோற்றுப்பொட்டலத்தைக் காணோம். சுற்று முற்றும்பார்த்தாள். பக்கத்திலிருந்த புதரிலிருந்து காற்றில் அவள் பொட்டலம் கட்டிய பேப்பர் வெளி வந்து அவளை எள்ளி நகையாடிவிட்டு பறந்தோடிப் போயிற்று. அவளுக்கு அபாரக்கோபம் வந்து அங்கு கிடந்த பனைமட்டையை எடுத்து கண்மூடிக் கண் திறக்குமுன் ஓடி "பேப்பர்" வந்த புதரின் மேல் போட்டாள் ஒரு போடு. அந்த அடி அருணகிரியின் முடியில் விழுந்தது. அடுத்த அடிக்கு அந்த ஆரணங்கு கையை ஓங்கவே, அருணகிரி "அடிக்காதே அம்மா அடிக்காதே" என்று கத்தி அலறினான்.

நாய் நரியாக இருக்கும் என்று நினைத்து அடித்த அந்த நாரீமணி மனிதன் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள், திகைத்து நின்றாள். கொஞ்சம் வெளியே தலையை நீட்டி அருணகிரி அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். இடுப்பில் கைகளை வெடுக்கென ஊன்றிக்கொண்டு அந்த எழில் நங்கை அவனை முறைத்துப்பார்த்து, "ஏய்யா நீ ஒரு ஆம்பிளைதானா?

திருடித் திங்க வெக்கமாயில்லே? அடிக்காதேன்னு கத்தினியே அதுக்கும் வெக்கமாயில்லே?"

அருண.—வெட்கமாத்தான் இருந்திச்சு.

பெண்—ஏன், சோத்தை தின்னுட்டமேன்னு? இல்லே ஒரு பொம்பிளேகிட்டே அடி வாங்கிப்புட்டோமின்னு?

அருண.—இரண்டும்தான்.

இந்தப் பதிலைக் கேட்டதும் அந்தப் பெண் சிரித்து விட்டாள். கோபம் பறந்தது. "பாவம்" சுரந்தது. சிரித்துக்கொண்டே கேட்டாள், "ஏய்யா பொம்பிளே ஆம்பிளையை அடிச்சா பாவமில்லையா? நான் கையை ஓங்கக்குள்ளேயே எழுந்து ஓடியிருக்கப் படாது? நொண்டியா, நொடமா?"

அருண.—நான் நொண்டியுமில்லே நொடமுமில்லே. ஆனா இப்ப ஓடறாப்போல இல்லே—என்று சொல்லி தன் காலை புதருக்கு வெளியே நீட்டிக் காட்டினன்.

காயத்தைப்பார்த்த அந்த யுவதி திடுக்கிட்டு "இது நான் அடிச்சதிலே ஏற்பட்ட காயமா?" என்று பரபரப்புடன் கேட்டாள். அதற்கு அருணகிரி "இல்லே இது தேசபக்திக்கு கிடைத்த பரிசு" என்றான்.

"எனக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாது. நீங்க யாராயிருந்தாலும் சரி. புதரைவிட்டு வெளியே வாங்க. கொஞ்சம் பச்சிலே வைச்சு கட்டுறேன்" என்று பரிவோடு சொன்னள்.

"என்னைவிடப் பெரிய பரிசு வாங்கிய என் நண்பனை முதலில் காப்பாற்று. அப்புறம் என்னைக்

காப்பாற்றலாம்" என்று சொல்லி சர்க்கரையைத் தூக்கிக்கொண்டு புதரிலிருந்து வெளியே வந்தான். சர்க்கரையைப்பார்த்ததும் அந்த யுவதி பதறி "அண்ணு" என்று அலறினுள்.

அருணகிரிக்கு ஒன்றும் புரியவில்லை.

"அண்ணு, அண்ணு, என்னிடம் பேசமாட்டாயா? வெள்ளக்காரனேடை சண்டைக்குப் போகாதே, சுட்டுப்புடுவான்னு அம்மா சொன்னுங்களே! கேட்காமெ போனியே, உன்னை இந்த நிலைமையிலே பார்க்கவா நான் ஒன் தங்கச்சியா பொறந்தேன்? அண்ணு எங்கே என்னைப் பாரு. ஒன் தங்கச்சி வந்திருக்கேன் பாரண்ணு" என்று அழுது புலம்பினுள்.

அருணகிரி திக்பிரமை பிடித்தவனுனுன். சர்க்கரை இலேசாக கண்விழித்துத் தன் தங்கச்சியைப் பார்த்து அழக்கூடாதென்று சைகை செய்தான். அருணகிரியும் அவளைச் சமாதானப் படுத்தினுன். அவள் பரபரப்புடன் பக்கத்திலிருந்த சில செடிகளில் கொஞ்சம் பச்சிலை பறித்துவந்து தன் அண்ணன் நெஞ்சில் பட்டிருந்த குண்டுக்காயத்தில் வைத்துக்கட்டிக்கொண்டே, "பாவிப்பயல் யாரோ அருணகிரியாம். அவன் பேச்சைக்கேட்டு மயங்கித் தான் எங்க அண்ணனுக்கு இந்தக்கதி வந்தது. அவன் தலையிலே இடிவிழ" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது அவள் வாயை சுதந்திரமாக இருந்த தன் ஒரு கையினுல் மூடினுன் சர்க்கரை. "நீ விடண்ணு. அவன் என் கையிலே கெடச்சான்னு காலை ஒடிச்சி அடுப்பெரிச்சுப்பிடுவேன் தெரியுமா—எனக்கு என்ன ஆத்திரம் வருது தெரியுமா? சும்மா கெடந்த ஒன்னை இந்தக்கதிக்கு ஆளாக்கிட்டானே"

என்று சொல்லி அருணகிரியைப் பார்த்து "ஏய்யா நீயும் அந்த அருணகிரியாலேதானே இந்தக்கதிக்கு வந்தே? காலைக்காட்டு உனக்குப் பச்சிலை வைச்சுக் கட்டுறேன்—என்ன செய்யறது—அவன்பாடு சொல்லிபுட்டு ஓடிப்போயிட்டான். இப்போ கஷ்டப்படுகிறது யாரு? "உம்" காலைக் காட்டய்யா" என்ருள். அருணகிரி மௌனமாக இருந்தான். "யோவ், ஒனக்கு காது செவிடா, காலைக்காட்டய்யா" என்று அதிகாரம் செய்தாள். "வேண்டாம்மா, ஒடிக்கப் போகிற காலுக்கு வைத்தியம் எதுக்கு? காயத்தோடே ஒடித்துவிடு" என்ருன் அருணகிரி.

"அந்த அருணகிரி காலை ஒடிப்பேன்னு சொன்னு நீ ஏய்யா கோவிச்சுக்கிறே? நீ அருணகிரிக்கு மாமனு மச்சானு? நீ யாரு, ஒன் பேரு என்ன?"—என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினுள் அந்த ஆரணங்கு.

"நான்தான் அந்தப்பாவி அருணகிரி. இந்தா கால், ஒடித்துவிடு" என்று அருணகிரி காலை நீட்டியதும் அந்த யுவதி தட்டுத்தடுமாறி விட்டாள். அவளுக்கு உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. பயம் உளரவைத்தது. என்ன செய்வது என்று தெரியாமல் திணறினுள்.

சர்க்கரை திக்கித் திக்கிப் பேசினுன். "தங்கச்சி சிட்டு, இவர்தான் அருணகிரி. உத்தமமான தியாகி. இவரைப்பற்றிப் பலமுறை உனக்குச் சொல்லியிருக்கிறேன். நாங்கள் இரண்டுபேரும் கொஞ்சநாள் இப்பக்கத்திலே மறைந்து இருக்க வேண்டும். அதற்கு நீதான் உதவியாக இருக்கவேண்டும். தினமும் எங்களுக்கு சாப்பாடு கொண்டு வரவேண்டும். யாரிடமும் எங்களைப்பற்றி பேசக்கூடாது. போலீசார் சந்தே

கப்படும்படி நடந்துகொள்ளக் கூடாது." என்று சொல்லிவிட்டு எழுந்து உட்கார்ந்தான். பின்னர் மூவருமாகச் சேர்ந்து முயற்சி செய்து விலங்கை உடைத்தார்கள். விடுபட்ட உணர்ச்சி உவகை ஊட்டியது. அருணகிரியைச் சிட்டு ஓரக் கண்ணால் பார்த்தாள். தன்னை மன்னிக்கும்படி பார்வையிலே உணர்த்தினாள். அவள் கண்கள் கலங்கிச் சிவந்து போயிருந்தது.

சர்க்கரை பேசினான்—"சிட்டு, என் மார்பில் பலமான காயமாகி விட்டது. ரத்தம் ரொம்ப வடிந்து விட்டது. நான் பிழைத்து விடவேண்டுமென்கின்ற ஆசையில்லாமல் இல்லை. ஆனாலும் இறந்தாலும் அதற்காக மகிழ்ச்சியடைவேன். தேசத்திற்காக உயிர்விட்ட திலக்மகராஜ், பகவத்ஸிங், திருப்பூர் குமரன், லாலா லஜபதிராய் வரிசையில் நானும் சேருவேனல்லவா? ஆகவே நீயும் அம்மாவும் பெருமையடையலாம்."

சிட்டு சர்க்கரையின் வாயை மூடினாள். அருணகிரியின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தது. "சர்க்கரை அப்படியெல்லாம் சொல்லாதே. இறைவனின் திருவிளையாடல் இவ்வளவு விநோதமாக இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. உனக்குப் பதிலாக எனக்கு இந்த நிலை ஏற்பட்டு நான் இறக்கும்படி நேர்ந்தாலும் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆமாம் சர்க்கரை, உனக்குப் பதிலாக இந்த நிலை எனக்கு ஏற்பட்டிருக்கக் கூடாதா என்று வருந்துகிறேன்" என்றான் வேதனையுடன்.

"தவறு. நான் ஒருத்தன் சாகிறதால் இந்த நாட்டுக்கு எந்தக் கேடும் வந்துவிடாது. ஆனா....... நீங்கள் செத்தால் இந்த நாடு என்னைப்போன்ற

எத்தனையோ விடுதலை வீரர்களை உருவாக்க முடியாமல் அடிமையிலேயே ஆழ்ந்துவிடும். உங்கள் ஒருவரால் இந்த நாட்டுக்குப் பல வீரர்கள் கிடைப்பார்கள்" என்றான் சர்க்கரை.

"இல்லை சர்க்கரை, அந்த அவசியம் இப்பொழுது இல்லை. காந்திஜி விதைத்துவிட்ட விதை இன்று நாடெங்கும் முளைத்து விட்டது. நான் இறந்தால் உற்றார் உறவினர் எவரும் வருந்த மாட்டார்கள். பந்தபாசத்தோடு என் மரணத்தைக் கண்டு துடிப்பதற்கு ஒருவரும் இல்லை. ஆம் சர்க்கரை, சாவும் பகையும் இல்லை. கண்ணீர் வடித்துக் கதறியழுவதற்கு எவருமில்லை. ஆனால் நீ....உனக்காகக் கண்ணீர் வடித்துக் கதறியழுவதற்கு அன்னை இருக்கிறாள், அன்புத்தங்கை இருக்கிறாள்."

"தேசத் தொண்டனுக்கும் பந்தபாசத்துக்கும் உறவில்லை என்று நீங்கள்தானே சொன்னீர்கள்" என்று திக்கித் திணறிக்கொண்டே மார்பைப் பிடித்துக் கொண்டான். வலி தாங்க முடியாமல் பல்லை இறுகக் கடித்தான். "தங்கச்சி இனி நான் பிழைக்கமாட்டேன்" என்றான் கண்கலங்க.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க பொளைக்க வேணும். ஒங்களை நாங்க சாகவிட மாட்டோம்" என்று அருணகிரியையும் சேர்த்துச் சொல்லிவிட்டு அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள் சிட்டு.

"ஆமா சர்க்கரை நீ தைரியமாக இரு. நாங்கள் எப்பாடுபட்டாவது உன் காயத்தை ஆற்றுவோம்" என்றான் அருணகிரி.

"உங்கள் ஆர்வத்திற்கு நன்றி. ஆனால் நான் பிழைக்கமாட்டேன் அருணகிரி. என் தங்கை சிட்டு

வுக்கு யாரும் ஆதரவு கிடையாது. நாம் இருவரும் இருந்த நெருங்கிய நட்பின் பேராலும், நமது தேச பக்தியின் பேராலும் தங்களைக் கேட்டுக் கொள்ளு கிறேன். என் தங்கை சிட்டுவை நீங்களே கல்யாணம் செய்துகொண்டு அவளுக்கு வாழ்வளிக்கவேண்டும். சிட்டு, சாகப்போகும் உன் அண்ணனின் வார்த் தையை தெய்வ வாக்காக நினைத்து என் எண்ணத்தை நிறைவேற்று. நான் இறந்தால் அதை இப்போது அம்மாவிடம் கூறிவிடாதே. அதனால் போலீசுக்கு தெரிந்துவிடும். பிறகு தேடுவார்கள். அருணகிரிக்கு ஆபத்து ஏற்படும். கொஞ்சகாலம் சென்றால் நாட்டுக் குச் சுதந்திரம் வந்து விடும். அப்போது சொல்லிக் கொள்ளலாம்" என்று சொல்லி இருவரையும் அன்போடு அணைத்து முனியப்பன் முன் நிறுத்தி கைகளை சேர்த்து வைத்து "முனியப்பா, என் தங்கையை அருணகிரிக்குத் திருமணம் செய்து வைக் கிறேன், உன் சாட்சியாக. ஆசீர்வாதம் பண்ணப்பா" என்று சொன்னதும் முனியப்பன் சன்னதிக்கு உயர இருந்த மரக்கிளைகளிலிருந்து விதவிதமான பூக்கள் உதிர்ந்தன. பட்சிகள் கீதங்கள் இசைத்தன. திடீ ரென்று வானம் முழக்கம் செய்தது. இடி இடித்தது. வானைக் கிழித்துக்கொண்டு மின்னல் பளீர் பளீர் என்று மின்னியது. வானம் இருண்டு வந்தது. "சோ" வென்று மழை அடித்தது. பூமி அதிரும்படி ஒரு பெரிய இடி இடித்தது. திடீரென்று அடியற்ற மரம் போல் சாய்ந்தான் சர்க்கரை. அருணகிரியும் சிட்டு வும் அவனைத்தூக்கினார்கள். பக்கத்திலிருந்த பாழ டைந்த கோட்டைக்குள் கொண்டு போனார்கள். எங் கும் தண்ணீர் ஒழுகிக்கொண்டிருந்தது. ஒரு இடத் தில் கிடத்தினார்கள். "சர்க்கரை, சர்க்கரை" என் றான் அருணகிரி. "அண்ணா, அண்ணா" என்றாள் சிட்டு. ஆனால், சர்க்கரையோ ஆண்டாண்டுதோறும்

அழுது புரண்டாலும் மீண்டும் வரா்த இடத்திற்குப் போய்விட்டான்.

இருவர் கண்ணீரும் மழைத்தண்ணீரில் கலந்து கரைந்தது. அத்துடன் சர்க்கரையின் நெஞ்சிலிருந்து வெளிப்பட்ட ரத்தமும் கலந்து "திரிவேணி"யாகி பெருமழையில் சங்கமமாயிற்று.

"ஓ" வென்று கதறினாள் சிட்டு. உன்மத்தம் பிடித்தவனாய் நின்றான் அருணகிரி. வெகுநேரம் கழித்து இருவரும் தன்னிலைக்கு வந்தனர். பின்னர் அருணகிரி தன்னைத்தானே தேற்றிக் கொண்டு சொன்னான்.

"சிட்டு! வீரம் இறப்பதில்லை. வீரர்கள் சாவதில்லை. ஆம், உன் அண்ணனைப்போன்ற வீரர்கள் என்றும் எல்லோருடைய உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். உனக்குத் தெரியாது சிட்டு சர்க்கரையின் வீரச்செயல்கள் எல்லாம். அவன் செய்த செயற்கரிய செயல்கள் எல்லாம் இன்னும் என் கண்முன்னே அப்படியே இருக்கின்றன.

அன்று "வெள்ளையனே வெளியேறு" என்ற விடுதலை முழக்கத்தை முழக்கிய நாள். எனக்கு இன்னும் அப்படியே அந்த நிகழ்ச்சி நெஞ்சில் நிறைந்திருக்கிறது. அன்றையப் பொதுக்கூட்டம் என் தலைமையில்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உன் அண்ணன் சர்க்கரை தூங்கிக்கிடந்த மக்களின் உள்ளத்தை தன் வீர உரையால் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான்.

"படைக் களம் ஏந்தி, படைபல நடத்தி, தடைபல வென்றவர்கள் தொடைநடுங்கிகளாக வாழ்வதா? என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருந்தான்.

"இல்லை, "தரணி எங்கும் பரணி பாடி வெற்றிக் கொடி நாட்டிவந்த வீர பரம்பரையினர் நாங்கள்" என்று மக்கள் கொதித்தெழுந்தனர். இச்சமயம்தான் அதிகாரி ஒருவன் மேடைக்கு வந்து அப்போது பேசிக்கொண்டிருந்த சர்க்கரையிடம் தடை உத்தி ரவை நீட்டினன்.

"அதை வாங்கிப்படித்துப் பார்த்த சர்க்கரை யின் உணர்ச்சிகள் கொதிப்பேறின. "பார்த்தீரா நண்பர்களே! வெள்ளையரின் விபரீதச் சட்டத்தை. **144** தடை உத்தரவாம். நான் வாய் திறந்து பேசக் கூடாதாம். இவர்கள் பாட்டன்வீட்டு நாடா இது. என் வாய்க்கு இவர்கள் பூட்டுப்போட?" என்று கேட்ட வன் அவர்கள் கொடுத்த தடை உத்தரவை அந்த அதிகாரியின் முன்னே சுக்கல் சுக்கலாகக் கிழித்துத் தன் காலின்கீழ் போட்டு மிதித்தான். "சொந்த நாட்டானிடம் சரண்டிப் பிழைக்க வந்த அன்னிய நாட்டானின் உத்தரவு என் கால் தூசுக்குச் சமானம்!" என்முன்.

"அதிகாரி தன் ஆணவ அதிகாரத்தை அப் போது காட்டி இருப்பான். அவனுடைய காட்டு தர்பார் தலைவிரித்தாடி இருக்கும். கோபக்கனல் பறக்கும் மக்களின் கண்களைக் கண்டுவிட்ட அவன் மௌனியானன். மக்கள் சக்திக்கு முன் மகேசனின் கட்டளையே தூள் தூளாகும் என்பதைத் தெரிந்த நரி யின் குணம் கொண்ட இனத்தவனல்லவா அவன்? பேசாமல் திரும்பி நடந்து விட்டான்.

"நள்ளிரவு எங்கும் சுடுகாட்டு அமைதி நிலவி யது. நாங்களும் கண்டனக் கூட்டத்தையும் தடை சட்டத்தையும் உடைத்தெறிந்து விட்டு, வெற்றிகர மாக நடத்தி முடித்து விட்ட மகிழ்ச்சியில் மாவட்டக்

கமிட்டிக் காரியாலயத்தில் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தோம். இச்சமயத்தில் தான் போலீசார் எங்களைத் திடீரென வந்து சூழ்ந்து கொண்டனர். நானும் சர்க்கரையும் இன்னும் சில நண்பர்களும் கைது செய்யப்பட்டோம். கைது செய்யப்பட்ட அனைவரும் உடனே சப்-ஜெயிலில் அடைக்கப்பட்டோம்.

"பொழுது புலர்ந்தது. எப்படியோ பொதுமக்களிடம் நாங்கள் கைது செய்யப்பட்டது காட்டுத்தீ போல் பரவி விட்டது.

"அன்று எதிர்பாராத விதமாக நாங்கள் பொது மக்களால் விடுதலை செய்யப்பட்டோம். ஆம், கொதித்தெழுந்த மக்கள் சிறைச்சாலையைத் தகர்த்து எறிந்து விட்டு எங்களை விடுதலை செய்தார்கள்.

"விடுதலை செய்த மக்கள் எங்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அந்த வெற்றி ஊர்வலத்திற்கு வீரன் சர்க்கரைதான் தலைமை தாங்கி நடத்தி வந்தான். நகர மத்தியில் நாங்கள் ஊர்வலமாக வந்து கொண்டிருக்கும்போது திடீரென்று போலீசார் எங்களை வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள்.

"எங்களைச் சுட்டுப் பொசுக்குவதற்கு ஒரு பெரிய ராணுவத்தையே கொண்டு வந்திருந்தான் அந்த அதிகாரி. எங்களைக் கைது செய்ய முயலவே பொதுமக்கள் ஆத்திரம் கொண்டு அவர்களைத் தடுக்க முயன்றனர். விளைவு........? இருதரப்பினருக்கும் இடையே கை கலப்பு ஏற்பட்டது. போலீசார் தடியடி தர்பாரும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

"இதனல் ஐம்பதுக்கும் மேற்பட்ட புரட்சி வீரர்கள் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகினர். எஞ்சி

இருந்த பலர் காட்டுத் தர்பாருக்கு அஞ்சி ஓடினர். மிஞ்சி இருந்த என்னையும் என் தோழர்களையும் கைது செய்ய வந்தார் அதிகாரி. அவருடைய கொள்ளி வாய் கண்ணுக்கு முதலில் நான்தான் தென்பட்டேன். என்னைப் பார்த்ததும் அவர் ஆத்திரம் அளவு கடந்திருக்க வேண்டும்.

"எரித்து விடுவதுபோல் என்னைப் பார்த்தார். அவரையறியாமலேயே அவருடைய கைத்துப்பாக்கி என் மார்பை நோக்கி நீண்டு கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்ட சர்க்கரை எனக்கு முன்னால் பாய்ந்துவந்து நின்று தன் மார்பைக் காட்டினான். "நாங்கள் உயிருடன் இருக்குமட்டும் நீங்கள் எங்கள் தலைவரை நெருங்க முடியாதென்று" வீரமுழக்கமிட்டான்.

"அது கண்டு மற்ற நண்பர்களும் கொதித்தெழுந்தார்கள். நான் அனைவரையும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதின் பின்தான் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். போலீசார் என்னையும் சர்க்கரையையும் சேர்த்து இருபது பேர்களையும் கைது செய்தார்கள்.

"போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள். வழியில் சர்க்கரை தேசீய விடுதலை கீதத்தைப் பாடினான். அதன் விளைவுதான் இவ்வளவும்" என்று கூறி முடித்தான்.

சிட்டுவின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வெள்ளப்பெருக்கெடுத்தது. இமைக்காது அவனையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் இன்னும் அழுவதாகவே நினைத்துவிட்ட அருணகிரி அவளுக்குப் பல தேறுதல்கள் சொன்

ஞன். ஆம், அந்த இளம்சிட்டுவின் இதயத்துக்கு ஆறுதல் அளிக்க முயன்று கொண்டிருந்தான். வேதாந்தம், சித்தாந்தம், தத்துவம் எல்லாம் சொல்லி அவளைச் சமாதானப்படுத்தினுன். சர்க்கரையை கோட்டைக்கு பக்கத்தில் ஒரு நல்ல இடமாகப் பார்த்து அடக்கம் செய்தார்கள். மாலைவரையில் சிட்டு அழுகையை நிறுத்தவில்லை. இருள் கவ்விக் கொண்டு வந்தது. அதனுல் சிட்டுவை வீட்டுக்குப் போகும்படி தூண்டினுன் அருணகிரி. ஜாக்கிரதை யாக யாரிடமும் எந்த விஷயத்தையும் சொல்லாமல், அம்மாவிடமும் அண்ணனைப்பற்றிச் சொல்லாமல், போலீசார் சந்தேகப்படாமல் மறுநாள் காலையில் சாப்பாடு, ஒரு தினப்பத்திரிகை கொண்டு வரும்படி சொல்லி, அவளை வழி அனுப்பினுன். கூடையைத் தூக்கிக்கொண்டு சிட்டு அருணகிரியை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போனுள். போயே விட்டாள். அருணகிரி அவள் போன திசையைப் பார்த்துக்கொண்டே நின்ருன்.

"எவ்வளவு விசித்திரமான நிலைமை! வாலிபன் ஒருவனுடன் கைதியாக விலங்கு பூட்டி வந்தான். விடுவிக்க வந்த யுவதிக்கு வாழ்நாள் பூராவும் "கைதி"யாகி விட்டான்.

"சர்க்கரையின் கடைசி விருப்பத்தை பூர்த்தி செய்வது தன் கடமைதான் என்ருலும் தானும் என்ரு வது ஒருநாள் போலீசார் கையில் அகப்படவேண் யதுதானே. ஒருவேளை தன்னையும் சுட்டு விடலாம். இப்படி வினுடிக்கு வினுடி மரணத்தை எதிர்பார்த்தி ருக்கும் கைதி வீணுக ஒரு இளம் பெண்ணின் வாழ் வைக் கெடுத்து விடக்கூடாது" என்றெல்லாம் நினைத்தான் அருணகிரி. சர்க்கரையின் தியாகம்

அவனை மெய்சிலிர்க்க வைத்தது. அந்த மாபெரும் தியாகியின் ஆத்மா சாந்தியடைய சிட்டுவை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் சிட்டுவின் எதிர் காலம்........''

இந்தக் கேள்விக்கு பதில் விளங்காமலே தவித்துக் கொண்டிருந்தான். தலைவெட்டி முனியப்பனின் அருகில் தொங்கிய ஒரு சிறு மணி "டிங் டிங்" என்று ஓசையை மெதுவாக எழுப்பி அருணகிரிக்கு முனியப்பன் துணையிருக்கிறான் என்பதை உணர்த்தியது.

4

மலையடிவாரத்திலுள்ள கிராமத்தில் சிட்டுவின் வீடு இருந்தது. பரம்பரை பரம்பரையாக பொம்மை செய்யும் தொழிலில் தேர்ச்சி பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள். தேசபக்தியின் காரணமாய் அருணகிரியுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டான் சர்க்கரை. அவன் செல்லத்தங்கை சிட்டு. சிட்டுவும் அவள் தாய் காமாட்சியும் பொம்மை செய்வார்கள். அப்பொம்மைகளை சிட்டு மலைப்பகுதிக்கு அடுத்த பகுதியிலிருக்கும் நகரத்துக்குக் கொண்டு போய் விற்பது வழக்கம். மலைமீது ஏறி இறங்கினால் சீக்கிரம் போகலாம். வழி, தலைவெட்டி முனியப்பன் சன்னதிதான். அதனால்தான் சிட்டு அருணகிரியையும், சர்க்கரையையும் சந்திக்க முடிந்தது.

அன்று நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஒன்று விடாமல் ஞாபகப்படுத்திக்கொண்டு சிட்டு வீடு வந்து சேர்ந்தாள். தன் தாயைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை பொங்கி வந்தது. அடக்கிக் கொண்டாள். அன்றிரவு பூராவும் அவள் நடவடிக்கை சோகமயமாகவே இருந்தது. அவ்வளவு சோகத்திற்கு மத்தி

யில் ஏதோ இனம் தெரியாத இன்பம் ஊடாடிக் கொண்டிருந்தது. அவளுடைய முகம் அழுது அழுது வீங்கியிருந்தது. மழையில் நனைந்ததினால் "ஜலதோஷம்" பிடித்திருந்தது. அடிக்கடி "அச் அச்" என்று தும்மிக் கொண்டிருந்தாள். இவளுடைய நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த தாய் காமாட்சி ஏதேதோ கேட்டுப் பார்த்தாள். எல்லாவற்றிற்கும் சாமர்த்தியமாகப் பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டாள்.

இரவு வந்தது, கண்ணை மூடினாள். தூக்கம் வந்தால்தானே? மனமெல்லாம் மலையிலே. தலைவெட்டி முனியப்பன் சந்நதியிலே. அருணகிரியைச் சுற்றிச் சுற்றி எண்ணமிட்டாள். செத்துப்போன அண்ணனை நினைத்து நினைத்துப் பொங்கினாள். தலைக்கு வைத்திருந்த தலையணையைத் தூக்கி எறிந்தாள். "அவர் தரையில் படுத்திப்பார். கெட்டகேடு எனக்கு என்ன தலையணை வேண்டிக்கெடக்கு?" என்று முணுமுணுத்தாள்.

வாழ்வென்ற செடியிலே பூப்பதற்காக காத்து நின்ற அரும்பான அவள்மீது காதல் என்ற தென்றல் பட்டு விட்டது. திடீரென்று "அம்மா" என்றாள். காமாட்சி அலறி அடித்துக்கொண்டு எழுந்து "என்ன சிட்டு?" என்று பதட்டமாகக் கேட்டாள்.

"இன்னும் விடியவில்லையா?" சிட்டுவின் கேள்வி.

"அடி பைத்தியக்காரி! விடிய இன்னும் வெகு நேரமிருக்கு. பேசாமல் தூங்கு. நல்ல பொண்ணுடி நீ" இது காமாட்சியின் பதில்.

கொஞ்சநேரம் மௌனம். பின்னர் மீண்டும் "அம்மா, அம்மாவ்" சிட்டுவின் குரல்கேட்டு காமாட்சி

விழித்தாள். "அப்பப்பா என்னடி ஒன்ஞேடே பெரிய எளவாப்போச்சு. என்ன வேணும்?" என்று காமாட்சி சீறிஞள்.

" இன்னும் விடியலியா " என்று சிட்டு ஏக்கமாகக் கேட்டாள். காமாட்சிக்குத் தூக்கக்கலக்கம். அபார கோபம் வந்தது.

" ஏண்டி சூரியன் என்ன ஒங்க பாட்டனு நீ நெனேச்ச நேரத்துக்கு வர? பேசாம தூங்கிறியா இல்லேயா " என்று மிரட்டிஞள்.

சிட்டுவுக்குச் சூரியன்மேல் கோபம் கோபமாக வந்தது. " ஏன் இந்தச் சூரியன் இந்நேரம் வராம விருக்கான். பாழாப்போன சூரியனே பாம்பு கீம்பு விழுங்கிப்பிடுச்சோ என்னமோ? இல்லே சூரியன் வர்ற தேர் அச்சுமரம் முறிஞ்சுபோய் குதிரைங்க எல்லாம் கயிறை அறுத்துக்கிட்டு ஓடிச்சோ? இல்லே சூரியன் தான் செத்துப் போயிட்டானே? இல்லே கிழக்கு பக்கம் வராமெ மேற்கு பக்கமாகப் போயிட்டானே" என்றெல்லாம் நினேத்து நினேத்து சூரியனேத் திட்டிக் கொண்டிருந்தாள் சிட்டு.

கடைசில் ஒரு வழியாக கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. துள்ளி எழுந்தாள். துருதுருவென்று காரியங்களேச் செய்தாள். எல்லாம் வாயுவேகம் மனே வேகம்தான். பொம்மைக் கூடையை தூக்கிக் கொண்டாள். சோத்து மூட்டையையும் எடுத்துக் கொண்டாள். ஓட்டமும் நடையுமாக விட்டாள் சவாரி வீட்டை விட்டு. ஒரு கடைக்குப் போய் தினப்பத்திரிகை ஒன்று வாங்கிக்கொண்டாள். பஞ்சாய்ப்பறந்தாள். தாவிக்குதித்து ஓடிஞள்.

வருவாள் வருவாள் என்று வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருந்தான் அருணகிரி. தன்னந்

தனியனாக இரவெல்லாம் தவித்துக் கொண்டிருந்தவனல்லவா? தனிமையில் இனிமை காண்பது உயர்வுதான். "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்று ஔவையார் சொன்னதும் உண்மைதான். ஆனால் அருணகிரியின் மனம் தனிமை காணும் நிலையிலில்லை. "ஏகாந்தம்" அவனுக்கு இனிக்கவில்லை. இரவெல்லாம் அவன் உடல் "ஏகாந்தத்தில்" இருந்தாலும் உள்ளம் சிட்டுவைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. கண்களை மூடினான். கனவு, கனவு ஓயாத கனவு.

நீலநிற மெத்தையிலே சிட்டு நிலவானாள். கோலமெல்லாம் காட்டிக் குளிர்தருவானாள். ஜாலமெல்லாம் காட்டினாள். சந்திரனாய் வந்து மந்திரமும் செய்தாள். சின்ன சின்ன மீன்கள் கண்ணைக் கண்ணைச் சிமிட்டி சிரித்து வேடிக்கை செய்தன.

முத்து முத்துப்பந்தல். அழகு மூண்டெழுந்த ஜோதி - சித்து விளையாடினாள் சிட்டு. அவள் சித்திரமோ பிரமன் கைத்திறனோ?

பூமணக்கும் சோலை - அதில் பூரித்தான் காளை. நாமணக்கப் பாடினாள், நாட்டியத்தை ஆடினாள். நள்ளிரவு கோட்டையிலே தேனை அள்ளி அள்ளிக் கொடுத்தாள். அள்ளி அள்ளிக்குடித்தும் அவன் ஆசை தீரவில்லை.

புத்தழகு பூத்தது. எல்லாம் பொன்மயமாய் ஆனது. முத்தமொன்று தந்தான் - அவள் மொத்தமாகத் தந்தாள். மோகமெல்லாம் தீருமா? பெண்ணரசி வந்தாள் இன்பப்பெட்டகத்தை திறந்தாள். கண்நிறையக் கண்டான். காதல் மயமானான். தன்னிலை இழந்தான், தாவியே அணைத்தான். பெண்மையும் மகிழ்ந்தது. பேரின்பம் பெற்றது.

இப்படியே இரவெல்லாம் கனவுக் கன்னியை அணைத்தபடியே கிடந்தான். நெருங்கி வந்த நித்ரா தேவியை விரட்டி அடித்தான். இரவெல்லாம் கண்களை மூடிக்கொண்டிருந்தான். ஆனால் மனம் தூங்கவில்லை. ஏன்?

காலை மலரும். காதலி வருவாள். கனிரசம் தருவாள் என்று சாலையைப்பார்த்த வண்ணம் சலங்கை ஒலியைக் கேட்கக் காதை நீட்டிக் கவனித்துக் கொண்டிருந்தான் அந்தக் காளை.

"ஜல் ஜல் என்ற ஓசை நெருகி வந்தது. அருணகிரியின் உள்ளம் "ஜில் ஜில்" என்று குளிர்ந்தது. பூமியே, கீதம் பாடுவதுபோலிருந்தது அவனுக்கு. போலீசார் வந்தால் பூமி அதிரும். இந்தப் பூவை வந்தால் பூமியே இசை முழக்கம் செய்கிறது. சந்தோஷத்தோடு சங்கீதம் பாடுகிறது. பூமியும் ஒரு பெண்தானே என்று எண்ணி மகிழ்ந்தான் அருணகிரி.

அதே நடை. அதே கூடை. அதன்மேல் கட்டிச்சோறு. இன்று திருடவேண்டிய அவசியமே இல்லை. கேட்காமலே எடுத்துக்கொள்ளும் உரிமை பெற்றுவிட்டானே. இனி என்ன தடை? கிடைக்கத் தடை இருந்தால்தானே திருட்டும் புரட்டும்?

புதருக்குள்ளிருந்து பூரிப்புடன் வந்தான் அருணகிரி. "சிட்டு" என்று வாய்நிறைய கூப்பிட்டான். அந்த செல்லக்கிளி ஒரு சிரிப்பைச் சிந்தினாள். புன்னகை வீசிய அந்தப் பூவையின் கூடையை ஆவலாய் வாங்கினான். "இரவு இந்தக் காட்டில் எப்படி தூங்கினீர்கள், பயமா இல்லையா" என்று கேட்டாள் சிட்டு.

"பயமில்லை சிட்டு ஆனாலும் தூக்கம் வரவில்லை பாதி கவலை பாதி......."

“பாதி ?”

“பாதி வளர்பிறை” பாதி தேய்பிறை இரவு முடியும்பொழுது விடியும் என்ற நம்பிக்கையில்தான் மனிதன் வாழ்கிறான். இதயத்தில் ஏற்படும் உதயத்தைப்பற்றிய இன்ப கனவுகளிலே இரவைக் கழித்தேன். நீ தூங்கினாயா சிட்டு?”

“அண்ணனைப் பற்றிய நினைவுகளிலே அரைத் தூக்கம் வரவில்லை. அத்தானைப் பற்றிய நினைவுகளிலே குறை தூக்கமும் வரவில்லை” என்று கூறிய சிட்டுவின் முகம் குங்குமச் சிவப்பாயிற்று.

“குறைத் தூக்கத்தை இங்கேயே தூங்கலாம் கூடையை இறக்கு” என்றான் அருணகிரி.

“அது சரி, காயம் எப்படியிருக்கிறது?” என்று கனிவுடன் கேட்டாள் சிட்டு.”

“உன் கை பட்டதும் வலி காற்றாய்ப் பறந்து “காயமே இது பொய்யடா” என்றாகி விட்டது” என்றான் நகைச்சுவையோடு அருணகிரி.

சிட்டு கொண்டுவந்த பத்திரிகையை ஆவலாகப் படித்துக்கொண்டிருந்தான். சிட்டு அவன் காலில் கட்டியிருந்த கட்டைப் பிரித்து ரத்தத்தைத் துடைத்தாள்.

“ஆ” என்று எழுந்தான். ஏன்? புண்ணூறு வலிக்குதா? என்று பதறிப்போய் கேட்டாள் சிட்டு.

“சிட்டு என்னுடைய உயிர் நண்பன் செல்லத்துரை தேச விடுதலைக்காக வீறுகொண்டெழுந்த வீரன். அவனை போலீசார் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். இதோ இந்தப் படத்தில் இருப்பவன்தான் செல்லத்துரை” என்று பத்திரிகையில் உள்ள படத்தைக் காண்பித்தான் அருணகிரி.

"செத்தவங்க படத்தையெல்லாம் பத்திரிகையிலே போடுவாங்களா ?" என்று கேட்டாள் சிட்டு.

"ஆமாம், செத்துப்போன வீரர்கள் படம் பத்திரிகையில் வரும். ஆனால் இவனைப்போல் தியாகம் பண்ணின சர்க்கரையின் படம் மட்டும் பத்திரிகையில் வரமுடியாத நிலைமையில் அவன் வீரசொர்க்கம் அடைந்திருக்கிறான்."

சர்க்கரையின் பேச்சை எடுத்ததும் சிட்டுவின் கண்கள் நீரைப்பொழிந்தன. அவள் கண்களை அருணகிரி துடைத்துவிட்டான். "சிட்டு என்னால் அல்லவா இந்த இளம் காளைகளெல்லாம் தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள். பாவி நான் சாகாமல் இன்னும் உயிருடன் இருக்கிறேனே" என்று சொல்லி மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டான். சிட்டு அவன் கையைப் பிடித்து தடுத்து நிறுத்தி "அத்தான் நீங்களே இப்படியெல்லாம் செய்தால் நான் எப்படி மன தைரியமாக இருப்பேன். அண்ணனைப் பறிகொடுத்த துக்கத்தையும் அடக்கி உங்கள் அன்பினால் வாழலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் என் மனசையும் கலங்கடிக்கிறீர்களே" என்று சொல்லி அவன் மடியில் முகத்தை வைத்து நயமாக அவன் கரங்களைத் தடவிக் கொடுத்தாள்."

அவள் கரங்களின் மென்மையும், அவள் பழகும் தன்மையும், அவளின் லாவகமான பெண்மையும், அவளால் தனக்கு ஏற்பட்ட நன்மையும்........இதையெல்லாம் எண்ண எண்ண அருணகிரியின் நெஞ்சம் நெகிழ்ந்தது. பாலைவனம் போன்ற தன்னுடைய வாழ்க்கைப் பாதையிலும் ஒரு சோலைவனம் தென்படுகிறது என்று தோன்றிற்று அருணகிரிக்கு.

அவளை நிமிர்ந்து நோக்கினாள் சிட்டு. அவன் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்து வெட்கிப்போனாள். தலையைக் குனிந்துகொண்டு தரையை நோக்கினாள். கோடரி கொண்டை வானத்தை நோக்கியது. தேனொத்த அவள் கன்னத்தை மெதுவாகத் தீண்டி, " சிட்டு " என்றான்.

" ம் "

" எவ்வளவு கவலை இருந்தாலும் உன்னை பார்க்கிறபோது எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன்."

" நிஜம்மாவா ? அது போகட்டும் கால் புண்ணு என்னவாச்சு?"

நேற்று முழுப்புண்ணாக இருந்தது. இன்று நீ சொன்னபடி கால் புண்ணுத்தான் இருக்கு.

" வேடிக்கை போதும் சாப்பிட வாங்க."

" கட்டிச்சோறுக்கு இன்னிக்கு என்ன ஊறுகாய் ?"

" மாங்காய் " என்று சிரித்தாள் அந்த மாதரசி.

" காயா, பழமா ?" என்று கனிவுடன் கேட்டான் அக் காளை.

" பாதி காய், பாதி பழம் " என்றாள் அப் பாவை.

அந்தப் பதிலைக் கேட்டு அவன் சிரித்தான். அவள் பொட்டலத்தை விரித்தாள். அபார பசியோ ?.......

" நீ வருவதற்கு முன் நல்ல பசி. நீ வந்த பிறகு ஒரே குஷி."

" சரி இப்போ புசி."

"பேஷ் பேஷ்" வார்த்தை வெகு நயமாக வரு கிறதே சிட்டு என்று சொல்லி "நீயும் கொஞ்சம் புசி" என்று சோற்றை அவளுக்கு அள்ளி ஊட்ட முயன்றான்.

"நான் வீட்டில் ருசி பார்த்துவிட்டுத்தான் வர்றேன்."

"ஓகோ, நீ அடுப்பங்கரைப் பூனையா?"

"ஆமாம் "யானைக்கு" பிடித்த சாப்பாடா என்று பார்க்க வேண்டாமா? அதனால்தான் இந்த "பூனை" சாப்பிட்டுவிட்டு ருசி பார்த்தது."

மூக்கு பிடிக்கச் சாப்பிட்டான் அருணகிரி. சிட்டு அவனுக்கு ஊட்டு ஊட்டென்று ஊட்டினாள்.

"போதும், போதும்" என்று அலறினான் அருண கிரி. பொட்டலத்தை காலி செய்யாமல் விடமாட் டேன் என்று சிணுங்கினாள் சிட்டு. சாப்பாட்டுப் போராட்டம் ஒருவாறு ஓய்ந்தது. இருவரும் முனி யப்பன் சந்திக்கு வந்தார்கள்.

முனியப்பனைக் கும்பிட்டுவிட்டு சிட்டு அருணகிரி யின் காலில் விழுந்து கும்பிட்டு "இனி நீங்கள்தான் என் தெய்வம். உங்களுக்காகவே உயிர் வாழ் வேன்" என்று அவன் கால்களை பற்றிக்கொண்டாள்.

"எழுந்திரு சிட்டு எழுந்திரு" என்று அவள் தோள்களைப் பிடித்துத் தூக்கி மார்போடு அணைத் துக்கொண்டான். அவன் மார்பில் இன்ப போதை யில் பெருமூச்சு விட்டபடி தூங்காமல் தூங்கி சுகம் பெற்றாள் அந்தத் தாயவள்.

அங்கிருந்த குங்குமத்தை எடுத்து அவள் நெற்றி யில் திலகமிட்டான். நாணத்தால் குனிந்த அவளைச் சேர்த்து அணைத்து முத்தமிட்டான்.

ஜில்லென்று காற்று வீச, ஜிவ்வென்று பறவைகள் சிறகடிக்க, புல் பூண்டெல்லாம் கண் சிமிட்ட, புதரில் ஒளிந்து நின்று பார்த்த முயல்கள் பூரிப்படைய, பொந்திலிருந்து தலைநீட்டிய பாம்பு வெட்கப்பட்டு உள்ளே தலையை இழுக்க, பூக்களெல்லாம் பொல பொலவென கீழே உதிர, அந்தக் காடும் மலையும், பேடும் குயிலும், நாடும் நகரமும், வீடும் வாசலும், மேடும் பள்ளமும் எல்லாம் ஒன்றாகச் சுற்றி உணர்ச்சி அமிர்தத்தில் மூழ்கினாள் சிட்டு. பனிமலர்கள் பாதையெங்கும் உதிர்ந்து கிடந்த காட்சி பஞ்சணைபோல் இருந்தது. ஓடையின் சல சலப்புச் சப்தம் சங்கீதம் இசைத்தது. இசைக்கேற்ப அருணகிரி இழுத்து அவளை அணைத்தான். அவள் கரங்களை பறித்துக்கொண்டு எழுந்து ஓடினாள். எதிர் பார்க்கவில்லை அவன். ஏமாந்துவிட்டான். அவனும் எழுந்து பின்னாலேயே ஓடினான். அவள் ஒரு மறைவில் ஓடி மறைந்தாள்.

"சிட்டு சிட்டு" என்று மெதுவாகக் கூப்பிட்டான். எந்த பெண்தான் பதில் சொல்லுவாள். தேடினான், தேடினான் அந்த தேடற்கரிய செல்வத்தைத் தேடினான். சொல்லாமல் போய்விட்டாளே சொகுசுக்காரி" என்று அவன் இதயம் வாடிற்று.

புதருக்குப் பக்கத்தில் உள்ள ஒற்றையடிப் பாதையில் அவள் அழகிய பாதங்கள் படிந்திருப்பதைக் கண்டான். அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடந்தான். அது அவனை ஒரு சிறு சோலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. அங்கு ஒரு மூலையில் வேப்ப மரத்தின் நிழலில் அந்த வேல்விழியாள் படுத்திருந்தாள். அவனைக் கண்டதும் அவள் நாணிக் கவிழ்ந்து கொண்டாள். "இதோ,

என் தலைவன் வந்துவிட்டான்" என்று பூமித்தாயுடன் ரகசியம் பேசுவதுபோல் இருந்தது அந்தக் காட்சி.

அவன் அவள் அருகில் சென்று அவள் முகத்தை திருப்ப முயன்றான். முடிந்தால்தானே? பலம் கொண்ட மட்டும் முயன்று இரு கரங்களாலும் அவளைத் திருப்பி இணைத்து அணைத்துக்கொண்டான். அவனுடைய இந்த வெற்றியைக் கண்டதும் கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள் அந்தக் காரிகை.

மீண்டும் ஒரு போராட்டம். கைகளை பறித்தான். ஆனால் இமைகளை எப்படித் திறப்பது?

குறுக்கு வழியில் புகுந்தான். அவள் இடையில் அவன் கரங்கள் விளையாடின. அவள் குலுங்கி குலுங்கிச் சிரித்தபடி அவன் பிடியிலிருந்து திமிறினாள். கூண்டுக்குள் அகப்பட்ட கிளி மூக்கால் கதவை திறக்க முயற்சிப்பதுபோல இருந்தது அந்தக் காட்சி. அந்தக் கிளியின் இனம் புரியாத மழலை மொழியை ரசித்துச் சிரித்தான். கிளியின் மூக்குத்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது அது பறக்க எத்தனிக்கும்போது காட்டும் உணர்ச்சித் துடிப்பு....

வீணையின் நரம்பு முழுவதும் விரல்கள் ஓடிச் சென்று விளையாடுவது போல் அருணகிரியின் விரல்கள் சிட்டுவின் உடலெங்கும் ஓடி விளையாடின.

இப்படியே நாட்கள் பல சென்றன. நகமும் சதையுமாக இக்காதலர்கள் காலத்தை ஓட்டினர்.

தினமும் அவள் உணர்ச்சியை ஊட்டினாள். அவன் இன்பத்தை மீட்டினான். அந்த நாதத்தில் எழுந்த போதையில் சிட்டு கிருகிருத்துப் போனாள். அருணகிரி சொக்கிச் சுழன்றான்.

அவன் இரும்புப் பிடியிலிருது விடுபட முயல்வாள். ஆனல் அந்த முயற்சி பலவீனமாக இருந்தது. அவள் பூரண சம்மதத்துடன் விடுபட நினைக்கவில்லை என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஒரு ஆணுக்கு வேண்டியது அதுதானே?

கட்டிச்சோறு தினமும் வந்தது. காலையும் மாலையும் கணப்பொழுதில் ஓடிற்று. பக்கத்தில் வந்து சிட்டு நின்றால், பௌர்ணமியும் அழகு குறைந்தது. அவள் தாவணி ஆடினல் தாரகையும் நாணிற்று. சொல்லைத் தேனுக்கினுள். அதில் சொட்டும் அமுதூற்றினுள். முல்லைச் சிரிப்பில் மூன்று லோகத்தையும் கொண்டு வந்தாள். புளிக்கும் மாங்காய் இனித்தது. பூவையின் கைப்பட்ட இடம் சிலிர்த்தது. களிப்பும் சிரிப்பும் கலந்து காலம் நில்லாமல் ஓடிற்று.

ஒருநாள் சிட்டு வழக்கம்போல் வந்தாள். "அத்தான், அத்தான்" என்றுள். எங்கிருந்தோ அருணகிரியின் குரல், "என்னைக் கண்டுபிடி பார்க்கலாம்" என்று ஒலித்தது.

"ஓகோ ஒளிஞ்சு வெளையாடுறீங்களா? இருக்கட்டும். நான் கண்டுபிடிக்கலேன்னு காமாட்சி மக இல்லே" என்று சொல்லி ஒவ்வொரு பாறை, புதர் இவைகளில் தேடிக்கொண்டே வந்தாள். புதருக்குப் புதர் புகுந்து பார்த்தாள். ஒரு புதரில் சலசலப்புச் சப்தம் கேட்டது. "பணங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது" என்று சொல்லி புதருக்குள் பாய்ந்து சென்று "கப்"பென்று பிடித்து வெளியில் இழுத்தாள். என்ன ஆச்சரியம். வெளியே வந்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர் வீராசாமி. காக்கி உடையைக் கண்டதும் கதி கலங்கிப் போனுள். நெஞ்சம் படபடத்தது. உடல் எங்கும் "குப்" பென்று வேர்த்

தது. ஆயிரம் எமன் ஒன்று சேர்ந்த உருவமாக இன்ஸ்பெக்டர் அவளுக்குக் காட்சியளித்தார். "வீல்" என்று கத்தினுள். ஒரே ஓட்டம். "அத்தான் போலீஸ், போலீஸ்" என்று கூக்குரலிட்டாள்.

"இப்படிச் சொல்லி என்னை ஏமாற்றி விடலாம் என்று பார்க்கிருயா? அதெல்லாம் ஐயாகிட்டே நடக்காது. நீ கண்டுபிடி பார்க்கலாம்" என்று அருணகிரி பதிலுக்கு கத்திக் கொண்டிருந்தான். "இல்லே நிஜமாத்தான் போலீஸ் வந்திருக்கு. ஓடி மறைஞ்சுக்குங்க" என்று சொல்லிக்கொண்டே ஓடினுள். இன்ஸ்பெக்டர் அவளை எச்சரித்துக்கொண்டே "ஓடாதே, சத்தம் போடாதே" என்று சொல்லிப் பார்த்தார். அவள் அதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. இன்ஸ்பெக்டருக்குக் கோபம் வந்து விட்டது. சிட்டுவை நோக்கிச் சுட்டார்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் அருணகிரி வெளியில் வந்தான். மலைச்சரிவிலிருந்து சிட்டு "ஆ" வென்று அலறியபடி கீழே விழுவதைப் பார்த்தான். "சிட்டு, சிட்டு" என்று பதறியபடி ஓடி வந்தான். மலை உச்சியில் வந்ததும் போலீசார் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். பாதாளத்தைப் பார்த்தான் அருணகிரி. "பாவி மகன்" தனக்காக அந்தப் பத்தினித் தெய்வம் வீர சொர்க்கம் செல்வதற்கு காவிரித்தாய் அவளை வெகு வேகமாக கொண்டு செல்வதைப் பார்த்தான். புதுத்தண்ணீர் ரத்தச் சிவப்பாக ஓடியது சிட்டுவின் ரத்தம்தான் ஆருக ஓடுகிறதா? அருணகிரியின் அடிவயிறு கலங்கியது. நெஞ்சை ஒருமுறை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மூடிய கண்களிலிருந்து முத்து முத்தாக நீர்த்துளிகள் கொட்டின. பித்துப் பிடித்தவனைப்போல பெருமூச்சு விட்டபடி நின்முன். இன்ஸ்பெக்டர் வீராசாமி இதமாக அருண

கிரியின் கைகளில் விலங்கைப் பூட்டினார். தன் தொப்பியை எடுத்து 'சிட்டு'விற்கு மரியாதை செய்தார்.

"சரி இழுத்து வாங்கடா இந்த ராஸ்கலை" என்று தன் ஜவான்களுக்கு உத்தரவு இட்டார்.

கைதானதைப் பற்றித் துளிக்கூட அருணகிரி கவலைப் படவில்லை. தேச பக்தனுக்குக் கிடைக்கும் பரிசுகள் அவனுக்குத் தெரிந்ததே. ஆனால் சிட்டு தன்னை விட்டு சிட்டாகப் பறந்துவிட்டாளே! எதையும் அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. மனம் ஊமையாகிவிட்டது. சற்றுமுன் சோலைவனமாக இருந்த இடம் பாலைவனமாகக் காட்சியளித்தது. பட்சிகளின் இன்பகானம் துன்பக் குரலாகக் கேட்டது. இதயம் ஒடிந்த நிலையில் எதுவும் பேசாமல் அருணகிரி மௌனமாக நடந்தான். அவன் நடை சவ ஊர்வலத்தின் பின் செல்லும் அன்புள்ள மனைவியை இழந்த ஒரு அன்புள்ள கணவனின் நடையைப் போலிருந்தது. அது மட்டுமா? அவனே ஒரு நடைப் பிணம்போல நடந்து கொண்டிருந்தான்.

வெற்றி கண்ட ஒரு மாபெரும் வீரனைப்போல் ஏறுநடை போட்டு வீர நடை நடந்தார் இன்ஸ்பெக்டர் வீராசாமி.

5

காவிரி அன்னை கருணைமிக்கவள். உச்சி மலையிலிருந்து உருண்டு விழுந்த சிட்டுவைத்தாங்கி, கருணையோடு மிதக்கச் செய்து கரையின் ஓரத்தில் ஒரு கற்பாறை அருகில் ஒதுக்கி வைத்தாள்.

மலை உச்சியிலிருந்து உருண்டு விழுந்தபடியால் உடம்பெல்லாம் ஒரே ரணமாக இருந்தது. துப்பாக்கிக்

குண்டு அவள் தோளைக் துளைத்திருந்தது. மயக்கமாக கிடந்த சிட்டுவை காவிரியில் ஓடம் விடும் "குகப் பெருமான்கள்" சிலர் பார்த்து பரபரப்படைந்து அவளைத் தூக்கித் தங்கள் குடிசைக்கு எடுத்துச் சென்றார்கள். நாட்டு வைத்தியர் வரவழைக்கப் பட்டார். தாதுகளைப் பார்த்து அவளின் மூர்ச்சைத் தெளிய வைத்தார். தோளில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இருப்பதைப்பார்த்து துணுக்குற்றார்.

சிட்டு மெதுவாக கண் விழித்தாள். பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து 'மெரள மெரள' விழித்தாள்.

"அம்மா நீ யாரு? என்ன நடந்தது? விவரமாகச் சொல்லு" என்று நாட்டு வைத்தியர் பரிவோடு கேட்டார். சிட்டு தன்னிலைக்கு வந்தாள். உணர்ச்சியடைந்தாள். எல்லாவற்றையும் ஒரு நொடிப்பொழுதில் ஊகித்துக் கொண்டாள். "ஐயா, என்கூட அவர் இருந்தாரே, அவரைப் போலீசார் பிடித்தார்களா? இல்லை தப்பி விட்டாரா?"

கூட்டத்திலிருந்த பத்திரிகை படிக்கும் ஒருவர் விஷயத்தைச் சட்டென்று ஊகித்துக்கொண்டு "அடேடே, அருணகிரியை போலீசார் பிடிக்கும் போது சுடப்பட்ட பெண் நீதானா? நீதான் இத்தனை நாளா அவனை ஒளிச்சு வைச்சு காப் பாற்றினவளா" என்று சொல்லி நாட்டு வைத் தியரையும் குப்பத்தில் முக்கிய பெரியவரையும் தனியாக கூப்பிட்டு "ஐயா, இந்த பெண்ணை இங்கே வைச்சிக்கிறது ஆபத்தானது ஏன்னா, இது கைதியைப் பிடித்து வைத்து காப்பாத்தின குற்றம் ஒண்ணு; போலீசாரை ஏமாற்றின குற்றம் ஒண்ணு; துப்பாக்கியினாலே சுடும்படி செய்த குற்றம்

ஒண்ணு இத்தனை குற்றமும் இந்தப் பொண்ணு செய்திருக்கு. அதனாலே உடனடியா விசாரித்து அவங்க அம்மா அப்பாகிட்டே ஒப்படைப்பது ரொம்ப நல்லது. நாமே வைச்சு கிட்டோம்னு இந்தப் பொண்ணை இங்கே வைச்சிருந்த குற்றத்திற்காக நம்ம எல்லோரையும் கூண்டோட கைலாசமா போலீ சார் பிடிச்சுட்டுப் போயிடுவாங்க. அதனாலே இந்த வம்பெல்லாம் வேண்டாம். போசாமெ இந்த இடத்தைவிட்டு உடனடியாக அனுப்புவது நல்லது" என்று சொல்லிவிட்டு அதற்கு மேல் தான் இங்கு இருந்தால் ஒருவேளை போலீஸ் தன்னைப் பிடித்துக் கொண்டால் என்ன செய்வதென்று ஓட்டமாக அந்த இடத்தை விட்டு ஓடினார் அந்த "உத்தமசீலர்".

குப்பத்து பெரியவர் சிட்டுவிடம் வந்து, "உங்க அப்பா அம்மா யாரு" என்று அன்போடு கேட்டார். "எனக்கு அப்பா இல்லை. எங்க அம்மா பேரு காமாட்சி. மலையடிவாரத்திலுள்ள கிராமத்திலே குயத்தெருன்று ஒரு தெரு இருக்கு. அதிலேதான் இருப்பாங்க........அவரு என்கூட இருந்தவரு, என்னு ஆனாரு" என்று அழமாட்டாக்குறையாகக் கேட்டாள். அதெல்லாம் எனக்கொண்ணும் தெரியாதம்மா. இரு இரு உன் அம்மாவைக் கூட்டியாரச் சொல்றேன்" என்று சொல்லி அப்பெரியவர் அங்கு கூட்டம் போட்டுக் கொண்டிருந்தவரையெல்லாம் விரட்டி விட்டு போனார்.

சிட்டு துடியாகத் துடித்தாள். பக்கத்தில் பத்திரிகை கிடந்தது. அதில் அருணகிரியின் படத்தை முதல் பக்கத்தில் பெரியதாக பிரசுரித்திருந் தார்கள். எழுந்து வெடுக்கென்று அப்பத்திரிகையை எடுத்தாள். படத்தைப் பார்த்தாள். படபடப்

படைந்தாள். "ஐயோ! செத்தவங்க படத்தைத் தானே பத்திரிகையிலே போடுவாங்க என்று சொன்னரே. அவர் படமே பத்திரிகையில் வந்திடுச்சே," என்று கதறி தலையிலும், மார்பிலும் அடித்துக் கொண்டு பித்து பிடித்தவள்போல் கதவிலும், கட்டிலிலும் முட்டிக்கொண்டு கிருகிருத்து மயக்கமாக விழுந்து விட்டாள்.

6

காலையில் சென்ற மகள் மாலையில் வருவது வழக்கமாக இருக்க, இரவு பூராவும் வராமல், மறு நாள் காலையிலும் காணமல் காமாட்சி தவித்தாள். தாய்ப்பாசம் அவளைப் பிழிந்தெடுத்தது. பெற்ற மகன், உற்றூர் உறவினர் யாரும் வேண்டாம் என்று சொல்லி தேசசேவை செய்யப்போவதாகச் சொல்லிப் போனவன் என்ன ஆனனே தெரியவில்லை. இந்த நிலையில் மகளையும் காணேமே என்று குமுறிக் கொண்டிருந்தாள் காமாட்சி. அச்சமயத்தில் குப்பத்து பெரியவர் வந்து காமாட்சியிடம் ரகசியமாக விஷயங்களை எடுத்துக்கூறி உடனே சிட்டுவைக் கூட்டிக்கொண்டு ஏதாவது தூரம் தொலைவில் உள்ள ஊருக்குச் சென்று துப்பாக்கிக் குண்டுக்கு வைத்தியம் பார்த்து உடல் நிலை சரியாக ஆனதும் ஊருக்கு திரும்பி வர வேண்டுமென்று சொன்னர்.

காமாட்சி அழுதாள். தவித்தாள். பெரியவர் அவளுக்குச் சமாதானம் சொல்லி அக்கம்பக்கம் இருப்பவர்கள் அவளுடைய ஆர்பாட்டத்தினல் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு விடுவார்கள் என்றும் அதனல் கப்சிப் என்று ஒருவருக்கும் தெரியாமல் உடனே புறப்படும்படி பெரியவர் கண்டித்துக்

கூறியதும், காமாட்சி தன்னிலைக்கு வந்து அவசிய மான துணிமணிகளையும், செலவுக்குப் பணத்தையும் எடுத்துக்கொண்டு பெரியவரைப்பின் தொடர்ந்தாள்.

குப்பத்தில் குடிசையில் படுத்திருந்த மகள் சிட்டு வைக் கண்டதும் பதறித் துடித்தாள். முகத்தில் தண்ணீரைத் தெளித்தாள். கண்திறந்த சிட்டு காமாட்சியைப் பார்த்ததும் "அம்மா" என்று அலறி னாள். அதற்குள் பெரியவர் ஒரு வண்டி கொண்டு வந்தார். சிட்டுவையும், காமாட்சியையும் வண்டியில் ஏற்றி பக்கத்திலிருந்த ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் கொண்டு போய் ரயிலில் ஏற்றி விட்டார்.

காமாட்சி தன் தாய் வீடான அழகர்கோயிலுக் குப் போவதாக முடிவு செய்தாள். ரயில் வண்டியில் எல்லாவற்றையும் விவரமாக சிட்டுத் தன் தாய்க்குக் கூறினாள். மகன் செத்ததை அறிந்ததும் விம்மி வெதும்பினாள். ரயிலில் சப்தம் போட்டு அழுதால் யாராவது தங்களைச் சந்தேகப்பட்டு விடுவார்கள் என்ற பயம் தொண்டையை அடைக்க பாசம், மனசைப்பிளக்க, உள்ளுக்குள்ளேயே ஊமை அழுகையாக அழுது உருகினாள் காமாட்சி.

அருணகிரி படம் பத்திரிகையில் வந்ததை சிட்டுத் தன் தாய்க்குச்சொல்லி அந்தப் பத்திரிகையை அவளிடம் காண்பித்து "அவரும் போயிட்டாரம்மா. இனி நான் என்ன செய்வேன்" என்று தன் தாயைக் கட்டிக்கொண்டு தேம்பினாள். சிட்டுக்கு எழுதப்படிப் கத் தெரியாததைப்போல் காமாட்சிக்கும் எழுதப் படிக்கத் தெரியாதாகையால் பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிறது என்பதை படிக்கத் தெரியாமல் இருவரும் "குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம்

ஆடி குழி விழுந்தவாறே" என்பதுபோல "அருண கிரி இறந்து விட்டான்" என்று இருவரும் முடிவு செய்துகொண்டார்கள்.

தனக்குத் தெரியாமல் தன் மகள் தன் மகனின் விருப்பப்படி அருணகிரியைக் "காட்டுக் கல்யாணம்" செய்துகொண்டு இந்த கதிக்குத் தன்னை ஆக்கி விட்டாளே என்று காமாட்சி மனம் ஒடிந்து போனாள்.

இனி சண்டை பிடித்து என்ன பயன்? நடந்தது நடந்துவிட்டது. இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம் என்ற மனத் தெளிவுடன் ரயிலைவிட்டு இறங்கி அழகர் கோயிலுக்கு சிட்டுவுடன் வந்து சேர்ந்தாள்.

காமாட்சியின் தாய் அங்கம்மாள் தன் மகளையும், பேத்தியையும் எதிர்பாராமல் பார்த்து திகைத்து நின்றாள். தள்ளாத வயதிலும் இல்லாத உபசாரமெல்லாம் செய்தாள். "கல்லான மனசும் கரையும் வண்ணம்" நடந்த கதைகளைக் கூறினாள் காமாட்சி. அழுது புலம்பினாள் அங்கம்மாள. சிட்டுவின் தோளில் உள்ள துப்பாக்கிக் குண்டு காயத்தைப் பார்த்துப் பதறிப்போனாள். வயதான அக்கிழவிக்கு வாலிப வேகம் வந்தது. ஓட்டமாய் ஓடினாள். அந்த ஊருக்கென்று இருந்த டாக்டர் நிர்மலாவைக் கூடவே கூட்டிக்கொண்டு வந்தாள். சிட்டுவின் நிலையை சோதித்த டாக்டர் நிர்மலா குண்டுபட்ட காயத்தைப் பார்த்து இதைப் போலிசுக்கு அறிவிக்காமல் இருப்பது தவறு என்று சொன்னாள். அங்கம்மாளுடன் காமாட்சியும் அவளைக் கெஞ்சி சிட்டுவின் கதையை உருக்கமாகச் சொன்னாள். டாக்டர் நிர்மலா சிட்டுவை ஏறிட்டுப் பார்த்தாள். "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையைப்

போல" ஒளிவிட்டுக் கொண்டிருந்த அந்த முகத்தின் காந்த சக்தி நிர்மலாவிற்கு தேசபக்தியை ஊட்டியது. பின்னர் கேட்பானேன்? விறுவிறுவென்று தன் கைப் பெட்டியைத் திறந்தாள். மளமளவென்று சிகிச்சையில் இறங்கினுள். குண்டு வெளியில் எடுக் கப்பட்டது. காயத்திற்கான மருந்தை வைத்துக் கட்டினுள். சிட்டுவைத் தனது டிஸ்பென்ஸரிக்குக் கூட்டிச்சென்று விட்டாள்.

டாக்டர் நிர்மலாவின் உள்ளத்தில் உணர்வு பிறந்தது. சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட முடியாவிட்டாலும் தேசத்திற்காக தியாகம் செய்து, அதனுல் துன்பம் அனுபவிப்பவர்களுக்கு உறுதுணையாக இருப்பதும் ஒரு தேச பக்திதானே என்று எண்ணி இனிமேல் தானும் தேசப்பணியில் ஈடுபடுவதென்று முடிவுக்கு வந்தாள் டாக்டர் நிர் மலா. தான் உண்டு, தன் வேலை உண்டு, தன் சம் பாத்யம் உண்டு என்று இருந்த தன்னை சுய நலத்தில் கண்மூடிக்கிடந்த தன்னை, தேசப்பணிக்கு கண் திறந்து விட்ட சிட்டுவின் மீது அவளுக்கு அபார அன்பு உண்டாயிற்று.

சிட்டுவிற்கும் தன் இதயத்திலிருந்து பெரும் பாரத்தை இறக்கி வைப்பதற்கான "சுமைதாங்கி யாக" டாக்டர் நிர்மலா இருந்து வந்தாள். சிட்டுவின் கண்களிலிருந்து அவளை அறியாமலேயே எப்பொழு தும் வற்ருத நீர்த்துளிகள் வந்துகொண்டே இருந் தன. கன்னங்கள் இரண்டிலும் கண்ணீரால் ஏற் பட்ட உவர்ப்புக் கோடுகள் பதிந்து கிடந்தன.

டாக்டர் நிர்மலாவின் போதனைகள் சிட்டுவிற்கு இதமாக இருந்தன. காயத்திற்கு மருந்து போட்டு சொஸ்தப்படுத்திய டாக்டர் நிர்மலா சிட்டுவின் மனப்

புண்ணுக்கும் மருந்து போட்டு அதையும் சொஸ்தப் படுத்த முயன்றாள். நாளாக ஆக சிட்டுவின் மனதை மாற்றி "உலகத்தில் துன்பப் படுபவர்களுக்கு சேவை செய்வதற்காகவே ஆண்டவன் நர்ஸுகளைப் படைத் திருக்கிறான். அதனால் நீயும் என்னுடனேயே தங்கி இருந்து நர்ஸாக வேலை செய்து, கஷ்டப்படும் மக்களுக்கு சேவை செய்தால் அந்தச் சேவையின் இன்பத்தில் உன் மனம் அமைதி பெறும்" என்று அவளுக்குப் பல அறிவுரைகளைக் கூறி தன்னுடனேயே அவளை நர்ஸாக இருக்கும்படிச் செய்தாள்.

சேவையில் மனம் ஈடுபட்டால் மனதிற்கு வேறு தேவை ஏது?

7

இன்ஸ்பெக்டர் வீராசாமியால் கைது செய்யப் பட்ட அருணகிரி ஆறு வருஷம் தண்டனை அடைந்து மதுரைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தான். எப் பொழுதும் கலகலப்பாக இருக்கும் அருணகிரி யாருடனும் பேசுவதில்லை. துக்கமே உருவாய் காணப் பட்ட அவன் சரியாக சாப்பிடுவதில்லை. தினமும் அப்படியே சிட்டுவின் நினைப்பு அவனை விம்ம வைத்தது. தன்னைக் காதலித்த குற்றத்திற்காக "அவள் சுடப்பட்டு இறந்தாள்" என்ற நினைவு அவனைப் பித்தனாக்கியிருந்தது. கொதிக்கும் அவன் நெஞ்சின் ஆழத்திலிருந்து வெளிப்படும் நெடுமூச்சுகள் எல்லாம் சிட்டு, சிட்டு" என்று ஜபித்துக் கொண்டிருந்தன.

அவனிருந்த சிறைப்பகுதிக்கு வார்டராக ஒரு வயதுசென்ற முதியவர் இருந்து வந்தார். தினமும் அவர்தான் அவனுக்கு உணவுகொண்டு வருபவர்.

அவனுக்குக் கொண்டு வந்த உணவைக் கையில் வைத்துக்கொண்டு பழைய உணவு அப்படியே இருப்பதைப் பார்த்தார். அவருடைய உள்ளத்தில் இரக்கமும், கனிவும் உண்டாயிற்று. "அருணகிரி" என்று அன்பாகக் கூப்பிட்டார். "தம்பீ, சிறைக்குள்ளே வருவதற்கு முன்னாலே சிந்திச்சிருக்கணும். இப்போ வருந்தி என்ன பிரயோஜனம்?" என்றார். அருணகிரி தலைநிமிர்ந்து அந்த முதியவரைப் பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர்த்துளிகள் சுரந்தன. அவன் கண்ணீரை முதியவர் துடைத்து "ஆறு வருஷம் தானே தம்பீ? ஆறு வருஷம் ஆறு நாளாக ஓடிப் போயிடப் போகிறது. அப்புறம் வேணும்னு ஏதோ ஒரு வியாபாரத்தைப் பண்ணிக்கிட்டு ஒழுங்கா முறையா இரு. அதுக்காக........"

அருணகிரி இடைமறித்து "சிறைப் பட்டதிற்காக நான் வருந்தவில்லை தாத்தா. ஆறு வருஷம் என்ன? அறுபது வருஷமானாலும் நாட்டின் விடுதலைக்காக நான் சிறையிலேயே கிடப்பது பற்றி கவலைப்பட மாட்டேன். இனி எனக்கென்ன? சிறைக்குள் இருந்தால் என்ன? வெளியில் இருந்தால் என்ன? ஒளிபரப்பக் கூடிய சுடர் அவிந்து விட்டபின் வெறும் விளக்கு எதற்குச் சமானம்? சிட்டு என்ற பெயர் கொண்ட என் அருமைக் காதலி—என் ஆருயிர் மனைவி எனக்காகவே உயிர் விட்டாள். அந்தத் தியாக உருவம் என்னாலேயே அழிந்து மண்ணோடு மறைந்து விட்டது. இனி வாழ்க்கை ஏது? பெரியவரே, எல்லாம் தீர்ந்து போய்விட்டது. இனி இந்த நடைப்பிணம் எங்கு இருந்தால் என்ன?" என்று பெருமூச்சு விட்டு, "நான் சிறகிழந்த பறவையாகிவிட்டேன்" என்று சொல்லி அந்த வார்டரின் தோளில் சாய்ந்து துக்கத்தின் எதிரொலியாக ஒரு விம்மல் விம்மினான்.

அந்த முதியவர் அவனை அன்புடன் தடவிக் கொடுத்து தன் உடலோடு அணைத்துக்கொண்டு "தம்பி, சிறகை இழந்தபின்னும் பறவையை பறவை என்றுதானே சொல்லுகிறோம்.? ஆனால் அந்தப் பறவையால் வான வெளியில் உல்லாசமாகப் பறந்து திரிய முடியுமா? முடியாதுதான். அது தன்னுடைய கூட்டுக்குள் இருந்தபடியே இன்னிசை எழுப்பி கூவி யாவரையும் மகிழ்விக்கிறது. இதர பறவைகள் தங்கள் சிறு குஞ்சுகளை கூடுகளில் விட்டு விட்டு இறைதேடிச் செல்லும்போது அக்குஞ்சுகளுக்குக் காவலாய் இருக்கிறதே! சிறகை இழந்த பிறகு இனி வாழ்வே இல்லை, உயிருடன் இருந்து இனி பயனில்லை என்று ஓய்ந்து விடுகிறதா? பறவைக்கே இந்த அறிவு இருக்குமானால் மனிதர்களாகிய நமக்கு எவ்வளவு அறிவு இருக்கவேண்டும்? பிறப்பவர் இறப்பது உறுதி என்று தெரிந்த நாமே தவறு செய்தால்? உன் சிட்டு செய்திருக்கும் தியாகம் மகத்தானது அல்லவா? ஊரிலிருக்கும் எல்லோரையும் தியாகம் செய்யத் தூண்டியவன் நீதானே? அப்படியிருக்க உன் சிட்டு தியாகம் செய்ததற்கு பெருமை படுவாயா? அல்லது அழுது சிறுமை படுவாயா? பைத்தியம்! இந்த சிறைக்கு வந்த உன்னைவிட பெரிய பெரிய தியாகிகளை எல்லாம் என் சர்வீஸிலே பார்த்திருக்கிறேன். தேச சேவைக்கென்று வந்தவர்கள் யாருமே மனைவி மக்களுக்காக வருத்தப்படுவதில்லை. கிரிமினில் கைதிகள்தான் சதா பெண்சாதி, பிள்ளை என்று அழுதுகொண்டே இருப்பார்கள்."

"அப்படியென்றால் தேச சேவைக்கும் மனித உணர்ச்சிக்கும் தொடர்பு இல்லையென்று சொல்லுகிறீர்கள்?" என்றான் அருணகிரி.

"மனித உணர்ச்சிதானே தேசசேவைக்கு அடிப்படை? ஆனால் நான் சொல்வது பாசம் இல்லாமல் வாழுபவன்தான் தியாகி. திலகர், லஜபதி ராய், பகவத்ஸிங், குமரன், காந்திஜி, வ. உ. சி. இவர்களெல்லாம் மனைவி, மக்கள் என்று கண்ணீர் விட்டதில்லை.

"மனிதனுக்கு நிம்மதியைத் தருவது வாழ்விலே சேவையும், சாவிலே மயானமும்தான். செத்துப் போன சிட்டு உன் உயிரைக் காப்பாற்றித் தன் னுயிரைக் கொடுத்தது எதற்கென்றால் உன்னால்தான் இந்நாட்டிற்கு நன்மை உண்டாகும் என்று. அதனால் தான் உன்னை விட்டு விட்டுச் சென்றிருக்கிறாள். தண்டனை காலம் வெகு சீக்கிரத்தில் ஓடிவிடும். பிறகு நெஞ்சு உறத்தோடு இந்தப் பரந்த உலகத்தில் காலெடுத்து வை. அதற்குள் தேசமும் சுதந்திரம் பெற்றுவிடும். சுதந்திரமடைந்த தாய்நாட்டின் பெருமையை உயர்த்த உன்னால் ஆன பணியைச் செய்."

"சுடுதலும் குளிரும் உயிர்களுக்கில்லை சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை" என்ற பாரதியின் பாட்டை ஞாபகத்தில் வை. ஒரு பெண்ணின் நினைப்பில் தேசத்தை மறந்து விடும் தீங்கை செய்யாதே. தைரியமாக சாப்பிடு. நான் நாளை காலை வந்து பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு அப் பெரியவர் நகர்ந்தார்.

ஆச்சரியத்தால் வாயடைத்துப் போனான் அருணகிரி. "ஐயா தாங்கள் யார்? இவ்வளவு நாளும் தங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையே?"

"தம்பீ, நான் சாதாரணமானவன். திருநெல் வேலி ஜில்லா. வ. வே. சு. ஐயர் காலத்து ஆள்.

சேரமாதேவியில் பணி புரிந்தவன். விதியின் கொடுமையால் இங்கு வந்து சேர்ந்தேன். என் ரத்தத்தில் தேசபக்தியை ஊட்டியவர்கள் வ. வே. சு. ஐயர், பாரதி, நீலகண்ட பிரம்மச்சாரி, வாஞ்சி ஐயர், வ. உ. சிதம்பரனார் முதலானவர்கள். அந்த உத்தம தியாகிகளின் வரிசையில் நீயும் ஒரு பெரிய தியாகியாக வேண்டுமென்பதுதான் என் ஆசை. உன் முகத்தில் அந்தத் தெளிவு இருக்கிறது. நான் வருகிறேன்" என்று சொல்லி வெகு கம்பீரமாக நடந்து சென்றார்

அருணகிரியின் உடம்பு புல்லரித்தது. புத்துணர்ச்சி பெற்றான். அப் பெரியவர் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா! உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா" என்று வெகு தூரத்தில் ஏதோ ஒரு ஒலிபரப்புக் கருவியில் பாடிய பாடல் அவன் உள்ளத்தில் புதிய ஒளியை உண்டாக்கியது.

8

டாக்டர் நிர்மலாவின் 'டிஸ்பென்ஸரியில் நர்ஸ்' வேலையை நன்றாகப் பழகிக் கொண்டாள் சிட்டு. பாதி டாக்டர் ஆகி விட்டாள் என்று கூட சொல்லலாம். அவ்வளவு திறமையாக தன் பணியைச் செய்து வந்தாள்.

கடவுளுடைய கருணையே கருணை. அபாரமான அன்பைப் பொழிந்த அருணகிரி "மறைந்ததும்" டாக்டர் நிர்மலா அவளிடம் வியக்கத்தக்க அன்பைப் பொழிந்து கொண்டிருந்தாள். ஆம் கடவுள் கதவை அடைத்தால் ஜன்னலைத் திறந்து விடுவார். நிர்மலா

வின் அன்பிலும், துன்பப்பட்டவர்களுக்கு செய்யும் சேவையிலும் கவலைகளை ஓரளவு மறந்து காரியங்களைச் செய்து கொண்டு வந்தாள் சிட்டு.

டாக்டர் நிர்மலாவிற்கு ஒரு மூத்த சகோதரர் இருந்தார். அவர் பெயர் நடராஜபாரதி. அவருக்கு வயது அறுபது இருக்கும். அவர் சிறந்த கல்விமான். பெரிய ஆராய்ச்சியாளர். "பாரதி கலா பவனம்" என்ற பெயரில் சென்னையில் ஒரு சிறந்த சாந்தி நிகேதன் போன்ற பெரிய ஸ்தாபனத்தையும், கலா நிலையத்தையும் நடத்திக் கொண்டு வந்தார். சிற்ப ஆராய்ச்சியிலும், சித்திரக்கலையிலும் வல்லவர். ஏழைகளுக்கு தொண்டு செய்வதில் நல்லவர். சிறந்த கவிஞர் உயர்ந்த பாடகர்.

எப்பொழுதாவது ஓய்வு பெற வேண்டுமென்று விரும்பினல் அவர் அழகர்கோவிலிலுள்ள தம் அருமைத் தங்கை நிர்மலா வீட்டிற்கு வருவது வழக்கம். இப்பொழுதும் அப்படியே வந்தார்.

நிர்மலா அவரை அன்புடன் வரவேற்று உபசாரம் செய்தாள். நிர்மலாவின் சகோதரருக்கு சகல பணிவிடைகளும் செய்யும் வாய்ப்பு சிட்டுவுக்கு ஏற்பட்டது. சிட்டுவின் கதையை நிர்மலாவின் மூலம் கேட்ட நடராஜபாரதிக்கு சிட்டுவின் மீது ஒரு தனி வாஞ்சை ஏற்பட்டது.

சிட்டுவின் நடை, உடை, பாவனை முதலியவைகளை இரண்டு மூன்று தினங்கள் கவனித்த நடராஜ பாரதி அவள் ஒரு "பட்டை தீட்டாத வைரம்" என்பதைப் புரிந்து கொண்டார். பட்டை தீட்டி விட்டால் அதைப்போல "ஜொலிப்பு" வேறு எந்த ரத்தினத்துக்கும் இருக்காது என்று கருதினர். தன்வசம்

இருந்த சிற்பங்கள் வரையப்பட்ட ஒரு ஆல்பத்தை சிட்டுவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். பின்னர் டாக்டர் நிர்மலாவும், அவரும் எங்கேயோ வெளியில் சென்றார்கள்:

சிட்டுவின் உள்ளத்தில் புகைந்துகொண்டிருந்த கலையுணர்ச்சி நடராஜபாரதியினாலும், நிர்மலாவினாலும் ஊதி விடப்பட்டு நெருப்பாக எரிய ஆரம்பித்தது. பாரதி கொடுத்துச் சென்ற ஆல்பத்தைப் புரட்டிப் பார்த்தாள். பொழுது போக்குக்காக முதல் சிற்பத்தைப் பார்த்து தானும் அதுபோல் நிற்க முயற்சித்தாள். பிறகு இரண்டாவது பக்கத்தைப் புரட்டி அப்பக்திலுள்ள சிற்பத்தைப்போல் வளைந்து நிற்கப் பழகினாள். அதே பிரகாரம் ஒவ்வொரு சிற்பமாகப் பார்த்துப் பார்த்து தனது உடலையும் வளைத்து வளைத்து நிற்கப் பழகினாள். எதிரே உள்ள பெரிய பீரோ நிலைக்கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்துக் கொண்டே இவ்வளவும் செய்தாள்.

வெளியில் சென்றிருந்த நிர்மலாவும், பாரதியும் திரும்பி வந்து திரைக்குப்பின்னால் நின்று சிட்டுவின் செய்கைகளைப் பார்த்து வியந்து கை தட்டினார்கள். சிட்டு வெட்கப்பட்டு சிரித்துக் கொண்டு வேகமாக உள்ளே ஓடினாள்.

நடராஜபாரதி நிர்மலாவிடம் சிட்டு கலைத்துறையில் பயிற்சி பெற்றால் நாளடைவில் பெரிய நாட்டிய நட்சத்திரமாகலாம். அப்படி ஏதாவது அவளுக்கு பிரியம் இருந்து, அவளுடைய தாயும் சம்மதித்து, உனக்கும் இஷ்டமிருந்தால் அவளை சென்னைக்குக் கூட்டிக் கொண்டு வா என்று சொல்லிவிட்டு நடராஜ பாரதி சென்னைக்குப் புறப்பட்டார்.

9

சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் சிட்டு தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபொழுது திடீரென்று அவளுக்குத் தலை சுற்றியது. மயக்க மாகவிருந்தது. எழுந்தாள், உட்கார்ந்தாள். திண றினுள், நெற்றியில் கையை வைத்து அழுத்திப் பிடித்தவாறு உட்கார்ந்துவிட்டாள். டாக்டர் நிர் மலா என்னமோ, ஏதோ என்று அவளைச் சோதனை செய்து பார்த்தபொழுது கர்ப்பமாக இருப்பது தெரிந்தது. நிர்மலாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இம்மாதிரி ஒரு இக்கட்டான நிலைமை சிட்டுவுக்கு ஏற்படும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. எதுவாக இருந்தாலும் சரி, கடவுள் விட்ட வழி நடக்கட்டும் என்று முடிவு செய்து அவளை படுக்கையில் படுக்க வைத்து வேண்டிய சிகிச்சை களைச் செய்து சிட்டுவின் தாய் காமாட்சிக்கும், பாட்டி அங்கம்மாளுக்கும் சொல்லி அனுப்பினுள்.

அவர்கள் இருவரும் இந்த செய்தியை அறிந்து என்ன செய்வதென்று திகைத்தார்கள். பின்னர் டாக்டர் நிர்மலாவைத் தனியாகக் கூப்பிட்டு "டாக்டர் அம்மா, நீங்கதான் எங்கள் குடும்பத்தைக் காப்பாத் தின புண்ணியவதி. என் மகன் தேசத்துக்குன்னு உயிர் விட்டு தியாகம் பண்ணிருக்கான். இருக்கிறது ஒரு மகள்தான். அவளும் நாலு பேருக்கு தெரிஞ்சு கல்யாணமாகி ஒரு பிள்ளையைப் பெத்தா கௌரவ மாக இருக்கும். இப்போபுருஷன் இல்லாமே, அருணா கிரியை இவளா கல்யாணம் பண்ணிகிட்டது யாருக் கும் தெரியாமே இருக்கிறப்போ "புருஷன் இல்லாமே பிள்ளை பெற்றுவிட்டாள்" என்ற பழிச்சொல் எங்க குடும்பத்துக்கு வருமே! நான் என்ன செய்வேன்?

நீங்கதான் டாக்டர் காப்பாத்தணும்" என்று காமாட்சி அம்மாள் நிர்மலாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு கலங்கி அழுதாள்.

டாக்டர் நிர்மலா மனம் குழம்பி "இனிமேல் ஆகவேண்டியதை நிதானமாக யோசனை செய்து எல்லாம் சரியாக செய்யலாம். கவலைப்படவேண்டாம். ஆனல் கடவுளுக்கு விரோதமாக சிசுஹத்தி செய்வதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். சிட்டுவும் அதற்குச் சம்மதிக்கமாட்டாள். அதனுல் அந்த பாப காரியத்தை நினைக்காமல் வேறு யோசனை செய்து நல்லபடியாக எதுவும் செய்யலாம்" என்று சமாதானம் செய்து காமாட்சியையும், அங்கம்மாவையும் அனுப்பி வைத்தாள்.

டாக்டர் நிர்மலாவையே கண்கண்ட தெய்வமாகக் கருதி இருந்த காமாட்சியும், அங்கம்மாளும் எப்படியும் நிர்மலா தங்களுக்கு ஒரு நல்வழி காட்டுவாள் என்று நம்பிக்கையுடன் நெஞ்சில் நிறைந்துவிட்ட வேதனையைச் சுமந்துகொண்ட தாய்க்கு மகள் சுமைதாங்கியாகவும் மகளுக்குத் தாய் சுமைதாங்கியாகவும் நடந்தார்கள்.

சிட்டுவுக்குதான் "கர்ப்பம் தரித்தவள்" என்பதை அறிந்ததும் மனதில் வெட்கமும், உள்ளத்தில் துக்கமும், ஒரு பக்கத்தில் பயமும், என்ன செய்வது என்று தெரியாத திகைப்பும், தன் கணவனின் ஞாபகார்த்தமாக கிடைக்கப்போகும் பரிசைப் பற்றிய இன்ப நினைப்பும், புயலும், தென்றலும், இடியும், மின்னலும் நெருப்பும், குளிர்ச்சியும் மாறி மாறி தாக்க கண்மூடி மௌனமாக அருணகிரியை நினைத்தவாறு படுத்திருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர் பெருகி வழிந்து தலையணை முழுவதிலும் ஈரமாக்கிவிட்டிருந்

தது. அதைக் கவனித்த நிர்மலா சிட்டுவை அன்பாக கடிந்து "சிட்டு, ஊர் பேர் தெரியாத எவனே ஒருவனை திருமணம் செய்துகொண்டு நூருண்டு கணவனும் மனைவியுமாக வாழ்வதைவிட ஒரு சிறந்த தேச பக்தி கொண்ட தியாகியை மணந்துகொண்டு திருமணமான மறுநாளே விதவையாகிவிட்டாலும் வாழ்நாள் பூராவும் நான் இன்ன தேச பக்தனின் மனைவி என்று சொல்லிக்கொள்ளுவதில் உள்ள பெருமை வேறு எதிலும் இல்லை. நாடு சுதந்திரமடைந்ததும் உனக்குக் கிடைக்கப்போகும் மரியாதையை நான் கற்பனை செய்து பார்த்தால் அதற்கு ஈடான காட்சி உலகத்தில் இல்லை என்றே சொல்லலாம். இப்படிப்பட்ட ஒரு தேச பக்தனை மணந்து கொண்டு, அதனால் தாய்மையடைந்து, அந்தத் தியாகியின் குழந்தையை நல்ல முறையில் வளர்க்கவேண்டிய பொறுப்பு உன்னைச் சேர்ந்ததாக இருக்க, நீ கவலைப்பட்டு அழுது வீணுக மனதைச் சஞ்சலப் படுத்திக்கொள்வது தவறு. உற்சாகமாக, கலகலப் போடு உயர்ந்த விஷயங்களை காதால் கேட்டு, சிறந்த அறிவுரைகளைப் படித்து, இச்சமயத்தில் உன் கருவில் வளரும் குழந்தையை அறிஞுகவும், வீரனுகவும் ஆக்கவேண்டுவது உன் பொறுப்பு. இதுவே ஒவ்வொரு தாய்மார்களுக்கும் தனிச் சிறப்பு" என்று புத்திமதிகள் கூறினுள். சிட்டுவும் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டாள்.

மாதங்கள் சென்றன. டாக்டர் நிர்மலாவின் உயர்ந்த கண்காணிப்போடு சிட்டு பிரசவத்துக்கு தயாரானுள். காமாட்சியும், அங்கம்மாளும் நிர்மலாவிடம் ரகசிய ஆலோசனை நடத்தினுர்கள். காமாட்சி சொன்னுள்—"இன்றைக்கு காலையில் சேலத்திலிருந்து வந்த எங்க சொந்தக்காரர் ஒருவரிடம் அருண

கிரியைப் பற்றி விசாரித்தேன். அவன் உயிருடன் இருப்பதாகவும், மதுரைச் சிறையில்தான் இருக்கிறன் என்றும் சொன்னர். இந்தச் செய்தியை கேட்டதும் என் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருந்தது. என் மகள் சிட்டு புருஷனை இழந்தவள் இல்லை. அவள் மஞ்சள், குங்குமத்துடன் வாழப் போகிறவள் என்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன். ஆனல் அடுத்த வினடி ஒரு பயம் உண்டாயிற்று. என்ருவது ஒருநாள் அருணகிரி வெளியே வரும் சமயம் சிட்டு குழந்தையுடன் இருப்பதைப் பார்த்து தவருக நினைத்து, புருஷன் மனைவியாக வாழ இஷ்டப்படாமல் கைவிட்டால் என்ன செய்வது என்ற கவலை என் உயிரை வாங்குகிறது. அதுக்கு நீங்கதான் டாக்டர் ஒரு வழி சொல்லணும் என்று காமாட்சி கல்லும் கரையும் வண்ணம்" கண்ணீர் விட்டு அழுது தாய்ப்பாசத்தின் உச்சியில் நின்று நிர்மலாவின் தீர்ப்புக்கு ஏங்கிஞள்.

அருணகிரி உயிருடன் இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்த நிர்மலா ஆழ்ந்து யோசனை செய்தாள். "காமாட்சி சொல்வதில் அர்த்தமிருக்கிறது. சிட்டு நல்வாழ்வு வாழவேண்டுமானல் அருணகிரி இவளை ஏற்றுக்கொண்டு இருவரும் கணவன் மனைவியாக வாழ்வதென்ருல் அதற்குக் குழந்தை தடையாக இருந்துவிடக்கூடாதே" என்று நீண்ட நேரம் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தாள். அதாவது "குழந்தை பிறந்ததும் சிட்டு மயக்கம் தெளியாமல் இருக்கும்படி செய்து, குழந்தையை பாட்டி அங்கம்மாளிடம் கொடுத்து பக்கத்தில் எங்கே யாவது கொண்டுபோய் வளர்க்கச் செய்வது. குழந்தை இறந்ததாக சிட்டுவிடம் சொல்லிவிடுவது. சிட்டுவின் மனமாற்றத்திற்காக சென்னைக்குச்

சென்று பாரதி கலா பவனத்தில் தன் சகோதரர் நடராஜு பாரதியிடம் ஒப்படைத்துகலைகளில் ஈடுபடச் செய்வது, பின்னர் அருணகிரி விடுதலை ஆனதும் இருவரையும் ஒன்று சேர்த்துவைத்து, ஏதாவது ஒரு கோவிலில் சிறப்பாக கல்யாணத்தை நடத்தி அன்றையதினம் குழந்தையை அவர்களுக்குத் திருமணப் பரிசாக கொடுப்பது" என்று தீர்மானம் செய்தாள். இந்த முடிவை காமாட்சி அம்மாளும், ஒத்துக்கொண்டாள். இதை ரொம்ப ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

அதன் பிறகு சில தினங்கள் கழித்து ஒரு அழகிய ஆண் குழந்தையை சிட்டு பெற்றாள். ஏற்கனவே போட்ட திட்டப்படி எல்லாவற்றையும் ஒழுங்காக நிறைவேற்றி வைத்தாள் டாக்டர் நிர்மலா.

மிகவும் துக்கமும், ஏக்கமும் அடைந்த சிட்டு இறந்துபோன தன் குழந்தையைக்கூட கண்ணால் பார்க்க முடியவில்லையே என்று அழுதுகொண்டே இருந்தாள். "காதலன் தந்த காதல் பரிசைக் கண்குளிரக் கண்டு களிக்க கடவுள் கருணை காட்டாது பறித்துச் சென்று விட்டாரே" என்று ஏங்கினாள். ஏற்கெனவே இதெல்லாம் எதிர்பார்த்த விஷயமாகையால் டாக்டர் நிர்மலா சிட்டுவிடம் சொல்லவேண்டியவைகளை அவள் மனத்தில் படும்விதமாகச் சொல்லி அவளை சமாதானப்படுத்தினாள். சில தினங்களுக்குப் பிறகு சிட்டுவையும் அவள் தாய் காமாட்சியையும் கூட்டிக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டாள்.

வண்டி சென்னையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. எதிர் நோக்கி இருக்கும் காட்சிகளெல்லாம்

பின்நோக்கி ஓடிக்கொண்டிருந்தன. அதேபோல் தான் புதுவாழ்வு நோக்கிச் சென்னைக்கு சென்று கொண்டிருக்கும் சிட்டுவின் எண்ணமெல்லாம் கடந்த காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

தலைவெட்டி முனியப்பன் சன்னதியில் தமையனைச் சந்தித்தது, இறப்போடு உறவாடிக் கொண்டிருந்த அவன் தனக்கு ஒரு புதிய உறவை ஏற்படுத்தி வைத்து விட்டுச் சென்றது, புதியவனைக் கருத்திலே காதல் கணவனாக ஏற்றுக் காலத்தை ஓட்டியது. அவன் புதியதோர் உருவத்தைத் தன் கருவிலே உருவாக்கி விட்டுப் போலீசாரால் சுடப்பட்டு மறைந்து போனது. காதலன் காணிக்கையாக விட்டுச் சென்ற அந்த கருவும் கால அரக்கனால் கவர்ந்து செல்லப் பட்டது.

இதை நினைத்ததும் அவள் இதயத்திலிருந்து ஓர் ஏக்க பெருமூச்சு வெளிப்பட்டது. அந்தப் பெருமூச்சிலே தாய்மையின் வேதனை தெரிந்தது. பெற்ற பிள்ளையின் பிரிவு வெளிப்பட்டது.

அச்சமயம் "அம்மா" என்ற மழலைமொழிச் செல்வத்தின் அன்பு அழைப்பு கேட்டது. திகைப்புற்ற அவள் ஆசையோடு எதிரே பார்த்தாள். தத்தித் தத்தி வந்த ஒரு சின்னஞ் சிறுவன் எதிர் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் தாயின் மடியைப் பிடித்திழுத்துக் கொண்டிருந்தான்.

அவள் பக்கத்தில் அமர்ந்திருந்தவள் தன் கணவனைப் பார்த்து புன்னகைப் பூத்தாள். பின் தன் அருமைக் குழந்தையை வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். அதைப் பார்த்ததும் சிட்டுவின் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த

தாய்மை கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து விட்டது. அடக்க முடியாத வேதனையோடு முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

மனது எதைக்கண்டு அஞ்சுகிறதோ பார்க்காமலிருக்க நினைக்கிறதோ அதுதான் கண்முன்னே தோன்றிக் கொண்டிருக்கும். இதுதான் இயற்கையின் கூத்து. இதற்கு சிட்டு மட்டும் தப்பிவிட முடியுமா என்ன?

பக்கத்திலே பார்வையைத் திருப்பியவள் அங்கே ஒரு பச்சிளங்குழந்தை தன் தாயின் மடியில் படுத்தவாறு பால் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

எந்தத்தாய்ப் பாசத்திற்கு அணைபோட நினைத்தாளோ அந்தத் தாய்ப்பாசம் இந்த காட்சியைப் பார்த்ததும் வெள்ளப் பெருக்கெடுத்தது. அந்தக் குழந்தை பால் குடிப்பதையே இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பொல்லாத குழந்தையும் இவளைப் பார்த்தவுடன் பால் குடிப்பதையும் விட்டு விட்டுத் தன் பொக்கைவாயைத் திறந்து சிரித்தது. அந்த சிங்காரச் சிரிப்பில் தன்னையே மறந்து போனாள்.

"அம்மா, அந்தக் குழந்தையைக் கொஞ்சம் இப்படித் தருகிறீர்களா" என்று அந்த தாயைப் பார்த்துக் கேட்டாள்.

சிட்டுவை ஏறிட்டுப் பார்த்த அந்ததாய் அவள் கண்களில் தெரிந்த கனிவையும் தாய்ப்பாசத்தையும், ஏக்கத்தையும் கண்டு "இந்தாம்மா" என்று குழந்தையைக் கொடுத்தாள்.

சிட்டு ஆசையோடு அந்தக் குழந்தையை இருகை யும்ஏந்தி வாங்கிக் கொண்டாள். அவள் கரங்களிலே தவழ்ந்த குழந்தை மீண்டும் அவளைப் பார்த்துச் சிரித்தது. அது அவள் இதயவீணையை மீட்டுவது போல் இருந்தது. அப்படியே தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். அவள் ஸ்தனத்தில் பால் சுரந்தது.

அணைத்துக் கொண்டவளின் கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் கன்னக் கதுப்புக்கள் வழியே வழிந்து கொண்டிருந்தது. அதைப்பார்த் ததும் அந்தத் தாய் மட்டு மல்ல அவளைப் பெற் றெடுத்ததாயும் பதறிப் போனாள்.

“ஏம்மா அழுறீங்க ?” குழந்தையின் தாய் கேட் டாள்.

“உம். ஒண்ணுமில்லேம்மா. அவளுக்குத் தன் குழந்தையின் ஞாபகம் வந்து விட்டது” என்றவாறு அவள் பிடியில் பிணைப்புண்டுக் கிடந்த குழந்தையைப் பிரித்தெடுத்து அதன் தாயிடமே கொடுத்தாள் சிட்டுவின் தாய் காமாட்சி.

அவ்வளவுதான் சிட்டுவின் துயரம் பீறிட்டுக் கொண்டு வெளிக் கிளம்பியது. அதைத்தன் தாயின் மடியிலே அணைபோட்டுவிட முயன்று கொண்டிருந் தாள். ஆம்! காமட்சி அம்மாளின் மடியில் படுத்த வள் சென்னை வந்து சேரும் மட்டும் எழுந்திருக்கவே இல்லை.

கரை புரண்டோடிய துன்ப வெள்ளத்திற்கு அணைபோட முயன்றால் அது விழலுக்கிறைத்திட்ட நீரின் கதியாகுமென்று காமாட்சிக்குத் தெரியும். அதனால் அவளும் சிட்டுவை அவள் மனப்போக்கின் படியே விட்டு விட்டாள்.

வண்டி சென்னை வந்தபின் நிர்மலா சொல்லி காமாட்சி சிட்டுவை எழுப்பினாள். திடுக்கிட்டெழுந் தாள் சிட்டு. இப்பொழுது அவளுடைய முகத்திலே ஒருவித அமைதி நிலவியது. அது கண்டு காமாட் சியும், நிர்மலாவும் தமக்குள் மகிழ்ந்து கொண்டனர்.

"சிட்டு இறங்கம்மா., சென்னை வந்து விட்டோம்" என்றாள் நிர்மலா.

சிட்டு மௌனமாக அவர்கள் பின்னலேயே இறங்கினாள். புகை வண்டி நிலயத்தை விட்டு வெளியே வந்த மூவரும் ஒரு வாடகை காரைப் பிடித்துக் கொண்டு அடையாற்றிலிருக்கும் பாரதி கலா பவனத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

நடராஜபாரதி அகமகிழ்வோடு இவர்களை வரவேற்றார். சிட்டுவும் பாரதி கலா பவனத்தில் அடியெடுத்து வைத்தவுடன் எதோ ஒரு புது உலகத் துக்கு வந்து விட்டவளைப்போல் பூரித்துப் போனாள்.

மகளின் சிரித்த முகம் கண்டு காமாட்சியும் மகிழ்ச்சியடைந்தாள். நிர்மலாவும் "எல்லாம் இறை வன் விட்ட வழி. இனி சிட்டு புதுப்பிறவி எடுத்து விடுவாள்" என்று எண்ணி, மகிழ்ச்சியோடு எல்லோ ரிடமும் விடைபெற்றுக் கொண்டு அடுத்த வண்டி யிலேயே ஊர் திரும்பி விட்டாள்.

10

பாரதி கலா பவனத்திலுள்ள நூற்றுக்கணக் கான குழந்தைகளைப் பார்த்து ஒருவாறு தன் துக் கத்தை மறந்தாள் சிட்டு. நடராஜபாரதி மிக்க மகிழ்ச்சியுடன் சிட்டுவுக்கு "கலையரசி" என்ற பெய ரைச் சூட்டி அவளுக்கும் அவள் தாய்க்கும் ஒரு குடில் ஒன்றை அமைத்துக் கொடுத்தார்.

நடராஜபாரதி சிறந்த காவியங்கள், நாடகங்கள் இயற்றி இருக்கிறார். அவைகளை மேடைகளில் நடனமாகவும், நாடகமாகவும் நடத்தி அதன் மூலம் வசூல் ஆகும் பணத்தைக் கொண்டு கலா பவனத்தை நடத்தி வந்தார். நடராஜபாரதிக்கு மக்களிடம் நல்ல செல்வாக்குண்டு. அவருடைய காவியங்கள், நாடகங்கள் இவைகளைப் பார்ப்பதில் போட்டிப் போட்டுக்கொண்டு மக்கள் கூடுவார்கள்.

"பாரதி கலா பவனம்" சென்னையில் மிகச் சிறந்த கலாநிலையமாக விளங்கியது. பெரிய சோலையின் நடுவே ஆங்காங்கே சிறுசிறு அழகிய குடில்கள், பெரிய கட்டிடங்கள், கல்வி கற்கும் குழந்தைகள் ஓடியாடிப் பாடித்திரிவது வர்ண ஜாலமாக இருக்கும் வனதேவதைகள் போல் இளம் பெண்கள் அங்கு மிங்கும் செல்வது ஏதோ நந்தவனத்திலுள்ள செடிகள் ஊர்வது போலிருந்தது. கலா பவனத்தில் எங்கு நோக்கினும் சரஸ்வதி கடாட்சம் சுடர் விட்டுப் பிரகாசித்தது. ஒரு பக்கம் சிலர் சித்திரங்கள் எழுதி பழகிக் கொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் போட்டி போட்டுக்கொண்டு அக்கலையைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ரவிவர்மாவைப் போல் ஆகி விட வேண்டுமென்று நடராஜபாரதியின் ஆசை. மற்றொரு பக்கத்தில் சிற்பக் கலையைப் பல மாணாக்கர்கள் கற்றுக் கொண்டிருந்தார்கள். வேறொரு பக்கத்தில் இசை வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அதில் வீணை வாசிப்போர் ஒரு பக்கம், பிடில், புல்லாங்குழல், மிருதங்கம் இதுபோன்ற வாத்தியங்கள் கற்போர் வேறொரு பக்கம். நாட்டியம் கற்றுக்கொள்ளும் ஒரு பிரிவில் பல அழகிய இளம்பெண்கள் இருந்தனர். அவர்களுக்கு நடுவே—நட்சத்திரங்களுக்கு மத்தியில்

சந்திரனைப்போல் சிட்டு என்ற கலையரசி பிரகாசித்துக் கொண்டிருந்தாள்.

புத்தியில் மூன்றுவிதம் உண்டு. ஒன்று கற்பூர புத்தி, இன்னொன்று கரிபுத்தி, மற்றொன்று வாழை மட்டைப் புத்தி. கற்பூர புத்தி என்பது எப்படி கற்பூரத்தை நெருப்பின் அருகில் காட்டியதும் பற்றிக் கொள்ளுமோ அப்படிச் சிலருடைய புத்தி எதைச் சொன்னாலும் உடனே விளங்கிக்கொள்ளும்

கரிபுத்தி என்பது நெருப்பில் கரியைப் போட்டு பலதடவை ஊதினாலும் முதலில் புகைந்துகொண்டே இருக்கும். பின்னர்தான் நெருப்புப் பிடிக்கும். இது போல் சிலருக்கு ஒரு விஷயத்தை பலமுறை எடுத்துச் சொல்லிதான் விளங்க வைக்க வேண்டும்.

வாழைமட்டைப் புத்தி என்பது நெருப்பின்மீது வாழைமட்டையைப் போட்டால் இருக்கிற நெருப்பையும் அணைத்து விடும். அதைப்போல் சிலர் எதைச் சொன்னாலும் விளங்காதவர்களாகவும், சொல்லிக் கொடுப்பவர்களை மடையர்களாகவும் செய்து விடுவார்கள்.

இந்த மூன்று புத்திகளில் கற்பூர புத்தி போல கலையரசி விளங்கி வந்தாள்.

பரத நாட்டிய ஆசிரியர் வியக்கும் வண்ணம் நாட்டியக் கலையைப் பயின்று நல்ல பேரும், புகழும் பெற்றாள்.

நடராஜபாரதி தான் எழுதிய பல காவியங்களிலும், நாடகங்களிலும் கலையரசியை நடிக்கவைத்தார். கலையரசி நடித்த நாட்டிய நாடகங்கள் மிக்க கவர்ச்சியாகவும் எல்லோரும் ஆஹா என்று வியக்கும்

வண்ணம் அமைந்திருந்தது. கலையரசியின் புகழ் சுடர் விட்டுப் பிரகாசித்தது.

"மலைகளில் உயர்ந்தது இமயமலை. மலர்களில் சிறந்தது செந்தாமரை. சிலைகளில் சிறந்தது நடராஜர்சிலை. செல்வத்தில் உயர்ந்தது கல்விச் செல்வம். கலைகளில் உயர்ந்தது கலையரசியின் நாட்டியக் கலை" என்று பத்திரிகைகளும், வல்லுணர்களும், அறிஞர்களும் போற்றி புகழ்ந்தார்கள்.

நடராஜபாரதியின் நாடகத்தையும், அதில் கலையரசியின் நடிப்பையும் பார்த்த பாரதியின் நெருங்கிய நண்பரான சினிமா டைரக்டர் ஒருவர் நடராஜ பாரதியின் நாடகத்தைச் சினிமா எடுக்கவும், கலையரசி அதில் நடிக்கவும் விரும்பினர். பாரதி கலா பவனத்திற்கு நிதியாக ஒரு லட்ச ரூபாய் தருவதாகவும் கூறி ரொக்கமாக ஒரு லட்சத்தை நடராஜ பாரதியிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

நடராஜபாரதியும் சம்மதம் கொடுத்தார்.

மேற்படி சினிமா டைரக்டர் கடமை உணர்ந்தவர். நல்ல பண்பாளர். சுயநலம் இல்லாதவர். யோக்கியர். எடுத்த வேலையை முடித்து விட்டுத்தான் வேறு வேலை செய்பவர். நாய் வாய் வைத்த மாதிரியும், திருப்தி நாவிதர் மாதிரியும் திரியும் பல டைரக்டர்களுக்கு மாறுபட்டவர். ஆகவே விறுவிறுவென்று படத்தை எடுத்து முடித்துவிட்டார்.

படம் வெளியானதும் நடராஜபாரதி, கலை அரசி, காமாட்சி அம்மாள் எல்லோரும் போய்ப் பார்த்தார்கள். படம் வெகு நன்றாக இருந்தது. அதில் கலைஅரசி அபாரமாக நடித்திருந்தாள் பத்திரிகைகளும், பொதுமக்களும் "ஓகோ" வென்று

கலைஅரசியை "இமயத்தின் உச்சியில்" ஏற்றி வைத்தார்கள். "சினிமா உலகில் புதிய தாரகை" என்று பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் கலை அரசியின் போட்டோ போட்டு விளம்பரம் செய் தார்கள். ஒரு "குளுகுளு" பத்திரிகை கலைஅரசி யின் படத்தைப் போட்டு அதன் கீழ் "பனி பெய்த மலரோ? பாலில் விழுந்த பழமோ" என்று "கிளு கிளுப்பு" உண்டாக்கும் விதத்தில் எழுதியது.

இந்த உலகம் வாழ்ந்தார்க்கு மாரடிக்கும் உல கம் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். முன் னேறுபவர்களின் காலைப்பிடித்து முதலில் இழுப் பார்கள். முன்னேறிவிட்டால் அதே காலில் விழுந்து கும்பிடுவார்கள்.

கலைஅரசி பெரும் புகழ் அடைந்ததும் பலர் போட்டி போட்டுக்கொண்டு லட்சக் கணக்கில் பணத் தைக் கொண்டுவந்து ரொக்க ரொக்கமாக நடராஜ பாரதியிடம் கொடுத்து, பல படங்களுக்கு "புக்" செய்தார்கள்.

ஒரு பலம் வாய்ந்த பந்தயக் குதிரையை கயிற் றால் கட்டி விட்டால், அது அமைதியாக புல்லை மேய்ந்துகொண்டிருக்கும். ஆனால் அது கட்டவிழ்க் கப்பட்டு பந்தய மைதானத்தில் விடப்படின் வாயு வேகத்தில் பறக்குமல்லவா? அதைப்போல கலை அரசி சினிமா வானில் பிரபல நட்சத்திரமாக ஜொலித்தாள்.

பாரதி கலா பவனம் கலைஅரசியின் புண்ணியத் தால் லட்சுமி கடாட்சமும் பெற்று ஏழைகளும், அனாதைகளும் இன்பமாக வாழ்ந்தார்கள். நடராஜ பாரதி பல அருமையான திட்டங்கள் போட்டு வெகு

நேர்த்தியாக கல்விப் பணியும் கலைப் பணியும், செய்து வந்தார்.

கலைஅரசிக்கு தனியாக அடையார் காந்தி நகரில் ஒரு சிறு பங்களா கட்டிக் கொடுத்தார். “நாம் வாழ வேண்டுமென்பது அவசியமல்ல. வாழ்க்கைக்கு அப்பால் நம்முடைய பெயர் பொறிக்கப்பட வேண்டும் அதுதான் சிறப்பு” என்று நடராஜபாரதி காமாட்சியிடம் கூறி கலை அரசியின்பேரால் பல தர்மங்கள் செய்தார்.

சினிமா துறையில் உள்ள கொடியவர்களின் பாவ காரியங்களில் சிக்காமல் பவனி வந்தாள் கலை அரசி. யாரும் நெருங்க முடியாத நெருப்பாக, கற்பின் இலக்கணமாக திகழ்ந்து வந்தாள் கலைஅரசி.

புஷ்பத்திலிருந்து தேனீ தேன் சேகரிக்கிறது. சிலந்திப்பூச்சி விஷத்தை சேகரிக்கிறது. அதைப் போல சினிமாத் துறையிலுள்ள நல்ல பண்பாளர்கள் கலையில் ஈடுபடும் பெண்களை கலைமகளாகப் பாவிக்கிறார்கள். போக்கிரிகள் விலைமகளாகப் பாவிக்கிறார்கள். இவர்கள் சிலந்திப்பூச்சி போன்றவர்கள். ஆனால் யோக்கியர்கள் போல் நடிப்பார்கள். ரொம்பவும் படாடோபத்தோடு பேசுவார்கள். ஆனால் எவ்வளவு படாடோபத்தோடு பேசினாலும் பக்காத் திருடனை பழகின போலீஸ்காரன் தெரிந்து கொள்ளுவானல்லவா? அதைப்போல நடராஜபாரதி மகா அறிவாளி. யாரையும் எடைபோட்டு விடுவார். ஆதலால் அவருடைய பாதுகாப்பில் கலைஅரசிக்கு எந்தத் தீங்கும் நேராமல் உயர்ந்த நிலைக்கு வந்து கொண்டிருந்தாள். ஓய்வில்லாமல் உழைத்தாள். ஊதியத்தை எல்லாம் தர்மம் செய்தாள்.

அன்று எங்கோ ஒரு குக்கிராமத்தில் யாருக்கும் தெரியாமல் பொம்மை விற்கும் சிட்டுவாக இருந்து பட்டுப்போன அவள், இன்று "கலையரசி" யாகிகலை, உலகில் மட்டுமல்லாது கன்னித்தமிழகமெங்கும் கலை மணம் பரப்பும் கலைத் தெய்வமாக, கலை தேவியாக எல்லோர் உள்ளங்களிலும் ஊடாடிக்கொண்டிருந் தாள்.

ஆம், எங்கும் அவள் புகழ். கலைஅரசியின் கருணை உள்ளத்திற்குப் பாராட்டு. கடந்து முடிந்து போன நான்கு ஆண்டுகளில் அவளால் தோற்றுவிக் கப்பட்ட கலைமன்றங்கள் ஏராளம்! ஏராளம்! அத ஞல் அவள் மக்கள் மன்றத்தில் கருணை நிரம்பிய கடவுளாக, தெய்வமங்கையாகத் தோன்றினுள்.

கலையுலகில் காலடி வைத்தவர்கள் கலைமகளாக அல்ல விலைமகளாகத்தான் வாழ முடியும் என்ற வர லாற்றை மாற்றி அமைத்தாள். கலைமகளாக மட்டும் அல்ல கற்புக் கரசியாகவும் வாழ்ந்து காட்டினுள்.

11

மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த போது தான் ஆண்கள் பெண்களை உற்று உற்றுப் பார்த்தார்கள் என்று சொல்வது பெருந்தவறு. மிக மிக உயர்ந்த நாகரீகத்தின் சிகரத்திலே பகுத்தறிவு வாதிகளாய் வாழும் இந்தக்காலத்தில்தான் ஒரு இள நங்கை நாகரீகத்தின் சின்னமாக ஆடை அணிந்து கொண்டு "டக்டக்" கென்று குதிவைத்த காலணி யின் சப்தத்தை எழுப்பிக் கொண்டு போகும்போது மட்டும் அல்ல, சேலை கட்டிய மாதரைப் பார்த்து விட்டாலே போதும் எல்லோருடைய பார்வையும்

அவளைச் சுற்றியேதான் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

இதற்குப் பட்டணத்துப் பாவையர் மட்டும் தேவையென்பதல்ல. பட்டிக்காட்டுப் பெண்ணாக இருந்தாலும் கட்டான உடலும், காந்தப் பார்வையும் இருந்தாலே போதும். அவர்களையும் விட்டு விட மாட்டார்கள் இன்றைய நாகரீக உலகத்து ஆண் மக்கள்.

இது இயற்கையின் உணர்ச்சி போலும். இதற்கு மனிதனால் அணை போடவும் முடியாதோ? என்றாலும் ஒருவிதத்தில் நாம் மகிழ வேண்டியதுதான். பார்த்துப் பெருமூச்சு விடுவதோடு நிறுத்திக்கொள்ளுகிறானே மனிதன். அந்த அளவில் அவன் மிருகங்களைவிட உயர்ந்தவன்தான்.

இன்றைய சூழலை மட்டும் எடுத்துக் கொள்ளும் போது நாம் ஆண்களை மட்டும் குறை கூறுவதற்கில்லை. ஆண்கள் தவறுகிற அளவுக்குப் பெண்கள் தான் காரணமாக இருக்கின்றார்கள்.

ஆம்! ஆண்களின் உள்ளுணர்ச்சிகளைத் தூண்டி விடும் அளவுக்கு பெண்கள் அறைகுறையான ஆபாச ஆடைகளை அணிந்து கொண்டு தளுக்கிக் குலுக்கி நடுத்தெரு மோகினியாக நடப்பதைப் பார்த்தால் எந்த ஆணின் உள்ளம்தான் வெறி கொள்ளாதிருக்கும்?

வேறு எங்கோ கவனமாக இருக்கும் ஒரு ஆணைத் தங்கள் நடை ஒலியாலும், தங்கள் உடம்பில் பூசிக் கொண்டிருக்கும் வாசனைத் திரவியங்களாலும் ஈர்த்துத் தங்களைப் பார்க்கும்படி செய்துவிடுகிறார்கள். பின்னர் அவர்கள் பார்ப்பது தெரிந்ததும் பாதி

மறைத்தும், மறைக்காமலும் இருக்கும் மேலாடையை எடுத்துக் காட்டி பார்த்தவன் பார்த்தபடி நின்று விடும்படி மெய்மறக்கச் செய்து விடுகிறார்கள்.

மேக்கப் செய்யப்பட்ட போலி உருவம் என்று தெரியாத உணர்ச்சி வயப்பட்டு விட்ட ஆண்களும், அந்தப் பெண்களின் கட்டுடலையும், கண்ணாடிக் கன்னங்களையும், பட்டுத்தெறிக்கும் பார்வையையும் பார்த்துவிட்டு, பாதி உடலிலே மீதி இருந்த இதயத்தையும் இழந்து விடுகின்றார்கள்.

இதனால் சில ரகப் பட்ட பெண்களின் வியாபாரமும் இலகுவில் முடிந்து விடுகிறது. ஆண்களின் மோக உணர்ச்சிப் புயலும் மிகவும் வேகமாக அடிக்க ஆரம்பித்து விடுகிறது. கற்பும் கடைச்சரக்காகி பிளாட்பாரத்தில் பேரம் பேசும் அளவுக்கு வந்து விட்டது.

விஞ்ஞான வளர்ச்சி விருத்தியாக ஆக ஆண் பெண்கள் கலந்து பழகுவதும் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற ஆணும், பெண்ணும் ஒன்றாகப் படிக்கும் போது ஆசிரியர் விளக்கிக்காட்டிய காதல் ஜோடிகள் அம்பிகாபதி அமராவதியும், ரோமியோவும் ஜூலியட்டும், மார்க் ஆண்டினியும், கிளியோபாட்ராவும்தான் கண்முன் காட்சி தருவார்கள். அந்த நினைவுடனேயே வெளியே வருவார்கள். வழியிலே சினிமா போஸ்டர்கள் ஒட்டி இருக்கும். அதிலே காதலனும், காதலியும் கட்டித்தழுவி முத்தம் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அதையே இமைக் காது பார்ப்பார்கள். அவர்களுடைய பருவ

உணர்ச்சி உடலெல்லாம் ஊடுருவிப் பாயும். உடனே அவர்களின் மனக் கண் முன் கல்லூரியில் கற்ற காதலன் காதலியும் தோன்றுவார்கள். காட்சி மாறும். அந்த இடத்தில் அவளும், அவள்வகுப்பில் அவளுடன் மிகவும் நெருங்கிப் பழகும் அவனும் இருப்பார்கள். பருவதாகம் அவளை அவனை நாடி ஓடச் செய்யும். அவனை அவளை நாடி வரச்செய்யும். இருவரும் சந்திப்பார்கள். உடனே அவர்கள் கருத்தில் கண்டதையும், கேட்டதையும் செயல்படுத்திப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பிறக்கும். அந்த ஆசை செயல்படும்போது “ கற்பு ” காற்ருேடு கலக்கிறது.

இதேபோல் பருவமடைந்த எந்த பெண்ணும் தனியே சினிமாவுக்குப் போவது, அங்கே எந்த ஆணுக்குப் பக்கத்திலாவது உட்காருவது, திரைப் படம் திரையில் ஓடும். இவளுடைய மனப்படம் உள்ளத்தில் ஆடும். காதலனும் காதலியும் ஆடிப்பாடி மகிழ்வார்கள். இவள் உள்ளம் அதிலே சபலம் கொள்ளும். அருகிலுள்ளவன் கொஞ்சம் தைரிய சாலி என்ருல் பக்கத்து நாற்காலியில் கை போடுவது போல் அப்படியே அவள் தோள்மேல் போடுவான். அவள் சும்மா அப்படியே திரைப்படத்தில் பார்த்து விட்ட உணர்ச்சியோடு இருந்து விட்டால் அவ்வளவு தான். ஒரு காதல் மகாகாவியத்தையே திரைப்படம் முடியும்முன் முடித்து விடுவார்கள். படம் முடியும் அதன்பின் இவர்களுடைய கதை வழக்கம்போல் தொடர் கதையாகி விடும்.

இன்னும் சிலர் திரைப்படம் பார்த்து விட்டு அதே உணர்ச்சி மயமான நினைவுகளுடன் பஸ் ஸ்டாப்பில் வந்து நிற்பார்கள். அவளுக்கு முன் எவனுவது ஒரு இளைஞன் நிற்பான். பஸ் வரும்

இருவருமே ஏறுவார்கள். இடம் இருக்காது. ஒருவரோடொருவர் முட்டி மோதிக்கொண்டு நிற்பார்கள். எதற்காகவாவது டிரைவர் பிரேக் போடுவார். அப்போது அவள் அவளுக்கு முன்னால் இருப்பவன் மேல் விழுந்து அப்படியே கட்டிப் பிடித்துக் கொள்வாள். கொட்டகையில் தனிமையில் கொழுந்து விட்டெறிந்து கொண்டிருந்த உணர்ச்சி இப்பொழுது காட்டுத் தீயாகி விடும். தணித்துக் கொள்ள இடம் தேடுவார்கள். முடிந்த கதை தொடர்ந்துவிடும்.

வேறு சிலர் பஸ்ஸிலோ அல்லது ரெயிலிலோ பிரயாணம் செய்யும்போது எந்த சீட்டில் இடம் இருக்கிறதோ அந்த சீட்டில் எந்த ஆடவன் இருந்தாலும் போய் பக்கத்தில் உட்கார்ந்து விடுவது. அவன் ஒட்டி உராய்வது. அவள் சும்மா இருந்தால் இலேசாகத் தொடைமீது கை வைத்து பின் அவளுக்கும் சேர்த்து அவனே டிக்கட் எடுப்பது. முதலில் அவள் மறுத்தாலும் பின் சரி செய்து கொள்வது. அப்புறம் விலாசம் தெரிந்து கொள்வது. மீண்டும் அதே பழைய கதை ஆரம்பமாவது........

இப்படி எல்லா விதங்களிலும் ஆணும் பெண்ணும் கலந்து உறவாடி இருப்பதால்தான் இன்று ஒழுக்க நிலை நம் நாட்டில் இவ்வளவு தூரத்திற்கு சீர் கெட்டுக் கிடக்கிறது. பள்ளி மாணவ-மாணவிகள் முதல் ஆசிரியர்கள், டாக்டர்கள், நர்சுகள், மற்றும் இதர அலுவலகங்கள் எல்லாவற்றிலுமே ஆணும் பெண்ணும் சரிநிகராக இருக்க வேண்டி இருக்கிறது.

அதோடு சினிமா, நாடகம், கலை விவகாரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இவைகள் எல்லாமே மேல்நாட்டுப் பாணியை அனுசரித்து நடக்

கிறது. ஆகவே பெண்களின் கற்பும், அந்த முறைப்படி மேல் நாட்டைப்போல்தானே இருக்க முடியும்?

மற்ற விவகாரங்களில் மேல்நாட்டு முறையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிக் கொண்டு "கற்பு" மட்டும் பழைய வழக்கப்படியே இருக்க வேண்டும் என்று பழம்பெருமை பேசலாமா? பேசினுல் மட்டும் அந்த முறை வந்து விடுமா?

எல்லாமே மேலைநாடுகளின் அடிச்சுவட்டில் பின்பற்றிச் சென்று கொண்டிருக்கும்போது "கற்பு"ம் அதன் வழிதானே செல்லும். செல்ல முடியும். ஆகவேதான் "கற்பும்" சோஷியலாக அதே வழியில் போய்க் கொண்டிருக்கிறது.

புளியங்கொட்டையை பயிர் செய்து விட்டு மாங்கன்றை எதிர்பார்த்தால் முடியுமா?

ஆட்டையும், ஓநாயையும், மாட்டையும் சிங்கத்தையும் ஒரே ஓடையில் தண்ணீர் குடிக்க விட்டால் என்ன விளைவு ஏற்படுமோ, அதுதான் இந்தக் "கற்பிலும்" ஏற்படும்.

அதனுல்தான் ஆண்கள் எந்தப் பெண்ணையும் துணிந்து பார்க்கின்றுர்கள். எதற்கும் தயங்குவதில்லை.

அன்று மதுரை ஜங்ஷனில் ரயில் ஏறவந்த ராதிகாவையும் எல்லோரும் உற்று உற்றுப் பார்த்தார்கள். ராதிகா எதையும் லட்சியம் செய்யாமல் "டக்டக்"கென்று நடைபோட்டு இடை ஒடிந்து விழுந்து விடுமோ எனும்படி ஒடித்தொடித்து ஒயிலாக வந்தாள். கையிலே ஒரு சிறு பை. கண்ணிலே கருமை. தலையிலே மல்லிகை. தாவணியில் ரோஜா. முன்னது மனம் பரப்பியது. பின்னது பார்வையை

நிரப்பியது! வந்தவள் பிளாட்பாரத்தில் உட்கார்ந்தாள். கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஒரு சின்னஞ் சிறு பாலகன் அவள் அருகில் வந்தான். பால்வடியும் வதனம். பசுமையான பார்வை. வேல்பிடிக்கும் பால முருகன் போல் வெற்றி நடை போட்டான். ராதிகா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சிறுவன் மெதுவாக அவளுக்குப் பின்புறம் வந்து சடையைப் பிடித்து வெடுக்கென்று இழுத்தான். சீற்றத்துடன் திரும்பிய ராதிகா சிறுவனைக் கண்டதும் சிரித்து மகிழ்ந்து, அவனைத் தூக்கி அணைத்தாள். சாக்லட் கொடுத்தாள். சிறுவன் தன் பையிலிருந்த ஒரு பந்தை எடுத்து ராதிகா தலைமேல் போட்டான். படுசுட்டி. பந்து உருண்டு ஓடி பிளாட்பாரத்தை விட்டு கீழே விழுந்து குதித்து தண்டவாளத்துக்குமத்தியில் போய் "ஜம்" மென்று உட்கார்ந்து கொண்டது. சிறுவன் விடுவானா? ஒரே ஓட்டம். குதித்தான். பந்துக்குப் பக்கத்தில் ஓடினான். "ஜிக் ஜிக் ஜிக்" கென்று ஏதோ ஒரு என்ஜின் வந்து விட்டது அந்த தண்டவாளத்தில். ராதிகா பதறிப்போனாள். "ஐயோ குழந்தை குழந்தை" என்று கத்தினாள்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஒரு இளைஞன் குழந்தையை தூக்கி வந்தான். அந்த இளைஞன் வேறு புதியவன் அல்ல, நமது அருணகிரிதான். மதுரை சிறையிலிருந்து விடுதலையாகி ரயில் ஏறி சேலம் போக மதுரை ஜங்ஷனுக்கு வந்திருந்தான்.

"உழுகிற மாடு ஊருக்குப் போனால் ஏரும் கலப்பையும் எதிர்த்தால்போல் வரும்" என்பதுபோல் தொண்டு செய்யப் பிறந்தவனுக்கு என்றைக்கும்

சேவை வந்து நிற்கும். அதுபோல அருணகிரியும் அந்தக் குழந்தையைக் காப்பாற்றி ராதிகாவிடம் கொண்டு வந்தான்.

"குழந்தையைக் காப்பாற்றியதற்கு ரொம்ப நன்றி" என்று சிறுவனை ஆசையுடன் வாங்கிக் கொண்டாள் ராதிகா.

இந்த நிகழ்ச்சி ராதிகாவைச் சுற்றி ஒரு கூட்டத்தை கூட்டி விட்டது. கூட்டத்தில் ஒருவர் "ஏம்மா உன்னைப் பாத்தா படிச்சவமாதிரி இருக்கு. பெத்த கொளந்தையை ஜாக்கிரதையாக பாத்துக்க வேண்டாமா?" என்று கேட்டார். ராதிகாவுக்கு தூக்கி வாரிப் போட்டுவிட்டது. ஆனல்; அந்தச் சிறுவன் ராதிகாவின் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து அவளைக் கெட்டியாக இறுகத் தழுவிக் கொண்டிருந்தான். கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பேசலானர்கள். ஒருவர் சொன்னர் "இந்தக் காலத்தில் புள்ளை மட்டும்தானய்யா பெறுவாங்க, அப்புறம் செத்தா என்ன? பொழைச்சா என்ன என்றிருப்பார்கள். இன்னெருவர் "புள்ளையைப் பொறக்க விடுறதே பெரிசு ஐயா - எல்லாரும் தான் கொன்னுபிடுறாள்களே" என்றார். வேறொருவர் ராதிகாவைப்பார்த்து "ஏம்மா பெத்தா மட்டும் போதுமா, வளக்கத் தெரிய வேண்டாம்? டிரசும் பூட்ஸும் கொறைச்சல் இல்லே. அதுலே கொறச்சலில்லே, ஆட்டுறா பூசாரின்னும்" என்றதும் ராதிகாவுக்கு அபார கோபம் வந்து விட்டது. "ஷட்அப்! நான்ஸென்ஸ்! இந்தக் குழந்தை........" என்று ஏதோ சொல்வதற்குள் ஒருவருக்கு ஆவேசம் வந்து விட்டது. "என்னம்மா ரொம்ப உருட்டுறே? "ஷட் அப்பாமில்லே ஷட்அப்! யாரைப் பார்த்து

நான்ஸென்ஸ்ன்னு சொன்னே? பல்லே உடைச்சு கையிலே கொடுத்துடுவேன், இன்னியேரம் புள்ளேயை இந்த மகராசன் காப்பாத்தலேன்னு இங்கே ஒரு கொலே விழுந்திருக்கும். ரயில் ஒண்ணும் ஓடாது. நாங்கள்லாம் ஒன்னுலே ஊருக்குப் போகமே தவிச்சிருப்போம். மேக்கொண்டு வேறே ஜாஸ்தி பேசுறையா?" என்று சாமியாடி விட்டார். அவரை மலே ஏத்துறதுக்குள்ளே அருணகிரி ரொம்ப பாடு பட்டு விட்டான். அதற்குள் பாட்டி அங்கம்மாள் ஓடிவந்து ராதிகாவிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டு அருணகிரியைப் பார்த்து, "தம்பி நீ மகராசனுயிருக்கணும் எங்கொளந்தையைக் காப்பாத்தினியே" என்று சொல்லி பதிலுக்குக் காத்திராமல் குழந்தையை அப்பால் கொண்டு சென்ருள். அருணகிரி ஒன்றும் புரியாமல் விழித்தான். ராதிகாவின் கண்களில் நீர் வரத் தயாராகிக் கொண்டிருந்தது. கலங்கிய கண்களுடன் நின்ற ராதிகாவின் அருகில் அருணகிரி வந்து "ஏம்மா, குழந்தை ஒன்னுதில்லேயா?" என்று கேட்டான். "இல்லே" என்று தலேயாட்டிஞள் ராதிகா. "அப்படியானல் என் குழந்தை இல்லே என்று ஏன் சொல்லாமல் ஊமை மாதிரி நின்று கொண்டிருந்தாய்?" என்ருன் அருணகிரி. "என்னே யாரு பேசவிட்டா? எல்லாருந்தான் ஏதோ கர கண்டவங்க மாதிரி சடார், புடார் என்று பட்டாசு வெடிக்கிறது போல வெடிச்சு தள்ளிப்புட்டாங்களே! நான் ஒரு சின்னப் பொண்ணு. என்ன பண்ண முடியும்? நீங்களும் அவங்களோடு சேர்ந்துகிட்டு விஷயம் தெரியாமெ உளறினவங்கதானே" என்று பொரிந்து தள்ளிஞள் ராதிகா. "ரொம்ப மன்னிச்சுக்குங்க, ஐ ஆம் வெரி சாரி" என்று அருணகிரி தாழ்மையுடன் பேசிஞன்.

"சாரியுமாச்சு, புடவையுமாச்சு" என்று சொல்லிவிட்டு ராதிகா அப்பொழுதுதான் பிளாட்பாரத்தில் வந்து நின்ற ரயிலில் பெண்கள் பெட்டியில் விறு விறு என்று ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

அருணகிரியும் அதே ரயிலில் தன் பிரயாணத்தை தொடங்கினன். மதுரை ஜங்ஷனை விட்டு ரயில் புறப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு ஆங்கில நாவலை படிப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த ராதிகாவின் சடையை யாரோ வெடுக்கென்று சுண்டினார்கள்.

சடார் என்று திரும்பிய ராதிகா பழைய சிறுவன் சிரித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்தாள். "போக்கிரிப் பயலே, நீ இங்கத்தா இருக்கிறயா?" என்று சொல்லி அவனைத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு "டே கண்ணு, உன் பேரு என்னடா" என்று கேட்டாள்.

"அதான் உனக்கு என் பேரு தெரிஞ்சுருக்குதே" என்றான் சிறுவன்.

"எனக்கு என்ன தெரிஞ்சுருக்கு?" என்றாள் ராதிகா. "கண்ணன்னு என் பேரு தெரிஞ்சுதானே கூப்பிட்டே? தெரியாத மாதிரி பொய் சொல்லுறீயே" என்று மழலைமொழியில் பேசினன் கண்ணன்.

"அடே! உன் பேரு கண்ணனா? அது சரி........ உங்கம்மா பேரன்ன?" என்று கேள்வி போட்டாள் ராதிகா.

"எங்கம்மா பேரு எனக்குத் தெரியாதே" என்றான் கண்ணன்.

"தெரியாதா? தெரியாட்டா அதோ உங்கம்மா அங்கே உட்காந்திருக்காங்க. அவங்ககிட்டபோயி பேரன்னுன்னு கேட்டுகிட்டு வா" என்று கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்த அங்கம்மாளைக் காட்டினுள் ராதிகா.

உடனே கண்ணன் கைகொட்டிச் சிரித்து, "ஐய்யைய்யோ! அவங்கோ எங்கம்மா இல்லே, என் பாட்டி. உனக்கு ஒண்ணுமே தெரியாதா? நாங்க எங்க அம்மாவை தேடிக்கிட்டுத்தான் போறோம். ஒனக்கு எங்கம்மாவைத் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஓ தெரியுமே...."என்று தமாஷாகச் சொன்னுள் ராதிகா. உடனே கண்ணன் குதித்து அங்கம்மாளிடம் ஓடி "பாட்டி பாட்டி, அம்மாவே இவங்களுக்குத் தெரியுமாம்" என்று தூங்கிக்கொண்டிருந்த அங்கம்மாளிடம் சத்தம் போட்டதும் அந்த தள்ளாத கிழவி வாரி சுருட்டி எழுந்து, பிறகு தன்னிலேக்கு வந்து ராதிகாவின் அருகில் வந்து அமர்ந்தாள்.

பெண்கள் ஏறுகிற வண்டியாகையால் அதில் ராதிகா அங்கம்மா கண்ணன் ஆகிய மூவரைத் தவிர வேறு யாரும் இல்லே.

அங்கம்மாள் பாட்டி ராதிகாவைப் பரிவுடன் விசாரித்தாள். அதற்கு ராதிகா அவளுடைய பெற்ரோர்கள் சிங்கப்பூரில் இருப்பதாகவும், தான் மட்டும் திருச்சியில் ஒரு கான்வெண்டில் படித்துக்கொண்டு ஹாஸ்டலில் இருந்து வருவதாகவும், பரீட்சை லீவுக்கு மதுரையில் இருக்கும் ஒரு சிநேகிதியின் வீட்டில் தங்கி இருந்ததாகவும், கூறிவிட்டு கண்ணனேப்பற்றியும், அங்கம்மாளேப்பற்றியும் ஆர்வத்துடன் விசாரித்

தாள். அதற்கு அங்கம்மாள் "இந்த உலகம் ரொம்ப விசித்திரமானதம்மா. இந்த கண்ணன் இருக்கிறனே, இவன் உயிரோடு இருக்கிறது இவனைப் பெத்த அம்மாவுக்கே தெரியாது. அவளுக்கு பாட்டி தான் நான். இவன் அம்மா பேரு சிட்டு. அவளுடைய அம்மா பேரு காமாட்சி. காமாட்சி என் மகள். அவளுக்குத்தான் இந்த குழந்தை இருக்கிறது தெரியும். நாலு வருஷமா இந்தக் குழந்தையை அம்மாவும், பாட்டியும் பார்க்காமே நான்தான் வளர்த்திட்டு வர்றேன். அது ஒரு பெரிய ரகசியம். இப்ப இவனைக் கொண்டுபோய் அவுங்க பாட்டிகிட்டேயும், அம்மா கிட்டேயும் ஒப்படைச்சுப்பிடலாம்னுதான் போயிக்கிட்டிருக்கேன். இப்ப ஒரு வருஷமா எனக்கு அடிக்கடி மார்வலி வருது. இருதய நோயின்னு டாக்டர் சொல்லிப்பிட்டாரு. எந்த நிமிஷத்திலே உயிர் போகுமுன்னு சொல்லவே முடியாது. அதனாலேதான் இவ்வளவு அவசரமா அவங்களுக்குக்கூட கடுதாசி போடாமே புறப்பட்டுட்டேன். ஆனால்...." என்று இரும்மிக்கொண்டு மார்பை கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு லேசாக சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டாள்.

"பாட்டி, பாட்டி" என்று கண்ணன் அழ ஆரம்பித்தான். ராதிகா திடுக்கிட்டு "என்ன பாட்டி, என்ன" என்று எழுந்து பாட்டி முகத்தில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து மெதுவாக ஒரு வாய் தண்ணீரைக் குடிக்கச் செய்தாள்.

மயக்கமாக இருந்த அங்கம்மாள் கண் விழித்து ராதிகாவைப் பார்த்து "அம்மா, உன்னைப் பார்த்தா ரொம்ப நல்ல பொண்ணாட்டம்மா இருக்கே. எனக்கு நீதான் ஒரு உதவி செய்யணும்" என்று கண்ணீர்

மல்க கரைந்து பேசினுள். உடனே ராதிகா "எதுவா இருந்தாலும் சொல்லுங்க பாட்டி. செய்யறேன்" என்று உறுதியோடு கூறினுள்.

பெருமூச்சு விட்டுக் கொண்டு அங்கம்மாள் "ரயில் ஏறினதிலிருந்து எனக்கு மார்பு வலிச்சிக் கிட்டே இருக்குது. வழியிலே திடீர்னு எனக்கு ஏதாவது நேர்ந்தால் இந்தக் கண்ணனை நீதான் பத்திரமா அவ அம்மாகிட்டே கொண்டுபோய் சேர்க்கணும்........" என்று சொல்லி ராதிகாவின் கைகளைப் பிடித்துத் தன் கண்களை புதைத்துக்கொண்டு விம்மி அழுதாள். பாட்டியின் கண்ணீர் ராதிகாவின் கைகளை ஈரமாக்கி, நெஞ்சை நெகிழ வைத்தது. "பாட்டி, அதெல்லாம் உங்களுக்கு ஒண்ணும் நேராது. கவலைப்படாதீங்க" என்று தேற்றினுள்.

அதற்கு அங்கம்மா "இல்லேம்மா, ஒனக்குத் தெரியாது. இவங்க அம்மாவும், பாட்டியும் பட்டணத்திலே இருக்காங்க. அடையாற்றில் காமாட்சியம்மா........" என்று சொல்லிக் கொண்டிருக்கிற போதே "ஐயோ" என்ற சப்தத்துடன் பாட்டி கண்ணை மூடினுள். ராதிகா திகைத்துப்போய் என்ன செய்வது என்று தெரியாமல் பதறினுள்.

கண்ணன் "பாட்டி, பாட்டி, பாட்டி" என்று கதறினுன். சில நிமிஷங்களில் அங்கம்மாபாட்டி ஆண்டவன் திருவடியைச் சேர்ந்தாள்.

ராதிகாவுக்கு பயம் ஒரு பக்கம். கண்ணன் கதறி அழுது மனதைப்போட்டு அறுப்பது ஒரு பக்கம். இனி என்ன செய்வது என்று தெரியாதது ஒருபக்கம். இப்படியாக நிலை தடுமாறி நெஞ்சுமுட்ட, நிற்காதோ "இந்த ரயில்வண்டி" என்று இஷ்ட தேவதைகளை எல்லாம் பிரார்த்தித்தாள்.

அவளுடைய பிரார்த்தனைக்கு இரங்கித்தானே என்னவோ ரயில் திருச்சி ஜங்ஷனில் வந்து ஒரு உலுக்கு உலுக்கி நின்றது.

வண்டி நின்றதும் துப்பாக்கியிலிருந்து வெளிப் பட்ட குண்டுபோல விர்ரென்று பாய்ந்தாள் வெளியே. அவளைப் பின்பற்றி கண்ணனும் குதித்து அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அங்குமிங்கும் ராதிகா என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்துக் கொண்டு நிற்கையில் வண்டியிலிருந்து இறங்கிய அருணகிரி வேறு வண்டி மாறி ஏற பிளாட்பாரத்தில் வந்து கொண்டிருக்கும் போது ராதிகா கண்ணனை கையில்பிடித்தவாறு நிற்பதைப் பார்த்தான்.

அருணகிரியைப் பார்த்ததும் ராதிகா அவனரு கில் வந்தாள். அருணகிரி ராதிகாவிடம் "என்னம்மா குழந்தை ஒன்னுதில்லேன்னு மதுரையிலே பெரிய குஸ்தி போட்டே. திருச்சி வந்ததும் திரும்பவும் சேர்த்துக்கிட்டையா? "என்று கிண்டலாகக் கேட் டான்.

"சார், சார், இப்போ ஒரு பெரிய ஆபத்திலே மாட்டிக்கிட்டு, இருக்கிறேன் சார். இந்தக் குழந்தை கூடவந்த பாட்டி திடீரென்று மார் அடைத்து ரயிலில் செத்துப்பிட்டாங்க. இப்போ என்ன பண்றதுன்னு புரியலே சார். நீங்கதான் கொஞ்சம் உதவி பண்ணனும்" என்று ராதிகா கெஞ்சினாள்.

உடனே அருணகிரியின் கையைப் பிடித்துக் கொண்டு "எங்க பாட்டி செத்து பூட்டாங்க. நான் இனிமே என்ன பண்ணுவேன்? எங்க அம்மா கிட்டே கொண்டே நீ விடுறியா?" என்று மழலையாகப்

பேசினான் கண்ணன். குழந்தையின் மழலையைக் கேட்டதும், சுறுசுறுப்படைந்தான் அருணகிரி. உடனே ரயில்வே போலீஸ் ஆபீசுக்குச் சென்று தான் யார் என்பதை முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டான். அருணகிரி என்பது தெரிந்ததும், அந்த அதிகாரி தகுந்த மரியாதை செய்து அவன் சொன்ன விஷயங்களைக் கவனமாகக் கேட்டு, உடனே டாக்டரை வரவழைத்து அங்கம்மாளைப் பரிசோதிக்கச் செய்து இயற்கை மரணம் என்பதை ரிகார்டு செய்து காரியங்களை மள மளவென்று நடத்தி முடித்தார்.

அதுவரையில் அருணகிரி, ராதிகா, கண்ணன் மூவரும் போலீஸ் ஸ்டேஷனில் அமர்ந்திருந்தனர். அச்சமயம் ஒன்றிரண்டு திருடர்களை போலீசார் பிடித்து வந்து செம்மையாக உதைத்து லாக்கப்பில் தள்ளுவதைப் பார்த்து கண்ணன் பயந்து நடுங்கிப் போனான். போலீஸ் என்றால் ஒரு கிலி அவன் பிஞ்சு மனதில் உண்டாகியது.

"குழந்தையை பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதையும் தாங்களே செய்து விடுகிறீர்களா?" என்று அருணகிரி போலீஸ் அதிகாரியைப் பார்த்துக் கேட்டான்.

"அப்படிச் செய்ய வேண்டியதுதான் எங்கள் கடமை. குழந்தையின் பெற்றோர்கள் விலாசத்தை எங்களிடம் கொடுத்தால் கண்டுபிடித்து குழந்தையைச் சேர்த்து விடுகிறோம்" என்று அதிகாரி கூறியதும் அருணகிரி ராதிகாவைப் பார்த்து "குழந்தையின் பெற்றோர்கள் விலாசத்தை அதிகாரியிடம் சொல்லு" என்று சொன்னான்.

"எனக்கு முழு விலாசத்தையும் அவங்க பாட்டி சொல்லல்லே. ஏதோ அடையாறு, காமாட்சியம்மா

என்று சொன்னுங்க. அவ்வளவுதான். அதுக்குள்ளே மார்பு அடைத்து மயக்கமாக விழுந்துவிட்டாங்க" என்று ராதிகா கூறினுள்.

உடனே போலீஸ் அதிகாரி, "சரி, அப்படியாஞல் குழந்தையை எங்களிடம் ஒப்படைத்துடுங்க. நாங்கள் விசாரித்து பெற்ருேர்களிடம் சேர்த்துவிட முயற்சி செய்கிருேம். முடியா விட்டால் எங்காவது அனுதை ஸ்தாபனத்தில் ஒப்படைத்து விடுகிருேம்" என்ருர்.

"கண்ணு, நீ இங்கேயே இரு. இவங்க உங்கம்மாகிட்டே கொண்டு விட்டுடுவாங்க. சமத்தா இருக்கிறியா?" என்று அருணகிரி கேட்டதும் கண்ணன் அழுது குதித்து "மாட்டேன். முடியாது! நான் போலீஸ்காரரிடம் இருக்கவே மாட்டேன். அவங்க அடிப்பாங்க. என்னை நீயே அழைச்சிட்டுப் போயி எங்கம்மாகிட்டே விட்டுடு" என்று கூச்சலிட்டு அருணகிரியை இறுகப் பிடித்துத் தழுவிக் கொண்டான்.

அருணகிரியிடம் ராதிகா "குழந்தையை இங்கேயே விட்டோமின்னு பயந்து கிலி பிடித்து செத்தும் போனுலும் போயிடுவான். அந்தப் பாட்டிகிட்டே நானே குழந்தையை அவங்க அம்மாகிட்டே சேர்த்துப்பிடறேன்னு வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதனுலே நீங்க கொஞ்சம் உதவி செஞ்சா........நாமே இந்தக் குழந்தையை அவங்க பெற்ருேரிடத்திலே சேர்த்தா ரொம்ப புண்ணியமா இருக்கும். நீங்க தான் தேசத்திற்காக சேவை செய்பவராச்சே! இதுவும் தேச சேவைதானே" என்று இரக்கமாகக் கூறினுள்.

எப்பொழுதுமே இரக்க சுபாவம் இயற்கையிலே படைத்த அருணகிரி ஒரு பெண்ணின் சங்கடத்தைத்

தீர்க்கவும், பெற்ஞேர்களுக்காக ஏங்கி நிற்கும் சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளத்துக்கு பால் வார்க்கவும் முடிவு செய்தான். அதிகாரியிடம் பேசி எப்படியும் இந்தக் குழந்தையின் பெற்ஞேர்களைக் கண்டுபிடித்து ஒப்படைத்து விடுவதாகவும் ஒருவேளை அது முடியா விட்டால் இக்குழந்தையைத் தானே சுவீகாரப் புத்தி ரனக வளர்ப்பதாகவும் கூறி போட வேண்டிய கையெழுத்துக்களைப் போட்டுவிட்டு கண்ணனைத் தூக்கிக் கொண்டு ராதிகாவுடன் ரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான்.

புதிதாக யாராவது இந்தக் காட்சியைப் பார்த் தால் ஒரு புருஷன் மனைவி தன் குழந்தையுடன் எங்கோ பிரயாணம் செய்து விட்டு வருவதாக நினைப் பார்கள்.

வெளியே வந்த அருணகிரி இனி இதற்குமேல் என்ன செய்வதென்று யோசித்தான். அதற்குள் ராதிகா, "ஸார், நான் கான்வெண்டுக்குப் போய் என் சாமான்களை வைத்து விட்டு வந்து விடுகிறேன். இன்றுமட்டும் தாங்கள் எங்காவது ஒரு ஹோட்டலில் தங்கிஇருங்கள். நாளை நாம் கண்டிப்பாகச் சென்னை செல்லலாம். அதற்கு அனுமதியும் பெற்று வந்து விடுகிறேன்" என்று சொன்ஞள்.

ராதிகாவின் பண்பும், தூய உள்ளமும், சேவை யிலுள்ள ஆர்வமும் அருணகிரிக்கு பிடித்து இருந் தது. "சரி கிணறு தாண்டுவதில் பாதிக்கிணறு தாண்டுவது என்பது உண்டா? முழுக்கவே தாண்டி விடலாம்" என்று முடிவு செய்து "சரி ராதிகா, உன் வேலைகளை முடித்துக்கொண்டு சீக்கிரம் வந்து சேர். நான் அதுவரையில் அசோகா ஹோட்டலில் தங்கி யிருக்கிறேன்" என்ருன். ராதிகா மிகவும் நன்றி

யுடன் அருணகிரியிடம் விடை பெற்றுக்கொண்டு கண்ணனுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு “கண்ணு இந்த அப்பாகூட சமத்தா இரு. நான் கான்வெண்டுக்குப் போய்விட்டு சீக்கிரம் வந்துடுறேன்” என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டாள்.

அருணகிரி கண்ணனைக் கூட்டிக்கொண்டு அசோக் ஹோட்டலில் ஒரு ரூம் எடுத்துக்கொண்டு அங்கு தங்கினன்.

ரயிலில் வந்த களைப்பு, நடைபெற்ற நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட அலைச்சல் இவைகளில் சோர்ந்து போயிருந்த அருணகிரி மின்சார விசிறி சுகமாக வீச நீட்டிப் படுத்தான். கண்ணனையும் படுத்துக் கொள்ளச் சொன்னன். கண்ணனைப் பார்க்கும் போது அவனுக்கு ஒருவித பாசம் உண்டாயிற்று. அவனை அறியாமலே அவன் கை செல்லமாக கண்ணனின் தலையைக் கோதிவிட்டது. மனதில் ஒரு சிரிப்பு ஏற்பட்டது. “என்ன விசித்திரம். தான் சிறையிலிருந்து விடுதலையாகி வந்தவன், ராதிகா அவள்பாட்டுக்கு மதுரை வந்து திருச்சிக்குத் திரும்பியவள், அங்கம்மாளும் கண்ணனும் சென்னைக்குச் வந்தவர்கள் இறைவன் திருவிளையாடல் பாட்டியைக் கூட்டிக்கொண்டு என்னையும், கண்ணனையும், ராதிகாவையும் ஒரே கூட்டிற்குள் அடைத்துவிட்டாரே! இதெல்லாம் எதற்கோ?” என்று சிந்தித்தவாறு தூங்கிவிட்டான்.

அருணகிரி தங்கியிருந்த அறைக்குப் பக்கத்து அறையில் ஒரு பெரிய குடும்பம் தங்கி இருந்தது. ஐந்தாறு குழந்தைகள் சப்தம் போட்டு அமர்க்களம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்டு பக்கத்து அறைக்குச் சென்று எட்டிப் பார்த்தான் கண்ணன்.

அங்கு பத்து வயது பையன், எட்டு வயது சிறுமி, ஆறு வயது சிறுவன் இப்படியாக ஐந்தாறு குழந்தைகள் உட்கார்ந்து ஏதோ படம் போட்ட சினிமா புத்தகம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கண்ணன் தைரியமாக உள்ளே நுழைந்தான் "அது என்ன?" என்று கேட்டான். "பேசும் படம்" என்று பெரிய பையன் பதில் சொன்னான். கண்ணன் ஆவலாக அதை வாங்கிப் பிரித்தான். அதிலிருந்து அழகிய கலர் படம் ஒன்றைப் பார்த்து "இது யாரு?" என்று கேட்டான்.

"அடே, இது தெரியாதா? இதுதான் பத்மினி" என்றான் வேறு ஒரு பையன்.

"ஓ, பத்மினியா" என்று சொல்லி அடுத்த பக்கத்தைப் புரட்டி அதில் இருந்த படத்தைப் பார்த்து, "இது யாரு?" என்று கேட்டான்.

"போடா மக்கு, இதுதான் சாவித்திரி" என்று ஒரு சிறுவன் இகழ்ச்சியாகச் சொன்னான். எல்லோரும் கேலியாகச் சிரித்தார்கள்.

அதை எல்லாம் லட்சியம் செய்யாமல் கண்ணன் அடுத்த பக்கத்தைப் புரட்டினான். அதில் இருந்த படத்தைப் பார்த்தான். "டே டே, இந்தப் படம் யாருடா?" என்று கேட்டான்.

"போடா ஒனக்கு வேறே வேலெ இல்லே. சொல்ல முடியாது போ" என்று விரட்டினான் பெரிய பையன். "டே இதை மட்டும் சொல்லுடா போதும்" என்று கெஞ்சினான் கண்ணன். உடனே பளிச் சென்று ஒரு சிறுவன் "இதா? இதுதான் ஒங்க அம்மா" என்று சொன்னதும் எல்லோரும் "கலீர்" என்று சிரித்துவிட்டு வெளியே ஓடிவிட்டார்கள்.

கண்ணன் அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

ஆம்! அந்தப் படம் கலையரசி—அதாவது சிட்டு, மோகினி வேடம் தாங்கி வெகு அழகாகக் கலரில் அச்சடிக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் விளையாட்டுக்காகச் சொல்லி யிருந்தாலும் எதேச்சையாக அதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது. அம்மாவிற்காக ஏங்கிக்கொண்டிருந்த கண்ணனின் உள்ளத்தில் அந்தப் படம் அப்படியே பதிந்துவிட்டது. அந்தப் படத்தை உற்று உற்றுப் பார்த்தான். "அம்மா நீ! ஏம்மா என்னை விட்டுட்டுப் போயிட்டே? நீ எங்கேம்மா இருக்கே?" என்று குழந்தை மொழி பேசிக் குழைந்தான். அந்தப் படத்தைக் கிழித்து எடுத்துக்கொண்டான். மெது வாகத் தன் அறைக்கு வந்துவிட்டான். கண்ணன் வந்த காலடிச் சப்தம் கேட்டு அருணகிரி விழித்துக் கொண்டான். உடனே கண்ணன் ஓடிச் சென்று அருணகிரியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "பாத்தியா எங்கம்மா" என்று சொல்லி படத்தைக் காண்பித்தான். தூக்கக் கலக்கத்தில் படத்தைப் பார்த்த அருணகிரி பதறி எழுந்து உற்றுப் பார்த்தான்.

கண்ணைப் பறிக்கும் வண்ணப் பட்டாடை உடுத்தி, கிரீடமணிந்து, அலை அலையாகத் தலை முடியைத் திருத்தி, விதவிதமான வைர ஆபரணங்கள் அணிந்து மோகினியாகக் காட்சியளிக்கும் நடனக்காரியின் படத்தைப் பார்த்ததும் அவனுக்கு அது சிட்டுவின் சாயலாக இருப்பதுபோல் தெரிந்தது. மெய்மறந்து திகைத்துத் திக்கு முக்காடினன்.

இந்தச் சமயத்தில் "இதுதானே எங்கம்மா?' என்ற கண்ணனின் குரல் அவனுடைய சிந்தனையைக் கலைத்தது.

“ஆமாம்! இதுதான் ஒங்கம்மா. படத்தைப் பத்திரமா வைத்துக்கொள்” என்ருன்.

“அம்மா எங்கே இருக்காங்க?” என்ருன் கண்ணன்.

“மெட்ருஸிலே இருக்காங்க. நீ போய், படுத்துத் தூங்கு” என்று கண்டித்துக் கூறினன் அருணகிரி.

“மெட்ருஸுக்குப் எப்படிப் போகிறது?” கண்ணன் ஆர்வத்துடன் கேட்டான்.

“ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயி ரயில்லே ஏறிப் படுத்துக்கிட்டா மெட்ருஸுக்கு போகலாம் ....நீ இப்ப போய் படுத்துத் தூங்கு” என்று கூறி அவனைப் படுக்க வைத்தான் அருணகிரி.

கண்ணன் கலைஅரசியின் படத்தைத் தனது மார்பின்மீது வைத்து அமுக்கிக்கொண்டு தூங்கினன்.

அருணகிரி சிந்தனைப் புயலில் சிக்கித் தவித்தான். படத்தைப் பார்த்ததும் அது சிட்டுவின் சாயலாக இருப்பதைக் கண்டதும் அவனுக்கு பழைய நினைப்புகள் வரிசை வரிசையாக வந்தன. ஆனல்; அந்தப் படத்தின் அடியில் “கலையரசி” என்ற பெயர் இருந்தது. “எல்லாம் வெறும் பிரமை” என்று முடிவு செய்துகொண்டு தூங்கினன்.

கண்ணன் தூக்கத்திலும் “அம்மா அம்மா” என்று புலம்பிக்கொண்டேயிருந்தான்.

“படத்திலிருந்த கலையரசி செளந்தர்ய தேவதையாக உயிர்பெற்று வந்தாள். கண்ணனைத் தூக்கி முத்தமிட்டாள். தாயன்பைப் பொழிந்தாள். தாலாட்டினள். “கண்ணு கண்ணு” என்று கொஞ்சிக் கொஞ்சிக் குதூகலம் காட்டினள். பின்னர் கத

வோரத்தில் போய் நின்று "வா வா" என்று கூப்பிட்டாள்.

தூங்கிக்கொண்டிருந்த கண்ணன் திடுக்கிட்டு விழித்தான். கதவருகில் "அம்மா" கூப்பிடுவது போன்ற பிரமை உண்டாயிற்று. கண்ணைத் தேய்த்துக்கொண்டு மெதுவாக நடந்தான். நேராக ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனான். அங்கு நின்ற ரயிலில் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றில் ஏறிப் படுத்துத் தூங்கிவிட்டான்.

சிறிது நேரத்தில் ஒரு அமெரிக்க நாட்டு கனவான் தன் மனைவி, தன் எட்டு வயது மகன் முதலியவர்களுடன் அதே முதல் வகுப்பு வண்டியில் ஏறிக்கொண்டார். தூங்கும் கண்ணனைத் தொந்தரவு செய்யாமல் ஒரு போர்வையை போட்டுப் போர்த்திவிட்டு, அந்த அமெரிக்கக் குடும்பம் தூங்க ஆரம்பித்தது. ரயில் புறப்பட்டுப் போயிற்று.

* * *

இரவு வெகுநேரம் கழித்து அருணகிரி விழித்துப் பார்த்தான். கண்ணனைக் காணவில்லை. ஒன்றும் புலப்படவில்லை. தெருவில் பார்த்தான். ரயில்வே ஸ்டேஷனில் தேடினான். எங்கும் தேடினான். "கண்ணா, கண்ணா" என்று அவன் கத்தியதுதான் மிச்சம். இரவெல்லாம் தூங்காமல் அலைந்தான். "என்னடா இது வம்பாகப்போச்சு? வீதியிலே போகிற சனியனை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்த கதையா இதில் மாட்டிக்கொண்டுவிட்டோமே! கண்ணன் என்ன ஆனானோ? ஏதாவது ஆபத்தில் மாட்டிக்கொண்டானோ? ராதிகாவுக்கு என்ன பதில் சொல்வது? நாளை ஏதாவது தகவலின்பேரில் போலீசார் குழந்தை எங்கே என்றால் என்ன பதில் சொல்லுவது?" என்று தவியாகத் தவித்தான்.

அவன் நிலே கிணற்று ஓரத்தில் இருக்கும் பிள்ளேயாரை ஒத்திருந்தது.

இரவெல்லாம் தூங்காததினுல் அவன் கண்கள் சிவந்து போயிருந்தது. ஓட்டலில் உள்ளவர்கள் அனேவரும் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். மனிதர்கள் தூங்குகிருர்கள் என்பதற்காக கடிகாரம் மணியடிக்காமல் நிற்குமா?

மணி "டாண் டாண்" என்று ஆறு அடித்தது. பொழுது புலர்ந்தது.

விடிந்ததும் விடியாததுமாக ராதிகா அசோக் பவனுக்கு ஓடி வந்தாள். கண்ணனேக் காணேம் என்றதும் துடியாகத் துடித்தாள். பின்னர் அருண கிரியும் ராதிகாவும் கண்ணனேத் தேடும் வேலேயில் தீவிரமாக இறங்கினுர்கள்.

12

ரயில் செங்கல்பட்டு வந்ததும் கண்ணன் விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கண்ணேத் தேய்த்து கைகளே அப்படியும் இப்படியும் வளேத்துச் சோம்பல் முறித்தான். எதிரில் உட்கார்ந்திருந்த அமெரிக்க கனவானேயும், அம்மையாரையும் அவர்கள் புதல்வனேயும் ஆச்சரியத்தோடு பார்த்தான். அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது.

தேநீர் குடித்துக்கொண்டிருந்த அமெரிக்கர் ஒரு கோப்பையில் தேநீர் ஊற்றி அதை தனது மகன் லிங்கனிடம் கொடுத்துக் கண்ணனிடம் கொடுக்கச் சொன்னுர். லிங்கன் சென்னேயிலே பிறந்த பையன். அவன் "கொச்சைத்தமிழ்" பேசுவான். அதனுல்

தேநீர் கோப்பையைக் கண்ணனிடம் நீட்டி "தீ குடி" என்றான். அதற்குக் கண்ணன் "நா இன்னும் பல்லு விளக்கலேயே" என்றான்.

"ஏன் பல் விளக்காம குடிக்கக்கூடாதா" என்றான் லிங்கன். அதற்குக் கண்ணன் தலையை அசைத்து "ஊகூம். பல்லு விளக்காமே குடிச்சா மாடு முட்டும்" என்றான். கண்ணன் சொன்னதை லிங்கன் இங்கிலீஷில் தன் பெற்றோர்களுக்குச் சொன்னான். அவர் சிரித்துவிட்டு "ரொம்ப நல்லப் பையன்" என்று மெச்சினர். அமெரிக்க அம்மையார் கண்ணனை வெகு அன்போடு பல் துலக்கச் செய்து, ரொட்டி, தேநீர் கொடுத்து, லிங்கனுடைய உதவியினல் கண்ணனிடம் பேச்சுக் கொடுத்து "அவன் யார், என்ன, எப்படி ரயிலுக்கு" வந்தான் என்ற விவரங்களைத் தெரிந்து இரக்கம் கொண்டனர்.

கண்ணன் தனது சட்டைப் பையிலிருந்த கலை அரசியின் படத்தை எடுத்துக் காட்டி, அதுதான் தன்னுடைய அம்மா என்று சொன்னான். சென்னை சென்றதும் அவன் அம்மாவைக் கண்டு பிடித்துத் தருவதாக அமெரிக்கத் தம்பதிகள் கூறி, கண்ணனை உற்சாகப் படுத்திக் கொண்டு வந்தார்கள். வழியெல்லாம் லிங்கன் கொச்சைத் தமிழில் கேள்வி கேட்பதும், கண்ணன் மழலைத் தமிழில் பதில் சொல்வதும், கண்ணண் சொன்னதை லிங்கன் ஆங்கிலத்தில் தன் பெற்றோர்களிடம் சொல்வதுமாக நேரம் போயிற்று. ரயிலும் எழும்பூரில் நின்றது. கண்ணன் எழுத்துக் கூட்டி "எழும்பூர்" என்று படித்தான்.

அமெரிக்கக் குடும்பம் கீழே இறங்கியது. கண்ணனை இறங்கும்படி லிங்கன் சொன்னான். அதற்குக் கண்ணன் "நான் மெட்ராசுக்குப் போறேன்" என்றான்.

"இதுதான் மெட்ராஸ். இறங்கு, என்றான் லிங்கன்.

"பொய் சொல்றே, எழும்பூர்னு போட்டிருக்கே" என்றான் கண்ணன்.

"மெட்ராஸ், எழும்பூர் எல்லாம் ஒண்ணுதான்" என்றான் லிங்கன்.

"சத்தியமாச் சொல்லு" என்று கண்ணன் கெஞ்சலாகக் கேட்டான்.

"பிராமிசா, சத்யமா இதுதான் மெட்ராஸ்" என்று லிங்கன் சொன்னதும் அரைமனதாய் கண்ணனும் இறங்கினான். அவனையும் கூட்டிக் கொண்டு காரில் தங்கள் பங்களாவுக்குச் சென்றனர் அமெரிக்கக் குடும்பத்தினர்.

வீட்டுக்குச் சென்றதும் முதல் வேலையாக தங்களிடம் பணிபுரியும் சிலரை வரவழைத்து கண்ணன் வைத்திருக்கும் படத்திலிருப்பது யார் என்று கேட்டார்கள். "கலைஅரசி" என்ற சினிமா நடிகை என்று சொன்னார்கள். உடனே கலையரசி வீட்டுக்கு போன் செய்து பார்த்ததில் அங்குள்ள மானேஜர் தங்கள் வீட்டில் எந்தக் குழந்தையும் காணமல் போகவில்லை என்றும், இந்த மாதிரி மோசடி செய்பவர்களை போலீசில்தான் ஒப்படைக்க வேண்டுமென்றும் சொல்லி விட்டார். அதனால் என்ன செய்வதென்று தெரியாமல் அமெரிக்கத் தம்பதிகள் திகைத்து "இனி வேறு வழியில்லை. போலீசில் ஒப்படைத்து விடுவோம்" என்று பேசிக் கொண்டார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த லிங்கன், தோட்டத்தில் மாஞ்செடிகளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த கண்ணனைத் தனியாக அழைத்துச் சென்று "நீ என்ன குத்தம் செய்தே? நெசத்தே சொல்லு" என்று கேட்டான்.

"நான் ஒரு குத்தமும் செய்யலேயே! எங்கம் மாவைத் தேடித்தான் வந்தேன்" என்றான் கண்ணன்.

"குத்தம் செய்யலேன்னா ஏன் உன்னே போலீ சிலே தள்ளணும்னு அப்பாவும், அம்மாவும் பேசிக் கிறாங்க?" என்றான் லிங்கன்.

"போலீசிலே என்னடா பண்ணுவாங்க?" என்று பயத்துடன் கேட்டான் கண்ணன்.

லிங்கன் :—ஜெயில்லே தள்ளிப் பூட்டிப்பிடு வாங்க.

கண்ணன் —ஜெயில்னா எப்படி இருக்கும்?

லிங்கன் :—கருங்கும்னு பயம்மா இருக்கும். உள்ளே போனா வெளியிலே வரவே முடியாது. சாக வேண்டியதுதான்....

என்றதும் கண்ணன் பயத்தால் நடுங்கிப் போனான். லிங்கன் கையைப் பிடித்துக்கொண்டு "டேய் டேய், என்னேக் காப்பாத்துடா. ஜெயிலிலே தள்ளிப் பிட்டா நான் எங்க அம்மாவை பார்க்க முடியாதுடா. டேய், ஒன்னேக் கும்பிடுரேண்டா" என்று கெஞ்சி னான். லிங்கன் கண்களில் நீர் சுரந்தது. என்ன இருந்தாலும் பிஞ்சு உள்ளம் அல்லவா? "சரி பயப் படாதே! நான் ஒங்க அம்மாகிட்டே கொண்டு போறேன். என்னோடே வா, வூட்டுக்குள்ளே போவாதே" என்று கூறி கண்ணனேக் கூட்டிக் கொண்டு லிங்கன் பங்களாவை விட்டு வெளியே வந்தான்.

அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் கண்ணன் லிங்கன் கையைப் பிடித்துக் கொண்டு வெகு வேகமாக ஓடினான்.

* * *

கண்ணனைத் தேடி அலுத்துப் போன அருண கிரியும் ராதிகாவும் என்ன செய்வதென்று தெரியா மல் திகைத்திருந்தனர். போலீசில் போய்ச் சொன்னால் கேவலம். வாக்குறுதி கொடுத்துக் கூட்டிவந்த பையனை விட்டு விட்டோமென்ற அவச்சொல். ஆகவே “பையனைக் காணோம்” என்று பத்திரிகையில் ஒரு விளம்பரம் செய்யலாம் என்று முடிவு செய்தார்கள். அதன்படி “கண்ணன் என்ற பெயருடைய சிறுவன் நான்கைந்து வயதிருக்கும். நல்ல சிகப்பு. சுருட்டைத் தலைமயிர். காணமல் போய்விட்டான். பார்த்தவர்கள் உடனே கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவித்தால் நன்றி உடையவளாக இருப்பேன். இப்படிக்கு ராதிகா, 34, அசோக் பவனம், திருச்சி.” என்று ஒரு விளம்பரத்தைத் திருச்சியிலிந்து வெளிவரும் பத்திரிக்கைகளில் கொடுத்தார்கள். போலீசில் அருணகிரி கையெழுத்துப்போட்டு குழந்தையைக் கூட்டிக் கொண்டு வந்தபடியால் அருணகிரி கையெழுத்துப்போட்டு விளம்பரம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்து ராதிகா பெயரை போட்டார்கள். இரண்டு மூன்று தினங்களில் ஏதாவது விவரம் தெரியாமல் போகாது என்ற நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

கண்ணன் கிடைத்து விட்டால் மலைக்கோட்டைப் பிள்ளையாருக்கு நூற்றியெட்டு தேங்காய் உடைப்பதாய் ராதிகா வேண்டிக் கொண்டாள்.

14

கண்ணனும் லிங்கனும் கடைவீதி வழியாக வந்தார்கள். ஆங்காங்கே நிற்கும் போலீஸ்காரர்களைக் கண்டு பயந்து ஒதுங்கி, பதுங்கி பதுங்கிச் சென்றார்

கள். ஒதுக்குப்புறமான ஓரிடத்தில் இருவரும் உட்கார்ந்து கலை அரசியின் படத்தைப்பார்த்து "வீடு எங்கே இருக்கும்" என்று யோசித்துப் பார்த்தார்கள். அப்போது ஐஸ்கிரீம் வண்டியைத் தள்ளிக் கொண்டு ஒருவன் அவ்வழியே வந்தான். லிங்கன் அவனைக் கூப்பிட்டு இரண்டு ஐஸ்கிரீம் வாங்கிக் கொண்டு காசைக் கொடுத்து விட்டு கலை அரசியின் படத்தைக்காட்டி "இவங்க வூடு எங்கே இருக்கு" என்று கேட்டான்.

"ஓ, இவங்களா? இவங்க சினிமா ஸ்டார் கலை அரசி அல்லவா? இவங்க வீடு அடையாறில் இருக்கு. அஞ்சா நெம்பர் பஸ்ஸிலே ஏறிப் போனீங்கன இவங்க வீட்டுக்கிட்டே பஸ் நிற்கும்" என்று சொல்லி விட்டுப் போனன்.

உடனே இருவரும் மிக்க மகிழ்ச்சியுடன் பஸ் ஸ்டாண்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்றூர்கள்.

திடீரென்று "டேய் தம்பிகளா" என்ற அதிகாரக் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். உயரமான ஒரு போலீஸ்காரர் கன்னங்கரேலென்ற நிறமுடையவர், சற்று தூரத்தில் நின்று கொண்டு இருவரையும் வரும்படி சைகை காட்டிக் கூப்பிட்டார். அவ்வளவுதான் இருவரும் எடுத்தார்கள் ஓட்டம். பஞ்சாகப் பறந்தார்கள். ஜனக்கூட்டத்திற்குள் புகுந்து விட்டார்கள். ஆளுக்கொரு பக்கமாக ஓடிப்பிரிந்து விட்டார்கள். துரத்திக் கொண்டு வந்த போலீஸ்காரர் கையில் கலைஅரசி படத்தை வைத்துக் கொண்டு "நல்ல பசங்கடா, படத்தைக் கொடுக்கலாமென்று கூப்பிட்டா வாலுப்பசங்க ஓடிப்பூட்டாங்களே" என்று சொல்லி அந்தப் படத்தை தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றூர்.

15

கலைஅரசியின் அழகிய சிறு பங்களா வெகு தூய்மையாகத் துலங்கியது. உள்ளும் புறமும் பெருமைப் படும்படி எல்லாம் அமைக்கப் பட்டிருந்தன. "டாம்டூம்" என்ற ஆடம்பரமில்லாமல் எங்கு நோக்கினும் சாந்தம் தவழும் விதத்தில் விளங்கியது.

முன்புறம் சிறு மலர் வனம். மலர்வனத்தின் மத்தியில் காந்தியடிகளின் சிலை தன்பொக்கை வாய்ச் சிரிப்பை உதிர்த்துக்கொண்டு நின்றது. வீட்டிற்குள் நுழைந்தால் ஒரு அழகிய ஹால். அந்த ஹாலில் பல பெரியோர்களின் படம் தொங்கியது. உத்தம சீலர்கள் பலர் மன நிம்மதியுடன் இருப்பதுபோல படங்கள் காட்சியளித்தன. புதிதாக அவ்வீட்டுக்கு ஒருவன் வந்தால் அது ஏதோ ஒரு தேசபக்தன் வீடு என்றுதான் நினைப்பானே தவிர, பிரபல சினிமா நட்சத்திரம் கலையரசி வீடு என்று நினைக்க மாட்டான். சினிமா சம்பந்தமான எந்த வாடையும் அங்கு வீசவில்லை. "தேசபக்தி" தான் மணம் பரப்பியது. கலையரசியின் உள்ளத்தை அறிந்து நடராஜபாரதி அவ்விதம் அமைத்திருந்தார்.

நடராஜபாரதியை குருவாகவும், தந்தையாகவும், தனக்கு வழிகாட்டியாகவும் கலைஅரசி நினைத்து வந்தாள். கலைஅரசி உள்ளத்தில் புயல் அடிக்க ஆரம்பித்தது. சில மோசக்காரர்களும், அயோக்கியர்களும் நல்லவர்கள்போல் நடராஜ பாரதியிடம் நடந்து கொண்டு கலைஅரசியை "புக்" செய்து தங்கள் சொரூபத்தைக் காண்பிக்க ஆரம்பித்தனர். பல வழிகளில் வலை வீசினர். கடைசியில் உருட்டினர், மிரட்டினர். தங்கள் செல்வாக்கை வைத்து சில போலீஸ் அதிகாரிகளையும் உபயோகப்படுத்தி சாம, தான

பேத, தண்டம் என்ற நாலுவகை உபாயத்தையும் கையாண்டு பார்த்தனர். கலைஅரசி கற்பில் கண்ணகியாகவும், உறுதியில் சாரதாமணி அம்மையாராகவும், உள்ளத்தில் சீதாதேவிபோலவும் பத்தரை மாற்றுத் தங்கமாக பிரகாசித்தாள். இந்த தொந்தரவுகளை எல்லாம் பார்த்து இந்தச் சினிமா சனியனே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

நடராஜபாரதியைக் கூட்டிவரும்படி சொன்னாள். பாரதியார் வந்தார். கலைஅரசி அவர் காலில் விழுந்து கும்பிட்டு, "சுவாமி எனக்கு இந்த வாழ்வு போதும். நான் இனி சினிமாவில் நடிப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன். தாங்கள் ஆசி கூற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள். அதற்கு நடராஜபாரதி "அம்மா, வாழ்க்கையில் உனக்கு வெற்றியும் சந்தோஷமும் உண்டாவதற்காக நான் போட்ட திட்டங்கள் இதுவரை ஒழுங்காக நடந்து, பலனையும் பெற்றோம். நீ உடல் நோகக் கஷ்டப்பட்டு ஏராளமாக பணம் சம்பாதித்து, அத்தனையும் பொது நலத்துக்காக அர்ப்பணித்தாலும், உன் வருங்கால வாழ்க்கை வறுமையாக இருக்கக்கூடாதே என்பதற்காக உன் பெயரால் சுமார் ஐந்து லட்ச ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன். இந்த பங்களா லட்ச ரூபாய் பெறும். உன் மனம் எத்தகையது என்பது எனக்குத் தெரியும். நீ செய்திருக்கும் முடிவு நான் முன்பே எதிர் பார்த்ததுதான்.

"ஒருவர், இரண்டு படகில் பிரயாணம் செய்ய முடியாது. ஒரே உறையில் இரண்டு கத்திகளை சொருக முடியாது. ஆகவே வாழ்க்கையில் கற்புடன் இருக்க வேண்டும் என்று கருதினால் சினிமா சரிப்பட்டு வராது. அதனால் நீ செய்த முடிவுதான் சரியான முடிவு. ஒரு எறும்பு அரிசியை இழுத்துக்கொண்டு

போயிற்று. வழியில் ஒரு பருப்பைக் கண்டது. அரிசியைக் கொண்டு போவதா பருப்பை எடுப்பதா என்ற மயக்கம் உண்டாயிற்று. கபீர்தாஸ் சொன்னார்; "எறும்பே! ஒன்றை விடு ஒன்றை எடு!" இதே போல் நீ சினிமாவை விட்டு இனி உன் வழியில் செல்ல முடிவு செய்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். உனக்கு என் ஆசி என்றும் உண்டு. நான் வயதான கிழவன். எனக்குக் குழந்தை குட்டி யாரும் கிடையாது. பாரதி கலா பவனம்தான் என் குழந்தை! அதை எனக்குப் பிறகு காப்பாற்றி வளர்க்க வேண்டும்" என்று உருக்கமாகச் சொன்னார்.

கண் கலங்க பாரதி சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த கலைஅரசி "சுவாமி, பெற்ற தந்தையைக் காட்டிலும் அதிக வாஞ்சையும் பரிவும் காட்டிய தங்களுக்கு நான் என்றும் நன்றி மறக்கமாட்டேன். இதோ இந்த ஹாலில் மாட்டியிருக்கும் தியாக மூர்த்திகளின் படங்களைப் பார்க்கும்போது எனக்கு எப்போதும் என் கணவர் ஞாபகமே வருகிறது. அவரைவிட, பெரியவராக—அவரைவிட சிறந்த தியாகியாக நான் வேறு யாரையும் எண்ணவே முடியவில்லை.

இந்த வாழ்வை எல்லாம் அவர் எள்ளி நகையாடுவது போல் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே எனக்கு இந்த வாழ்வு போதும். நானும் அவரும் முதலில் சந்தித்த "தலைவெட்டி முனியப்பன் கோவிலை பெரிதாகக் கட்டி, அந்த இடத்தில் ஒரு பெரிய ஆசிரமம் அவர் பெயரால் ஏற்படுத்தி, அங்கிருந்து கொண்டு தொண்டு செய்யலாம் என்றிருக்கிறேன். தாங்கள் தான் அதற்கு வேண்டியதெல்லாம் செய்ய வேண்

டும்" என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டாள். நடராஜபாரதியும் அது மிகவும் உத்தமமான யோசனை என்று ஒப்புக் கொண்டு, அன்றே சேலம் புறப்பட்டுச் சென்று வேண்டிய ஏற்பாடு செய்வதாகச் சொல்லிப் போனார். நடராஜபாரதி சென்ற திக்கை நோக்கிக் கும்பிட்டாள் கலை அரசி.

16

ஓடி ஓடிக் களைத்து கண்ணன் ஒரு தெருவிற்கு வந்தான். அவனுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. ஒரு பெரிய வால்போஸ்டரில் கலை அரசியின் படம் போட்டு சுவற்றில் ஒட்டியிருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து "அம்மா, அம்மா, நீ எங்கேயம்மா இருக்கே?" என்று தேம்பித் தேம்பி அழுதான். அப்பக்கம் வந்த ஒரு பெரியவர் கண்ணன் அழுவதைப் பார்த்து அனுதாபங் கொண்டு "அழாதேடா குழந்தை. ஏன் அழுகிற........?ம்........உன் வீடு எங்கே இருக்கு?"

கண்ணன்: தெரியலையே!

பெரியவர்: ஒன் அப்பா பேரு என்ன?

கண்ணன்: அதுவும் தெரியாதே!

"சரி அம்மா பேரு என்ன?" என்று பெரியவர் கேட்டதும், கண்ணன் கலைஅரசி படம் போட்ட வால்போஸ்டரைக் காட்டி "இதோ இதான் எங்க அம்மா. கொண்டே விடுறியா தாத்தா" என்று சொல்லி ஆர்வத்தோடு அவர் கையைப் பற்றினான். பெரியவர் ஆச்சரியப்பட்டுப் போனார். கலைஅரசிக்கு ஒரு மகனா? இதுவரை தனக்கு அப்படி ஒன்றும் கேள்வி இல்லையே! சரி நமக்கென்ன? பையனுக்கு

வழி சொல்லுவோம் என்று "தம்பி, அதோ பாரு ஒரு பஸ் ஸ்டாண்டு தெரியுதில்லே? அங்கே போய் நில்லு. ஒரு பஸ் வரும். அதில் ஏறிப்போ. உன் அம்மாவிடம் போகலாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

கண்ணன் பெரியவர் சொல்லியபடி பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றான். பஸ் வந்து நின்றது. அதில் ஏறிக்கொண்டான். பஸ் புறப்பட்டுச் சென்றது. கண்டக்டர் ஒவ்வொருவராக டிக்கெட் கொடுத்துக் கொண்டு வந்தவர் கண்ணனிடம் வந்து, "தம்பி டிக்கட்" என்றார். அதற்குக் கண்ணன் "நீ தரலியே" என்றான்.

கண்டக்டர்: சரி, துட்டு கொடு.

கண்ணன்: துட்டு இல்லையே!

கண்டக்டர்: எங்கே போறே?

கண்ணன்: எங்க அம்மாகிட்டே.

கண்டக்டர்: ஒங்க அம்மா யாரு?

கண்ணன்: சினிமா ஸ்டார் கலைஅரசி.

இதைக் கேட்டதும் பஸ்ஸிலிருந்தவர்கள் எல்லோரும் "கொல்"லென்று சிரித்தார்கள். கண்டக்டரும் சிரிப்பில் கலந்து கொண்டார். பஸ்ஸிலிருந்த ஒருவர் "போனால் போகிறது. பாவம்! விடய்யா" என்றதும் கண்டக்டரும் "சரி" என்று விட்டு விட்டார். பஸ் அடையாறு வந்ததும் பையனுக்கு ஒருவர் கலைஅரசியின் வீட்டை அடையாளம் காட்டினார். கண்ணன் வெகு ஆர்வத்தோடு தன் அம்மாவைப் பார்க்க ஒரே பாய்ச்சலில் பாய்ந்தான்.

17

கலைஅரசியின் அழகிய சிறு பங்களா முன் வந்து நின்றான் கண்ணன். விறுவிறுவென்று கேட்டுக்குள் நுழைந்தான். வாசல் காப்போனாகிய கூர்க்கா அவனைத் தடுத்து நிறுத்தி "டேய் நீ யார்? எங்கே போறே?" என்றான். "என் அம்மாவைப் பார்க்க" என்றான் கண்ணன்.

கூர்க்கா : யாரு?

கண்ணன் : அம்மா...............

கூர்க்கா : வேலைக்கார முனியம்மா மகனா நீ?

கண்ணன் : இல்லே சினிமா ஸ்டார் கலைஅரசி மகன்.

கூர்க்கா : டே, யாருடா நீ? பெரிய ஆளா இருக்கே. சீ போடா வெளியே" என்று சொல்லி அவனைப் பிடித்து வெளியில் தள்ளி விட்டான்.

அழுது கொண்டே கண்ணன் காம்பவுண்ட் சுவற்றைச் சுற்றி நடந்தான். ஓரிடத்தில் ஒரு சிறு மரம் சுவற்றை ஒட்டி இருந்தது. பங்களாவினுள்ளிருந்து ஒரு கொடி அந்த மரத்தைச் சுற்றி தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பிடித்துக் கொண்டு மரத்தின் உதவியால் சுவற்றில் ஏறி பங்களாவிற்குள் குதித்து விட்டான் கண்ணன். தாயைப் பார்ப்பதில் அந்தப் பிஞ்சு உள்ளத்திற்கு எவ்வளவு பரபரப்பு! எப்பக்கம் போவதென்று திகைத்து நிற்கையில் யாரோ ஒருவர் வெளிக் கதவிலிருந்த "காலிங் பெல்" பொத்தானை அமுக்குவதைப் பார்த்தான். உடனே கதவு திறந்ததையும் கண்டான். பின்னர் கதவை மூடிக் கொண்டு போனதையும் கவனித்தான்.

கண்ணனும் "காலிங்பெல்" இருந்த இடத்திற்குப் போய் உயரத்திற்கு அங்கிருந்த ஒரு சிறு முக்காலியைத் தூக்கிப் போட்டு அதன்மேல் ஏறி நின்று "காலிங்பெல்" பித்தானை அமுக்கினன்.

மாடியிலிருந்து கீழே இறங்கிவந்து கொண்டிருந்த கலைஅரசி மணி சப்தம் கேட்டதும் ஓடிவந்து கதவைத் திறந்தாள். அவ்வளவுதான். அவளைப் பார்த்ததும் "அம்மா" என்று ஒரு பெருங்குரல் கொடுத்து கண்ணன் ஒரே தாவாகத் தாவி கலை அரசியைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"அம்மா" என்ற அலறல் சப்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்ட கூர்க்கா அங்கு ஓடி வந்தான். கண்ணனைப் பார்த்ததும், அதுவும் அவன் அம்மா மீது ஏறிக் கொண்டு விடாமல் வம்பு செய்வதைப் பார்த்ததும், தான் ஒரு "வீரன்" இருக்கும்போது இந்தச் சின்னப் பயல் இப்படிச் செய்வதா என்று ஆவேசம் கொண்டு "டே திருட்டுப் பயலே! என்னை ஏமாத்திட்டு உள்ளே வந்து காலாட்டாவா பண்றே" என்று சொல்லித் தன் பலங்கொண்டமட்டும் கண்ணனைப் பிடித்து இழுத்தான். "அம்மா" என்று அலறிய கண்ணன் கூர்க்காவின் பிடியில் கசங்கி கலை அரசியிடமிருந்து விடுபட்டு, கூர்க்கா இழுத்த வேகத்தில் கதவில் முட்டித் தலை அடிபட்டு ரத்தம் பீறிட்டு அது கலைஅரசிமீது தெறித்தது. கலை அரசிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அதற்குள் கூர்க்கா கண்ணனைத் தெருவுக்கு இழுத்துக் கொண்டுபோய் தள்ளி விட்டான். கண்ணன் ரத்தக் களரியோடு தெருவில் உருண்டு விழுந்தான். கலை அரசி பைத்தியம் பிடித்தவள் போல் ரத்தக்கறையோடு மாடிக்கு ஓடினள்.

தலையிலிருந்து ரத்தம் "குபு குபு" வென்று கொட்ட கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாக வெளிப்பட கண்ணன் தெருவில் நின்று கொண்டு "அம்மா அம்மா" என்றுக் கதறினன்.

மாடிக்கு ஓடிய கலை அரசியின் காதில் "அம்மா" என்ற குரல் விழுந்து நெஞ்சைக் கலக்கியது. அவள் மீது தெரித்த ரத்தம் அவள் ரத்தம்தானே! ரத்த பாசம் சமான்யப்பட்டதா? உடம்பை, உள்ளத்தை உலுக்கி விடாதா? அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. கை கால் ஓடவில்லை. கண்கள் கலங்கி தன்னை அறியாமல் நீர் சுரந்தது.

கண்ணன் "அம்மா" என்று கதறிக் கொண்டிருந்தான். தெருவில் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. ஜனக்கூட்டம் "ஜே ஜே" என்று கூடி விட்டது. நிலைமை எக்கச்சக்கமாகி விட்டது.

கலை அரசி எட்டிப் பார்த்தாள். கண்ணன் தெருவில் நின்று கதறும் காட்சி அவளைக் கிறு கிறுக்க வைத்தது. சடார் என்று கீழே இறங்கினள். தெருவுக்கு ஓடி வந்தாள். எல்லோரையும் தள்ளிக் கொண்டு போய் கண்ணனைத் தூக்கி அணைத்துக் கொண்டு யாரையும் லட்சியம் செய்யாமல் ஓடினள். பரபரவென்று காரியங்களைக் கவனித்தாள். கண்ணனுக்கு மண்டைக் காயத்தைத் துடைத்து மருந்து போட்டுக் கட்டினள். கண்ணன் பொறுமிப் பொறுமி அழுது கொண்டே இருந்தான். "அழாதடா கண்ணு" என்று கலை அரசி சமாதானப்படுத்தினள்.

கண்ணன் விக்கி விக்கி "அம்மா, இனிமே என்னை வெளியே தள்ளமாட்டியே? உன்னைத் தேடித்தேடி என் காலெல்லாம் ஒடிஞ்சுக்போச்சம்மா" என்று காலைக் காட்டினன். அந்த பிஞ்சு

காலை கலைஅரசி மெதுவாக அமுக்கி விட்டாள். தாயின் ஸ்பரிசம் பட்டதும் அடிபட்டதை யெல்லாம் மறந்தான் கண்ணன். அவனுக்கு தின்பண்டங்கள் நிறையக் கொடுத்தாள். டாக்டரை வரவழைத்து காயத்திற்கு சிகிச்சை செய்யச் சொன்னாள்.

வெளியே கூடியிருந்த ஜனக்கூட்டத்தைக் கலைத்து ஒழுங்கு செய்ய போக்குவரத்து கமிஷனரே நேரில் வரும்படி ஆகி விட்டது. வெகு நேரமாகி விட்டது ஜனங்கள் கலைவதற்கு. "வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் அகப்பட்டது போல" சினிமா சம்பந்தப்பட்ட கலை அரசியைப் பற்றியும், குழந்தையைப் பற்றியும் தாறுமாருகப் பேசிக் கொண்டு சென்றூர்கள் பலர். கலை அரசியின் உயர்ந்த தன்மை தெரிந்தவர்கள் அவளைப் புகழ்ந்து கொண்டு போனார்கள்.

18

கலை அரசி கண்ணனோடு கொஞ்சிக் குலவுவதில் தன் பொழுதைப் போக்கினாள். அவன் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தாள். விதவிதமாய் உடைகள் வாங்கி அணிவித்து அழகு பார்த்தாள். "அம்மா அம்மா" என்று அவன் கூப்பிடும்போது அவள் காதில் தேன் பாய்வதுபோல் இருந்தது. அவன் செய்கை ஒவ்வொன்றிலும் சொக்கிச் சுழன்றாள். தாயன்பைப் பொழிந்தாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு சிரித்து விளையாடினாள்—சிறுமி போல் துள்ளிக் குதித்தாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு தன் மகள் சிரித்து விளையாடுவதைப் பார்த்து தாய் காமாட்சி அம்மாள் பூரித்தாள். "சிட்டு சந்தோஷமாக இருந்தால் அதுவே

போதும்" என்று காமாட்சி நினைத்தாள். ஊருக்கெல்லாம் கலை அரசியாக இருந்தாலும் காமாட்சிக்கு அவள் சிட்டுதானே! "டில்லிக்கு ராஜாவாக இருந்தாலும் பள்ளிக்குப் பிள்ளைதானே?"

"இன்னும் கொஞ்ச நாள் பார்ப்பது அதற்குள் அருணகிரி வந்தால் சரி, இல்லாவிட்டால் சிட்டுவின் குழந்தையைக் கொண்டு வந்து விட்டால் சிட்டு ரொம்ப சந்தோஷமாக இருப்பாள்" என்று முடிவு கட்டினாள் காமாட்சி. இறைவனுடைய திருவிளையாடல்களை அந்தப் பேதை காமாட்சி அறிய முடியுமா?

கண்ணன்தான் தன் சொந்தப் பேரன். வர வேண்டிய இடத்துக்கு ஒழுங்காக வந்து விட்டான் என்பதை அவளால் அறிய முடியாதல்லவா?

எப்படியோ சிட்டு மகிழ்ச்சியாக இருக்கிறாளே என்று, தானும் அவளுக்கு ஒத்தாசையாக கண்ணன் மீது அன்பைப் பொழிந்தாள்.

அன்று வந்த தினப் பத்திரிகையில் கண்ணனைப் பற்றிய விளம்பரத்தைக் காமாட்சிக்கும், கலை அரசிக்கும் படித்துக் காட்டினார் மானேஜர்.

"ஐயோ பாவம்! குழந்தையைக் காணமல் அந்தத் தாய் என்ன பாடு படுவாளோ? ஆகவே உடனே தந்தி கொடுங்கள்" என்று கலை அரசி கட்டளையிட்டாள்.

தந்தி பறந்தது. சில தந்திகள் போலில்லாமல் இந்தத் தந்தி அருணகிரியின் மன நிலையை அறிந்து, உடனே போய் ராதிகாவின் கையில் கிடைத்தது. தந்தியைப் பார்த்ததும் இருவருக்கும் உயிர் வந்தது. "அப்பாடா" என்று அருணகிரியும், "அம்மாடி" என்று ராதிகாவும் பெருமூச்சு விட்டார்கள்.

அவ்வளவுதான்; இருவருக்கும் சுறுசுறுப்பு ஏற்பட்டது. அன்றிரவே இருவரும் சென்னைக்குப் புறப்பட்டார்கள். நல்லவேளை கண்ணன் சென்னையிலே இருப்பதால் எப்படியும் அவன் பெற்றோர்களைக் கண்டு பிடித்து ஒப்படைத்து விடுவது என்று முடிவு செய்து கொண்டார்கள்.

ரயில் காலையில் சென்னைக்கு வந்ததும் ஒரு டாக்ஸியை வைத்துக்கொண்டு ராதிகாவும் அருணகிரியும் கலைஅரசி வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

மாடியில் நின்று கொண்டிருந்த கலைஅரசி அருணகிரி டாக்ஸியிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும் ஒருகணம் கல்லாய்ச் சமைந்து விட்டாள். அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். தான் கனவு காணவில்லை என்பது உறுதியாயிற்று. அவளுக்கு உலகம் சுழன்றது. மாடி சுழன்றது! மரம் சுழன்றது. மனம் சுழன்றது. மயக்கம்போல் தடுமாறினாள்.

அருணகிரியின் பின் ராதிகாவும் இறங்கினாள். அவளைப் பார்த்ததும் கலைஅரசி தன்னிலைக்கு வந்தாள். "என் கணவர் இறக்கவில்லை. உயிரோடிருக்கிறார்" என்ற எண்ணம் அவள் வயிற்றில் பால் வார்த்தது. ஆனால்; அடுத்த வினாடி மின்னல் வேகத்தில் அவள் மூளை வேலை செய்தது. "அவர் உயிரோடிருக்கிறார். கலியாணமும் செய்து கொண்டு விட்டார். அவருடைய குழந்தைதானா கண்ணன்.

"கடவுளே, உன் திருவிளையாடலை என்னவென்பேன்? சரி, இனி நாம் செய்ய வேண்டியதென்ன?" என்று யோசனையில் ஆழ்ந்தாள்.

" அவருடைய வாழ்க்கையில் துன்பம் நேரும்படி நாம் நடந்துகொள்ளக் கூடாது. குழந்தையைக் கூட்டிக்கொண்டு அவர் போகும் வரையில் நாம் அவரைச் சந்திக்கக் கூடாது. சந்தித்தால் அவர் மனம் கலங்கும். பின்னர் புருஷன் மனைவிக்கு மத்தி யில் சண்டை வரும். என்னை என்ன செய்வதென்று தெரியாமல் அவர் தவிப்பார். அவர் வாழ்வு நரக மாகும். ஆகவே கண்டிப்பாகச் சந்திக்கக்கூடாது. ஒருவேளை சந்தித்து விட்டால் யாரோ ஒரு சினிமா நடிகைபோல் நடித்து விட வேண்டும்" என்று முடிவு செய்து அவசர அவசரமாக மேக்அப் செய்து கொண்டு புது மாதிரியாக தலை அலங்காரம் செய்து பளபளக்கும் உடை, கிரீடம் முதலியவைகளை அணிந்து ஒரு " அப்ஸரஸ்" போல தன்னை ஆக்கிக் கொண்டு, மாடியில் தன் அறையிலே ஒளிந்து கொண்டு கிடந்தாள். இதயத்தில் நாலாயிரம்கோடி பட்டாசு வெடித்துக் கொண்டே இருந்தன. அதில் யானைவெடி, குதிரைவெடி, வெங்காயவெடி, அதிர் வெடி " ஆட்டம்பாம்" என்ற வகை வகையான வெடி கள் வெடித்து சுக்கு நூறுகிக் கொண்டிருந்தன.

அருணகிரியும் ராதிகாவும் கலை அரசியின் வீட்டுக்குள் நுழைந்ததும் மானேஜர் வரவேற்று ஹாலில் உட்கார வைத்தார். ஹாலில் இருந்த படங்களைப் பார்த்ததும் அருணகிரியின் மனதில், அந்தச் சினிமா நடிகையைப்பற்றி உயர்ந்த எண்ணம் உண்டாயிற்று. மானேஜர் கண்ணனை உள்ளே யிருந்து கூட்டிக் கொண்டு வந்தார். அவனைப் பார்த் ததும் இருவரும் ஆனந்தமாகத் தழுவிக் கொண் டார்கள். அருணகிரியும் ராதிகாவும் அவனைப் பொய்க் கோபமகாகக் கோபித்தார்கள்.

காப்பி பலகாரம் பரிமாறினார்கள். கண்ணனுடன் பேசிக்கொண்டே இருவரும் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிந்ததும் கண்ணனை "வா போகலாம்" என்று கூப்பிட்டார்கள். அவன் அந்த இடத்தை விட்டு வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தான். அந்த வீட்டில் இருக்கும் "அம்மா"வை விட்டு விட்டு நான் வரவே மாட்டேன். நீயும் இங்கே இரு என்று அடம் பண்ணினான். அருணகிரியின் கையைப் பிடித்து ஒவ்வொரு இடமாகக் கூட்டிப் போய் "பாத்தியா ஐஸ்ரூம், பாத்தியா ரேடியோ, பாத்தியா சாமி ரூம்" என்று ஒவ்வொரு இடமாகக் காட்டி கடைசியாக மாடி அறையைத் திறந்து "பாத்தியா எங்கம்மா" என்றான். "மோகினி" வேஷத்தில் அப்ஸரஸ்போல காட்சி அளித்த கலை அரசியைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் அப்படியே திகைத்து நின்றான். அருணகிரி மூச்சடைத்து நிற்க கலைஅரசி உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டதும், அருணகிரி வெட்கப்பட்டு ஒருபெண்ணைத் தான் உற்றுப் பார்த்தது எவ்வளவு தவறு என்று உணர்ந்து, "அம்மா, மன்னிக்கவேணும். என் வாழ்வில் ஒரு பெண் தெய்வத்தின் அன்பு எனக்குக் கிடைத்தது. என் உயிர் மேல் தன் உயிரையே வைத்து, எனக்காக உயிர்விட்ட ஒரு உத்தமியின் ஞாபகம் வந்தது. அந்தப் பெண் தெய்வத்தைப் போலவே தாங்கள் இருக்கிறீர்கள். அவள் என்மீது அன்பைச் சொரிந்தாள். பண்பைப் பரப்பினாள். தியாகத்தின் திருவுருவானாள். எனக்காக தன் உயிரையே ஈந்தாள். என் கண் முன்னாலேயே போலீசார் அவளைச்சுட்டுக் கொன்றார்கள். பள்ளத்தில் விழுந்தவளைக் கண்ணால் கூடப் பார்க்க முடிய

வில்லை. போலீசார் பிடித்து இழுத்துப் போய் விட்டார்கள். "ஆகா! அந்தப் பெண் போன்ற உத்தமி இந்த உலகத்தில் இதுவரை பிறக்கவில்லை. இனி மேல் பிறக்கவும் போவதில்லை. சீதாதேவியின் சரிதத்தைக் காவியமாகப் பாடிய கம்பனும், கண்ணகியின் கற்பைப் பாடிய இளங்கோவும் இருந்தால் ஆயிரம்கோடி சீதாதேவி, கண்ணகிகள் ஒன்று சேர்ந்த என் சிட்டுவின் தியாகத்தை ஒரு காவியமாகப் பாடி அதற்குத்தான் முதலிடம் கொடுப்பார்கள். நான் என்ன செய்வேன்? என் உள்ளம் சுக்கு நூறுகி விட்டது. தங்களைப் பார்த்ததும் அவள் நினைப்பு வந்தது. அதனுல்தான் அப்படிப் பார்த்து விட்டேன். மன்னியுங்கள்" என்றுன் கண் கலங்க.

கலைஅரசி தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு "உருவ ஒற்றுமை உலகத்தில் சகஜம். தங்களைப் போன்ற உத்தம தியாகியுடன் வாழ அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை, வணக்கம். போய் வாருங்கள்" என்று சொல்லி வெளியே அனுப்பி விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டாள். அருணகிரி கண்ணனுடன் கீழே இறக்கிச் சென்றுன்.

கலைஅரசி கதவைச் சாத்திளுளே ஒழிய தன் இதயக் கதவைச் சாத்த முடியாமல் தவித்தாள். அதிக துக்கம் வந்தால் மனிதர்களின் பாஷை "ஓ" வென்று அழுவதுதானே! அதைச் செய்து கொண்டிருந்தாள் கலைஅரசி.

மாடியிலிருந்து இறங்கி வந்த அருணகிரி ராதிகாவிடம் வந்து "கண்ணன் இங்கேயே இருக்கட்டும். நான் போய் என் நண்பர்கள் சிலரைச் சந்தித்து, கண்ணன் பெற்றோர்களைப் பற்றி விசாரித்து வருகிறேன்" என்றுன். தானும் தன்

சிநேகிதிகள் சிலர் மேரிராணிக் கல்லூரியில் இருப்பவர்களைச் சந்தித்து விட்டு "வருவதாகவும் எப்படியும் கண்ணனின் அம்மாவைக் கண்டு பிடிக்கலாம். ஒரு வேளை முடியாவிட்டால் போலீசில் ஒப்படைத்து விட வேண்டியதுதான்" என்று ராதிகாவும் சொன்னாள்.

இருவரும் வெளியில் புறப்பட்டார்கள். கண்ணன் "போலீஸ்" என்றதும் பயந்துபோய் ஹாலில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டான். அருணகிரியும் ராதிகாவும் வெளியில் போனதைப் பார்த்த கலைஅரசி வெகு வேகமாக மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். காமாட்சி அம்மாளிடம் "ஒ" வென்று, கதறி அழுதாள். "அம்மா, இப்போது வந்து போனாரே, அவர் தானம்மா என்னைத் தொட்டுத் தாலி கட்டிய புஷருன். ஐயோ! அவர் செத்துப் போயிட்டாருன்னு இந்தப் பாவிக்கு எப்படித் தோனிச்சம்மா? அவரு வேறே கல்யாணம் பன்னிக் கிட்டாரே! நான் சுடுபட்டு செத்துப் போயிட்டேன்னு அவர் நெனைச்சுக் கிட்டிருக்காரம்மா. இந்தக் கண்ணன் அவரு குழந்தைதானம்மா. இப்ப நான் என்ன செய்வேன்?" என்று அழுது புலம்பியதும் காமாட்சி அம்மாளும் கலங்கிப் போனாள். மடமட வென்று தன் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்த ரகசியத்தைச் சொல்லத் துவங்கினாள்.

"சிட்டு! உன் புருஷன் உயிரோடிருக்கிறானென்று எங்களுக்கு முன்னமே தெரியும். உனக்குப் பிறந்த குழந்தையும் உயிரோடுதான் இருக்கிறது. உன் அங்கம்மா பாட்டியிடம் வளர்ந்து வருகிறது. நாங்க வேணுமின்னுதான் மறைச்சு வச்சோம். காரணம்? அருணகிரி ஜெயில்லே இருந்து வந்ததும் குழந்தையும் கையுமா ஒன்னைப்பாத்தா அவன் ஏற்றுக்கமாட்டானே என்னவோன்னு பயம். நாங்க

முதல்லே அவனைச் சந்திச்சு, அவன் மனசறிஞ்சு, பிறகு ஒன்கிட்டே சொல்லிக்கலாமின்னு இருந்தோம். இப்ப என்னென்ன, பிள்ளையார் பிடிக்க குரங்காப் போயிடிச்சி விஷயம்." என்று அழுமாட்டாத குறையாகக் காமாட்சி சொன்னாள்.

வெளியே சென்றிருந்த ராதிகா தன் பெட்டியிலிருந்து ஏதோ சாமான் எடுக்க வந்தவள், இவர்கள் சம்பாஷணையை முழுக்கக் கேட்டு விட்டு உள்ளே நுழைந்தாள். கலைஅரசி ராதிகாவைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

ராதிகா அவளை அன்புடன் தழுவி காமாட்சியைப் பார்த்து "உங்க பேரு காமாட்சி தானே" என்றாள்.

"ஆமா" என்றாள் காமாட்சி.

"அங்கம்மா பாட்டி உங்கம்மாதானே?"

"ஆமா, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள் காமாட்சி.

ராதிகா மதுரை ஜங்ஷனிலிருந்து அங்கு வந்த வரை நடந்ததை எல்லாம் சொன்னாள்.

கண்ணன் தன் மகன் என்றதும், தன் கணவர் தனக்கே சொந்தம் என்று தெரிந்ததும் ஆனந்த பரவசமானாள் சிட்டு. "கண்ணா, கண்ணா" என்று தூக்கிக் கொஞ்சினாள். அவர் "எங்கே? எங்கே?" என்று அங்குமிங்கும் பறந்தாள். ஆயிரமாயிரம் முத்தங்கள் குழந்தைக்கு ஈந்தாள். பல்லாயிர முத்தங்கள் அருணகிரிக்குக் கொடுக்கத் துடித்துக் கொண்டிருந்தாள்.

தன் மகளுக்குப் பூரணப் பொலிவு ஏற்பட்டது பற்றி காமாட்சி கரையில்லா களிப்பெய்தினள்.

கண்ணன் போலீஸ் ஞாபகத்திலேயே இருந்தான். தெருவையே நோக்கிக் கொண்டிருந்தான்.

அருணகிரி தன் பால்யநண்பர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமசாமியுடன் ஒரு டாக்ஸியில் வந்து கலைஅரசியின் பங்களாவில் இறங்கினன். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் கண்ணன் தோட்டத்துப்பக்கம் ஓடி மறைந்து, வீட்டை விட்டு வெளியேறி பஞ்சாகப் பறந்து விட்டான்.

ராதிகா அருணகிரியைப் பார்த்து, "ஏன் அதற்குள்........?" என்ருள்.

அருண: ஓ, இன்ஸ்பெக்டர் கூட வருவதைச் சொல்கிருயா? இவர் எனக்குப் பால்ய நண்பர். தற்செயலாகச் சந்தித்தேன். விஷயங்களை விளக்கிச் சொன்னேன். பையனைப் பார்த்து இரண்டொரு கேள்விகள் கேட்கவேண்டுமென்ருர். அழைத்து வந்தேன்.

ராதிகா: இனி அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. கண்ணன் வெகு கெட்டிக்காரன். அம்மாவைத் தேடி அவனே சரியான இடத்திற்கு வந்து விட்டான். அவன் அப்பாவும் யாரென்று தெரிந்து விட்டது. ஆனல் அப்பாவிற்குத்தான் மகனைக் கண்டு கொள்ள முடியவில்லை.

அருண: கண்ணனுடைய அம்மா அப்பா யாரு ராதிகா?

ராதிகா: அதுவா, கண்ணனுடைய அப்பா பிரபல தேசபக்தர் அருணகிரி! அம்மா பிரபல சினிமா

நட்சத்திரம் கலையரசி! அவங்களுக்கு பூர்வா
சிரமத்திலே சிட்டு என்று பெயர் உண்டு."

என்றதும் அருணகிரிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. "இதெல்லாம் உண்மையா ராதிகா?" என்று படபடப்புடன் கேட்டான். "எல்லாம் உண்மைதான்" என்று விஷயம் பூராவும் விளக்கிக் கூறினுள். உடனே அருணகிரி "சிட்டு, சிட்டு" என்று பங்களாவுக்குள் ஓடினுன்.

ஆனந்தக் கண்ணீர் சொரிய சிட்டு அருணகிரியைத் தழுவிக் கொண்டாள். இருவரும் வாய் திறந்து பேசவில்லை. ஈரேழு பதினுலு உலகமும், அண்ட சராசரங்களும் அவர்களுக்குத் துச்சமாகத் தெரிந்தது.

ரோஜா இதழ் விரிந்தது. மல்லிகைப்பூ மலர்ந்தது. மகிழம்பூ மணம் பரப்பிற்று. மாவிலைகள் தோரணமாக ஆடின. வாழை குலை ஆடிற்று, வானம்பாடி கானம் பாடிற்று. வாலை ஆட்டிக் கொண்டு ஒரு அழகிய நாய் காலைச் சுற்றி வந்தது. அந்த பங்களாவிலிருந்த எல்லா ஜீவன்களும் ஆனந்த பாஷ்பம் சொரிந்தன.

இன்ஸ்பெக்டர், ராதிகா, காமாட்சி யாவரும் ஓடிவந்து கண்ணனைக் காணும் என்றதும் அருணகிரியும் சிட்டுவும் வெட்கப்பட்டு விலகினுர்கள்.

"கண்ணனைக் காணும்" என்றதும் இருவரும் திடுக்கிட்டு "கண்ணு கண்ணு" என்று மூலைக்கொருவராகத் தேடினுர்கள். வீட்டில் எங்கும் காணவில்லை. ரோட்டில் எங்கும் காணவில்லை. உடனே இன்ஸ்பெக்டர் எல்லா ஸ்டேஷன்களுக்கும் தகவல் கொடுத்து தேடச் சொன்னுர். போலீஸ் "வேன்"கள் நாலா

புறமும் தேடின. ஆங்காங்கே 'கான்ஸ்டேபிள்'கள் சந்து பொந்துகளில் தேடினார்கள்.

கண்ணன் பதுங்கிப் பதுங்கிச் சென்றான். தெருக்கோடியில் போலீஸ்காரர்கள் இருவர் வரு வதைப் பார்த்து நடுங்கி வேகமாக ஓடி கடைசியில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்கு வந்து விட் டான். அங்கு இரண்டு போலீஸ்காரர் நிற்பதைப் பார்த்து மெதுவாக ராஜகோபுரத்தில் ஏறினான். போலீசார் இதைப் பார்த்து விட்டார்கள். உடனே பையனைப் பிடிக்க ஓடினார்கள். கண்ணன் பயந்து விறுவிறுவென்று கோபுரத்தின் மேலே ஏறி, ஏறி உச்சிக்குப் போய் விட்டான். போலீசார் சத்தம் போட கூட்டம் எக்கச்சக்கமாகச் சேர்ந்து விட்டது. ஒரு சிறுவன் கோபுர உச்சியில் கலசத்தைப் பிடித் துக் கொண்டிருப்பதை கீழே இருந்து பதினாயிரக் கணக்காணவர்கள் பார்த்து, "பையன் என்ன ஆவானோ?" என்று பயந்து "கபாலீஸ்வரா! குழந் தையைக் காப்பாற்று" என்று பிரார்த்தனை செய்-தார்கள். அந்த விஷயம் அருணகிரி முதலா னோர்க்குத் தெரியவே எல்லாரும் கபாலீஸ்வரர் கோவிலுக்கு விரைந்து வந்தார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் வெகு வேகமாக கோபு ரத்தின் மீது ஏறினார். அருணகிரியும், சிட்டுவும் "கண்ணா, கண்ணா" என்று கதறினார்கள்.

இன்ஸ்பெக்டர் மேலே ஏறி வருவதைப் பார்த்த கண்ணன் "இளங்கன்று பயமறியாது" என்பது போல் அதற்கு மேலே ஏறுவதற்கு இடமில்லாமல் போகவே சுற்றுமுற்றும் பார்த்து வெளிப் பக்கமாக இறங்க ஆரம்பித்தான். ஒரு பொம்மையைப் பிடித் துக் கொண்டு பக்கத்திலிருந்த பொம்மை மேல் உட் கார்ந்து கொண்டான்.

கீழே யாவரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கல்லாய்ச் சமைந்து, நிமிர்த்திய தலையைத் தணிக்காமல் உச்சியையே பார்த்துப் பயந்து நின்றார்கள்.

போலீசாரைக் கண்டுதான் கண்ணன் பயப்படுகிறான் என்பதை ஒரு நொடியில் யூகித்துக் கொண்ட அருணகிரி, இன்ஸ்பெக்டரை கீழே வரச்செய்து போலீசாரை எல்லாம் அப்பால் போகச் சொல்லி அருணகிரியே கோபுரத்தின் உச்சி மீது ஏறி "கண்ணா" போலீசாரிடம் உன்னைக் கொடுக்கமாட்டேன்டா. பாரு, போலீசை எல்லாம் விரட்டிப் பிட்டேன். வாடா கண்ணா" என்று கெஞ்சினான்.

அதற்குக் கண்ணன் "சத்தியமா சாமி சாட்சியா சொல்லு. போலீசிலே பிடித்துக் கொடுக்க மாட்டியே" என்றான்.

"சத்தியமா சாமி சாட்சியா ஒன்னை போலிசிலே கொடுக்க மாட்டேன் வாடா" என்றதும் கண்ணன் மெதுவாக அருணகிரி அருகில் வந்தான். கோவில் மணி "டாண் டாண்" என்று அடித்து. "கிணிங் கிணிங்" என்று சிறுமணிகள் ஒலித்தன. தீப ஆராதனை நடைபெற்றது.

கபாலீஸ்வரர் ஜோதிமயமாகக் காட்சியளித்தார். கூடியிருந்த மக்கள் "அரஹர மகாதேவா" என்று மெய்சிலிர்க்கக் கோஷமிட்டார்கள்.

அருணகிரி கண்ணனுடன் பத்திரமாக கீழே வந்து சேர்ந்தான். சிட்டு ஓடிப் போய் "கண்ணா" என்று வாரி அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டாள். கூட்டத்தை விலக்கிக் கொண்டு சிட்டுவும் மற்றவர்களும் வீடுசேர பட்டபாடு பெரும்பாடாகப் போய்விட்டது.

19

பிரிந்தவர் கூடினல் குதூகலத்திற்குக் கேட்கவா வேண்டும். இவ்யத்திற்காக ஏங்கிக் கிடந்த இதயத்திற்கு இன்பம் கொள்ளை கொள்ளையாகக் கிடைத்தால் எப்படி இருக்கும்? இறும்பூதெய்த இதயம் இறுமாப்பால் எக்காளமிடாதா? அதனுல் சுற்றுப்புற சூழல்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாதல்லவா?

சிட்டுவும் அருணகிரியும் அப்படித்தான் தங்களை மறந்திருந்தார்கள். தங்களை இணைத்து வைத்த அன்பு மகன் கண்ணனின் அணைப்பிலே இந்த அகிலத்தையே மறந்திருந்தனர்.

காமாட்சி அம்மாள் தனக்கேற்பட்ட மகிழ்ச்சியில் வயதையும் மறந்து பதினுறு வயது பருவ மங்கை போல் ஓடியாடி வேலைக்காரர்களுக்கு அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று வேலைகளிட்டுக் கொண்டிருந்தாள். காரணம்?

பிரிந்தவர்கள் கூடியதால் அன்று அவர்கள் வீட்டில் ஒரு பெரிய விருந்திற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்தது.

மாலைக் கதிரவன் மேலைவானில் மறைந்து கொண்டிருந்தான். மஞ்சள் வெய்யிலும் மறைந்தது. காரிருளும் இலேசாகக் கவ்வ ஆரம்பித்தது.

கலை அரசியின் அந்தச் சிறிய நவீன மாளிகையும் பலவர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஆயிரங் கோடி நிலவு பிரகாசித்துக் கொண்டிருப்பது போல் ஒளிவிட்டு ஜெக ஜோதியாகத் திகழ்ந்தது.

பசுமையான பருத்திப் புடவை உடுத்தி பதினுறு வயது பருவ மங்கைபோல் காட்சி அளித்தாள் கலை அரசி என்னும் சிட்டு. அவள் முகத்திலே என்றுமில்லாத பூரிப்புக் குடிகொண்டிருந்தது. அதே போல்

தான் அருணகிரியும் புது மாப்பிள்ளை போல் தோன்றி கதர் வேட்டியும், கதர் சட்டையும் போட்டிருந்தான். ஆனால் சிறுவன் கண்ணனே ஆயர்பாடிக் கண்ணனைப் போலவே காட்சியளித்தான். ஒருங்கே தனக்கு அப்பாவும் அம்மாவும் கிடைத்து விட்டதில் அவனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

எல்லோரும் ஹாலில் கூடிக் குலாவிக் கொண்டிருந்தார்கள். என்றாலும் எல்லோரும்; எதையோ எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் அடிக்கடி வாயிலைப் பார்ப்பதிலிருந்து உணர முடிந்தது.

மாடத்தில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் மணி "டாண் டாண்" என எட்டடித்தது. அதே சமயம் ஒரு காரும் வந்து முகப்பு வாயிலில் நின்றது. அதைப் பார்த்ததும் சிட்டுவின் முகம் பட்டுப் போல் மலர்ந்து பளபளத்தது. காமாட்சியம்மாள் களி கொண்டாள்.

அந்தக் காரிலிருந்து நடராஜபாரதி இறங்கி உள்ளே வந்தார். சிட்டு இருக்கையை விட்டெழுந்து விரைந்து சென்று, அவர் கால்களில் பணிந்து வணங்கி நின்றாள். அப்போது இரு துளிக்கண்ணீர் அவர் பாதங்களில் சூடாக விழுந்தது. அது கண்டு அவர் திடுக்கிட்டார்.

"ஏனம்மா அழுகின்றாய்?"

"அழவில்லை சுவாமி. என் இறைவர் என்னை ஏற்றுக் கொள்ள வந்து விட்டார். அதனால் ஏற்பட்ட இன்பக் கண்ணீர்" என்றாள் பெரு மகிழ்ச்சியுடன்.

"இன்றுபோல் என்றும் வாழ்க" என்று ஆசீர்வதித்தவர் "எங்கே அருணகிரி? அந்தத் தியாகியை நான் தரிசிக்க வேண்டும்" என்றவாறு உள்ளே நோக்கினார்.

அதற்குள் நிலைமையை ஓரளவு புரிந்து கொண்ட அருணகிரி, அவர்தான் நடராஜபாரதி என்பதைக் காமாட்சியம்மாள் மூலம் தெரிந்து கொண்டு அங்கே வந்து விட்டான். "வணக்கம் ஐயா. நான் தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று வெகு நேரமாக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

பாரதி அவர்கள் எடுத்தஎடுப்பிலேயே அருணகிரியைக் கேட்டதும் சிட்டுவுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. அவரை வியப்போடு பார்த்தாள்.

"வணக்கம். உங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம். கிடைத்ததற்கு மிக்க மகிழ்ச்சி." பதிலுக்கு வணக்கம் தெரிவித்த அவர் சிட்டுவின் பார்வைக்குப் பதில் அளிக்கும் பொருட்டு "எனக்கு எப்படி எல்லாம் தெரியும் என்று பார்க்கின்றாயா அம்மா? நான் வந்ததுமே ஆசிரமத்தில் முதலில் இந்தச் செய்தியைத் தான் கேள்விப்பட்டேன். கேள்விப்பட்டதும் பெரு மகிழ்ச்சியோடு உடனே அப்படியே புறப்பட்டு வந்து விட்டேன்! ஆமாம்! எங்கே உன் செல்வ மகன் கண்ணன்?"

"இதோ இருக்கேனய்யா. வணக்கம்" என்றான் மகிழ்ச்சியோடு கண்ணன். அவன் அப்படிச் சொல்லியதைக் கேட்டதும் எல்லோரும் வியப்போடு அவனைப் பார்த்தனர்.

"கண்ணு, இது யாருன்னு உனக்குத் தெரியுமாப்பா?" என்று அருணகிரி வியப்போடு கேட்டான்.

"தெரியுமப்பா"

"என்ன?" என்று ஏககாலத்தில் எல்லோரும் ஆச்சரியத்தோடு கேட்டனர்.

"எப்படியப்பா உனக்குத் தெரியும்?" என்று நடராஜபாரதி கேட்டார்.

“ஐயைய! தாத்தாவுக்கு என்னை எப்படிக் கூப்பிடுறதுன்னே தெரியலே. நான் அப்பா இல்லே தாத்தா, கண்ணன்” என்றான்.

“உம். அப்படியா? சரி கண்ணு, நான் தாத்தாங்கிறது உனக்கு எப்படித் தெரியும்?”

“ஓ........அதுவா தாத்தா? மொதல்ல அம்மா ஓடி வந்து உங்க காலிலே விழுந்து வணங்கினாங்க. அப்புறம் அப்பாவும் வந்து வணங்கினாங்க. அப்பாவும் அம்மாவும் வணங்கினதால நீங்க தாத்தாவாத்தான் இருக்கணும்னு முடிவு செஞ்சிட்டேன்” என்றான்.

அவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு பூரித்துப்போன நடராஜபாரதி “கண்ணு” என்று அவனை அப்படியே வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார்.

“உன் மகன் இந்த நாட்டின் எதிர்காலப் பேரறிஞனம்மா!” என்று பூரிப்புடன் சிட்டுவைப் பார்த்துச் சொன்னவர், “உம். புலிக்குப் பிறந்தது எப்படிப் பூனையாக முடியும்?” என்று அருணகிரியைப் பார்த்துச் சிரித்தார்.

“ஐயைய, தாத்தாவுக்கு இன்னும் ஒண்ணுமே தெரியலே. நான் புலிக்குப் பொறக்கலே; பூனையும் இல்லே. நான் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பொறந்த கண்ணன்” என்றான்.

“குறும்புக்காரனடா நீ” என்றவாறு அவன் சின்னக் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினார்.

“சரி சரி, வாங்க. எல்லாரும் சாப்பிட்டுட்டு அப்புறமா பேசிக்கிட்டிருக்கலாம்” என்றாள் காமாட்சி அம்மாள்.

“ஆமாம் முதலில் சாப்பாட்டு வேலே. அப்புறம் தான் எல்லாம்” என்றவாறு பாரதி முன்னே நடந்தார். எல்லோரும் பின் தொடர்ந்தார்கள்.

பந்தி போடப்பட்டது. எல்லோரும் கை-கால் களைக் கழுவிக்கொண்டு பந்தியில் உட்கார்ந்தார்கள். கண்ணனும் "நான் தாத்தா பக்கத்துலதான் உட்காருவேன்" என்று அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

சிட்டுவும், ராதிகாவும் பரிமாறினார்கள். காமாட்சி அம்மாள் எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

விருந்து ஒருவாறு முடிந்தது. எல்லாரும் ஹாலில் வந்து அமர்ந்தனர்.

"போன காரியம் என்னாச்சுங்க?" என்று பேச்சை ஆரம்பித்தாள் சிட்டு.

"எல்லாம் முடிந்த மாதிரிதான். நாம் போயி இருந்து மற்ற காரியங்களை எல்லாம் முடிக்க வேண்டியதுதான்" என்றார் பாரதி.

ஒன்றும் புரியாமல் அருணகிரி விழித்தான். அதைக்கண்ட சிட்டு "நாம எல்லோரும் நம்ம கிராமத்துக்குப் போகப் போகிறோம் அத்தான்" என்றாள்.

"அப்படியா! எப்போ?" என்றான் அருணகிரி.

"சுதந்திர தினத்தன்று" என்றாள் சிட்டு.

"ஆம் சுதந்திர தினத்தை அங்குதான் கொண்டாடவேண்டும்" என்றான் அருணகிரி.

* * *

20

1947 ஆகஸ்டு 15. பாரத நாட்டின் சுதந்திரத் திருநாள். அடிமை இருள் அகன்றது. சுதந்திரச் சூரியன் உதித்தான். "ஆடுவோமே பள்ளு பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே" என்று பாரத மக்கள் சுதந்திர

கீதம் முழக்கினர். சுதந்திரதேவி பிரசன்னமானாள். காந்தி மகாத்மா, பண்டித நேரு, சர்தார் வல்லபாய் படேல், ராஜாஜி, காமராஜ், ம.பொ.சி. முதலிய மாபெரும் தலைவர்கள் சுதந்திர தேவியை வணங்கினர். நாடு, நகரம், பட்டிதொட்டி எல்லாம் சுதந்திர தினவிழா கோலாகலமாக நடந்தது.

தலைவெட்டி முனியப்பன் சன்னதியில் அன்று பிரம்மாண்டமான கூட்டம். தோரணங்களும், வரவேற்பு வளையங்களும் தடபுடலாக இருந்தன. வந்திருந்தோர் அனைவரும் கையில் ஆளுக்கொரு மாலை வைத்திருந்தார்கள். எல்லோரும் தங்கள் தலைவன் அருணகிரியின் வரவை எதிர்நோக்கியிருந்தார்கள். நடராஜபாரதியின் ஏற்பாடுகள் வெகு நேர்த்தியாக இருந்தன. நேரமாக ஆக மக்களின் உணர்ச்சி உச்ச நிலையையடைந்தது. அச்சமயத்தில் அருணகிரியும், சிட்டுவும், கண்ணனும், காமாட்சியும், ராதிகாவும், டாக்டர் நிர்மலாவும், காரிலிருந்து இறங்கினார்கள். மக்கள் வெள்ளம் "அருணகிரி வாழ்க" என்று முழக்கம் செய்தது. கலைஅரசி வருவதை ரகசியமாக வைத்திருந்தார் நடராஜபாரதி. எதிர்பாராமல் கலைஅரசியைக் கண்டதும் மக்களுடைய குதூகலத்தை எட்டிப்பிடிக்க முடியாதபடி ஆயிற்று.

முதலில் அருணகிரியின் பார்வை சர்க்கரையின் சமாதியை நோக்கியது. அதே சமயத்தில் சிட்டுவும் அதை நோக்கினாள். சர்க்கரையை சமாதி செய்த இடத்தில் ஒரு சிறு பந்தல் தெரிந்தது. அங்கு நின்ற ஒருவரிடம் அது என்ன பந்தல்" என்று அருணகிரி கேட்டான். அதுதான் "சர்க்கரைப் பந்தல்" என்று பதில் கூறினான் அந்த தேசபக்தன். உடனே அங்கிருந்த தேசபக்தர்களில் ஒருவர் "தியாகி சர்க்கரையை நீங்களும் சிட்டுவும் இந்த இடத்தில்தான் சாமதி வைத்தீர்கள் என்பதை சில

நாட்களில் போலீசார் கண்டுபிடித்து விட்டார்கள். அது மக்களுக்குத் தெரிந்ததும் அந்தச் சமாதிக்கு ஒரு பெருமை உண்டாக்க சமாதியைச்சுற்றி ஒரு சிறு அழகிய பந்தலைப் போட்டு இந்தப்பக்கம் வருவோர் போவோர் சமாதிக்கு மலர் தூவி வணங்கு வது வழக்கமாக இருந்து வருகிறது. இந்த இடத் திற்கும் “சர்க்கரைப்பந்தல்” என்று பெயர் வழங்கி வருகிறது என்று சொல்லி முடித்தார்.

சிட்டுவும், அருணகிரியும் எல்லோரும் பின் தொடர “சர்க்கரைப்பந்த”லுக்கு சென்றார்கள். சிறிது நேரம் மெய்மறந்து நின்றார்கள். அருணகிரி கண்கலங்க தனக்கு மக்கள் சூட்டிய மாலைகள் அனைத் தையும் சர்க்கரையின் சமாதியில் வைத்து வணங் கினான். சிட்டு கண்ணீரை ஆறாகப் பெருக்கினாள். சமாதியில் மண் எடுத்து கண்ணன் நெற்றியில் திலகம் வைத்தாள். காமாட்சி தன் மகன் சமாதியைப் பார்த்ததும் விம்மி விம்மி அழுதாள். நடராஜபாரதி அவளைச் சமாதானப் படுத்தினார். கூடியிருந்த மக்கள் அனைவரும் மௌனமாக சர்க்கரைக்கு வணக்கம் செலுத்தினர். உணர்ச்சி வசப்பட்டு அருணகிரி பேசினான்—“பெரியோர்களே! தாய்மார் களே! மறைத்து போன மாவீரனுக்கு மக்கள் கட்டியிருக்கும் மனக்கோவில் இந்த “சர்க்கரைப்பந் தல்”! தேசத்தியாகிக்குக் கிடைத்த மக்களின் நினைவுச் சின்னம் “சர்க்கரைப்பந்தல்”! நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டு உயிர்நீத்த எனது அருமைத் தோழன் சர்க்கரைக்கு இப்பகுதி மக்கள் காட்டிய நன்றிக்கு அடையாளம் இந்த “சர்க்கரைப்பந்தல்” என்று கூறி விட்டு கண்கலங்க, “எனது அருமைத் தோழனே! உயிருக்குயிரானவனே! தன் உயிரை ஈந்து என் உயிரைக் காத்தவனே! சர்க்கரை, சதிகார ஆட்சிக்குச் சாவுமணி அடித்தவனே! வீரத்தின்

திரு உருவே! வெற்றியின் உறைவிடமே!! தீரத்தின் துணைவனே! சுதந்திரத்தின் ஜீவனே!! "ஏழ்மையிலும் நேர்மை, கோபத்திலும் பொறுமை, தோல்வியிலும் விடாமுயற்சி, தரித்திரத்திலும் பரோபகாரம், துன் பத்திலும் தைரியம், செல்வத்திலும் எளிமை, பதவி யிலும் பணிவு" என்ற ஆன்றோர் வாக்குக்கு இலக்கண மாகத் திகழ்ந்தவனே! உன்னைப்போல் துணைவன் இனி எனக்கு யார் கிடைப்பார்?" என்றுக் கூறிக் கண்ணீர் உகுத்தான். சிட்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

அருணகிரி மனதைத் திடப்படுத்திக் கொண்டு சொன்னான், "இந்த இடத்தில் ஒரு பெரிய ஆசிரமம் ஸ்தாபிக்க விரும்புகிறேன். அது சர்க்கரையின் நினைவாகத் திகழும். சர்க்கரையின் வீரமும், தியாக மும் நாட்டில் பரவவேண்டும். குழந்தைகள் மனதில் பதியவேண்டும். அதற்கு இந்த ஆசிரமம் பணிபுரி யும்" என்று சொன்னான்.

தேசக்கொடியை ஏற்றி வைக்கும்படி நடராஜ பாரதி அருணகிரியைக் கேட்டுக் கொண்டார். உயர்ந்து வளர்ந்ததோர் கம்பத்தின் உச்சியில் தாயின் மணிக்கொடியைப் பறக்க விட்டான் அருணகிரி. "ஜே ஜே" என்ற முழக்கம் வானத்தை எட்டியது. விண்ணுலகில் இருந்து தாதாபாய் நெளரோஜி, பாலகங்காதர திலகர், வ. உ. சிதரம்பரனார், கோபால கிருஷ்ண கோகலே, கவி சுப்ரமண்ய பாரதியார், லாலா லஜபதிராய், மகரிஷி வ. வே. சு. ஐயர், பகவத்சிங், திருப்பூர் குமரன், நேதாஜி சுபாஷ்சந்திர போஸ், சத்யமூர்த்தி போன்ற தியாகசீலர்கள் பூமாரி பொழிந்தார்கள். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது.

முற்றிற்று.

கதை சொல்லுவது ஒரு தனிக் கலை. பெரும் கதையை விடச் சின்னஞ்சிறிய உபமானக் கதைகள் சொல்லுவதற்குத் தனித்திறமை வேண்டும். அதோடு, நகைச்சுவையைக் கலந்து சொல்லும் ஆற்றல் பெற்றவர் நானறிந்த நண்பர் சின்ன அண்ணாமலை ஒருவர்தான்.

—சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

நண்பர் ஸ்ரீ சின்ன அண்ணாமலை அபூர்வமான பல ஆற்றல்கள் படைத்தவர். பதினாயிரம் இருபதினாயிரம் ஜனங்கள் அடங்கிய சபையில் மணிக்கணக்கில் பிரசங்க மாரி பொழியக் கூடியவர். ஆவேசமாகப் பேசுவார். அழ வைக்கும்படி பேசுவார். சிரித்து வயிறு புண்ணாகும்படியும் பேசுவார். பேசும் ஆற்றலைப்போல் எழுதும் ஆற்றலும் படைத்து இருக்கிறார்.

—பேராசிரியர் "கல்கி"